- இந்த மையமானது சென்னையில் உள்ள சோழிங்கநல்லூரில் உள்ள தமிழ்நாட்டின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மின்னணுக் கழகத்தில் (ELCOT SEZ - Electronics Corporation of Tamil Nadu’s Special Economic Zone) அமைந்துள்ளது.
- இந்த மையத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று இயக்க அனுபவ ஆய்வகம் அமைந்துள்ளதாகும்.




## பாதுகாப்பான வங்கி நடைமுறைகள் குறித்த குறும்படம்

- ❖ பாதுகாப்பான வங்கி நடைமுறைகளின் அவசியத்தை வலியுறுத்தி சென்னை நகரக் காவல்துறையானது ஆக்சிஸ் வங்கியுடன் சேர்ந்து "வாய்க்குப் போடுங்க பூட்டு" என்ற ஒரு குறும்படத்தை வெளியிட்டுள்ளனர்.
- ❖ இணையவழிக் குற்றப் பிரிவில் பதிவாகும் கிட்டத்தட்ட 80 சதவீத வழக்குகள் ஏடிஎம் கடவுச்சொற்கள், ஒரு முறை பயன்படுத்தப்படும் கடவுச்சொல் மற்றும் வங்கிக் கணக்கின் விவரங்கள் ஆகியவற்றைத் திருடுதல் தொடர்பானவையாகும்.

## காவிரி டெல்டா - பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலம்

- ❖ காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக தமிழக முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி அறிவித்துள்ளார்.
- ❖ சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கால்நடைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி பூங்காவைத் திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் இதனை அறிவித்தார்.
- ❖ இந்த அறிவிப்பானது மாநிலத்தின் அரிசிக் களஞ்சியமான காவிரி டெல்டா பகுதியில் எண்ணெய் ஆய்வு குறித்த திட்டங்களை செயல்படுத்துவதைத் தடுப்பதாகும்.
- ❖ காவிரி டெல்டாப் பகுதியானது தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர், அரியலூர், கரூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய தமிழ்நாட்டின் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.



## மீனவர் சமூகம் – பத்தாண்டுக் கணக்கெடுப்பு

- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மீனவர் சமூகம் குறித்த பத்தாண்டுக் கணக்கெடுப்பு தொடங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- தமிழ்நாடு அரசானது மாநிலத்தில் கடலோர மீனவச் சமூகத்தின் சமூக - பொருளாதார நிலை குறித்த இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது ஆய்வையும் மேற்கொள்ள இருக்கின்றது.
- இந்தக் கணக்கெடுப்பானது கடலோர மீனவக் கிராமங்கள், கடல் மீன் பிடித் தொழிலை சார்ந்து வாழும் மக்கள், அவர்களின் தொழில்சார் அமைப்பு ஆகியவற்றை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது நாட்டின் இரண்டாவது நீளமான கடல் எல்லையைக் கொண்டுள்ளது. இது 1076 கிலோ மீட்டர் தொலைவுள்ள கடல் எல்லையைக் கொண்டுள்ளது. இது 13 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.
- நாட்டின் மொத்தக் கடல் மீன் உற்பத்தியில் தமிழ்நாடு மாநிலம் 4வது இடத்தில் உள்ளது.
- மீன்பிடித் தடைக் காலத்தின் போது, தமிழ்நாடு மாநிலமானது ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் 5,000 ரூபாயை நிதியுதவியாக அளிக்கின்றது.

## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2020 - 21

- 2020 - 21 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 அன்று காலை 10 மணிக்கு தமிழ்நாடு சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது.
- தமிழ்நாட்டின் நிதித் துறை அமைச்சரான ஓ. பன்னீர் செல்வம் (துணை முதல்வர்) தமிழ்நாடு சட்ட மன்றத்தில் நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பிக்க இருக்கின்றார்.
- 2021 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் தமிழ்நாடு மாநில சட்டமன்றத் தேர்தல் காரணமாக, அதிமுக அரசின் கடைசி முழு நிதிநிலை அறிக்கை இதுவாகும்.
- தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தின் நிதிநிலை (பட்ஜெட்) கூட்டத் தொடரானது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் மூன்றாவது வாரம் வரை நடைபெற இருக்கின்றது.

## நீதிமன்ற வளாகங்கள் – புனரமைப்பு

- தமிழ்நாடு மாநில அரசானது கோயம்புத்தூரில் உள்ள 157 ஆண்டு காலப் பழமையான குதிரை வண்டி நீதிமன்றக் கட்டிடத்தைப் புனரமைப்பதற்காக ரூ. 19.93 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது.
- சேலம், காஞ்சிபுரம் மற்றும் நாகர்கோவில் ஆகியவற்றில் உள்ள இதர 3 பாரம்பரிய நீதிமன்றக் கட்டிடங்களும் புனரமைக்கப்பட இருக்கின்றன.
- மாநிலப் பொதுப் பணித் துறையானது இந்தப் புனரமைப்புப் பணியினை மேற்கொள்வதற்காக சுண்ணாம்புக் கல் போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி செய்ய இருக்கின்றது.

## காலை உணவுத் திட்டம் - தமிழ்நாடு

- பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டமானது தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- இதுவரை, இந்தத் திட்டமானது பெருநகர சென்னை மாநகராட்சியில் மட்டுமே செயல்பட்டு வந்தது.
- சென்னை முழுவதும் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 32,000 மாணவர்களுக்கு காலை உணவை வழங்குவதற்காக அட்சய பாத்திர அறக்கட்டளையானது மாநில அரசால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- “காலை உணவுத் திட்டமானது” பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அட்சய பாத்திர அறக்கட்டளை ஆகியவற்றால் இணைந்து செயல்படுத்தப் படுகின்றது.

## தமிழகத்தில் 8 வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள்

- பல்வேறு மாவட்டங்களில் 8 வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகளை அமைப்பதற்கான மாநில அரசின் பரிந்துரைகளுக்கு அனுமதி அளிப்பதற்காக மத்திய அரசின் அமைச்சகங்களுக்கிடையேயான குழுவானது பிப்ரவரி 26 அன்று கூட இருக்கின்றது.
- தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர், விழுப்புரம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமையவிருக்கும் இந்த வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகளுக்கான செலவினமானது ரூ. 218 கோடி என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- இவை பிரதான் மந்திரி கிசான் சம்பாடா யோஜனா (Pradhan Mantri Kisan Sampada Yojana - PMKSY) என்ற திட்டத்தின் கீழ் உள்ளடங்கும்.

## தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர்கள்

- சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் - 2020ன் இறுதிப் பட்டியலின் படி, தமிழ்நாட்டில் 6.13 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.
- சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் – 2020 ஆனது இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டது.

- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியின் படி தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர்கள் பின்வருமாறு:
    - 3,10,45,969 பெண்கள்,
    - 3,02,54,172 ஆண்கள் மற்றும்
    - 6,497 திருநர்கள்.
- சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியானது 6,60,317 வாக்காளர்களுடன் தொடர்ந்து அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்களைக் கொண்டுள்ளது.
- 1,73,337 வாக்காளர்களுடன் சென்னை துறைமுக சட்டமன்றத் தொகுதியானது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வாக்காளர்களைக் கொண்டுள்ளது.

## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2020

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதியன்று மூன்று மணி நேரம் பதினைந்து நிமிட உரையுடன் தமிழ்நாடு மாநில துணை முதலமைச்சரும் மாநில நிதி அமைச்சருமான ஓ. பன்னீர்செல்வம் 10வது முறையாக மாநில நிதிநிலை அறிக்கையை சட்டசபையில் தாக்கல் செய்தார்.
- உலகளாவிய மற்றும் தேசியப் பொருளாதாரப் பிரச்சினைகளின் காரணமாக 2019 - 20 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதமானது 7.27% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதமானது 2018 - 19 ஆம் ஆண்டில் 8.17% ஆக இருந்தது.
- தமிழ்நாடு அரசின் நிதிப் பற்றாக்குறையானது 2.84% என மதிப்பிடப் பட்டுள்ளது.

***2020 – 21 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள்***

- தர்மபுரி, அரியலூர், பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், ராமநாதபுரம், தென்காசி ஆகிய மாவட்டங்களில் ரூ. 70 கோடி செலவில் உணவுப் பூங்காக்கள் நிறுவப்பட இருக்கின்றன.
- அதிகாரிகளை விவசாயிகள் எளிதில் தொடர்பு கொள்வதற்காக “உழவர் -அலுவலர் தொடர்புத் திட்டத்தை” விரைவில் தொடங்க அரசு முயற்சித்து வருகின்றது.
- அம்மா உணவகத் திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதற்காகவும் அவற்றை நிர்வகிப்பதற்காகவும் ஒரு ‘இலாப நோக்கற்ற’ சிறப்பு நோக்க முகமை ஒன்றை உருவாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
- அத்திக்கடவு - அவினாசி நீர்ப்பாசனத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதிக்காக ரூ.500 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.
- பக்கிங்ஹாம் கால்வாய், அதன் வடிகால்கள் மற்றும் கூவம் & அடையாரின் அனைத்து வடிகால்கள் ஆகியவற்றின் சுற்றுச்சூழல் புனரமைப்பிற்காக மொத்தம் ரூ. 5,439.76 கோடி நிதியானது செலவு செய்யப்பட உள்ளது.
- பள்ளி கல்வித் துறைக்கு ரூ. 34,181.73 கோடியும் உயர் கல்விக்கு ரூ. 5,052.84 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.
- முத்திரை வரியானது முந்தைய 1 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- மீன்வளத் துறை - மீனவர்களுக்கான தகவல் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக செலுத்தி-வாங்கி சாதனங்கள் அதிக எண்ணிக்கையிலான இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளுடன் பொருத்தப்பட இருக்கின்றன.
- சென்னை - புற வளையச் சாலை மற்றும் சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான தொழில் துறை பெருவழிப் பாதைத் திட்டங்களுக்கு தலா ரூ. 1,000 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
  - வளையச் சாலைத் திட்டமானது எண்ணூர் துறைமுகத்திற்கான அணுகலை வழங்க இருக்கின்றது.
- கீழடியில் உள்ள அகழ் வைப்பகத்திற்காக தமிழ்நாடு அரசானது ரூ. 12.21 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது.
- நெம்மேலியில் தற்பொழுது கட்டமைக்கப்பட்டு வரும் ஒரு உப்புநீக்க ஆலைக்கும் பேரூரில் அமையவிருக்கும் மற்றொரு ஆலைக்கான பணிகளைத் தொடங்குவதற்கும் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கியுள்ளது.



## முதியோருக்கான முன்முயற்சிகள் – தமிழ்நாடு

- தமிழ்நாடு அரசானது முதியவர்களுக்காக பல முன்முயற்சிகளை மேற்கொள்ளும் என்று துணை முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் இந்த முன்முயற்சிகள் நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டஃப்லோ தலைமையிலான ஆய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.
- முன்னதாக, தமிழ்நாடு அரசானது அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு ஆய்வகத்துடன் (Abdul Latif Jameel Poverty Lab - JPAL) இணைந்து, முதியவர்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஒரு ஆய்வைத் தொடங்கியது.
- ஒரு சோதனைத் திட்டமாக, 37 மாவட்டங்களில் (அனைத்து மாவட்டங்களிலும்) இரண்டு வட்டாரங்களில் முதியோர் வள மையங்களைத் தொடங்குவதற்காக நிதிநிலை அறிக்கையில் ரூ. 37 லட்சம் நிதியை ஒதுக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.
- முன்னாள் முதலமைச்சரான ஜெயலலிதா தலைமையிலான தமிழ்நாடு அரசானது நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜி மற்றும் அவரது மனைவி டஃப்லோ ஆகியோரால் நிறுவப்பட்ட J-PAL அமைப்புடன் 2014 ஆம் ஆண்டு நவம்பரில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
    - கொள்கை வகுப்பிற்காக ஆதாரத்தின் அடிப்படையிலான அணுகுமுறையை உருவாக்குதல் மற்றும்
    - வறுமை ஒழிப்புத் திட்டங்களின் தாக்கத்தை அதிகரித்தல்.

## தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டு மசோதா, 2020

- பிப்ரவரி 20 ஆம் தேதியன்று தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி மாநிலச் சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் உள்ள காவிரி டெல்டாப் பகுதியை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கும் மசோதாவை அறிமுகப்படுத்தினார்.
- இந்த மசோதாவானது மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, அடுத்த 24 மணி நேரத்திற்குள் (பிப்ரவரி 21 அன்று) மாநில ஆளுநரான பன்வாரிலால் புரோஹித்தின் ஒப்புதலைப் பெற்றது.
- இந்த மசோதாவானது காவிரி டெல்டாப் பகுதியைப் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக (Protected Special Agriculture Zone - PSAZ) அறிவிக்கின்றது.
- முன்மொழியப்பட்ட PSAZ ஆனது தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களையும் கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள தலா ஐந்து தொகுப்புகளையும் உள்ளடக்கியுள்ளது.
- எவ்வாறாயினும், இந்த மசோதாவானது தனது வரம்பு எல்லைக்குள் இருந்து திருச்சி, அரியலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களை விலக்கியுள்ளது. இந்த மாவட்டங்கள் புவியியல் ரீதியாக காவிரி டெல்டாப் பகுதிக்குள் வருகின்றன.
- இந்த மசோதாவானது எதிர்காலத்தில் அரசாங்கம் இதன் வரம்பிற்குள் எந்தவொரு பகுதியையும் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம் என்று கூறுகின்றது.
- இந்த மசோதாவானது எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் எந்தவொரு புதிய இரசாயன பதப்படுத்தும் நிலையங்களுக்கும் அல்லது ஹைட்ரோ கார்பன் ஆய்வுக்கும் அனுமதி வழங்கத் தடை விதிக்கின்றது.

- இந்த மசோதா பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் துறைமுகம், குழாய்த் தொடர்கள், சாலை, தொலைத்தொடர்பு, மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் பிற பயன்பாடுகள் போன்ற உள்கட்டமைப்பு மேம்பாடுகளை பாதிக்காது.
- துத்தநாகக் கரைப்பான், இரும்புத் தாது செயல்முறை ஆலைகள், தாமிரக் கரைப்பான், அலுமினியக் கரைப்பான், தோல் பதனிடுதல் மற்றும் கப்பல் உடைக்கும் தொழில்கள் ஆகியவற்றை PSAZல் வேளாண் வளர்ச்சியை மிக மோசமாகப் பாதிக்கும் தொழில்களாக அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது.
- விவசாயிகளின் நலனுக்காகப் பண்ணை உற்பத்தி மற்றும் பண்ணை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக விவசாய நடவடிக்கைகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க முதல்வர் தலைமையில் 30 நபர்கள் கொண்ட தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல ஆணையத்தை நிறுவவும் இந்த மசோதா முயலுகின்றது.

***PCPIR***

- நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள 45 கிராமங்களை பெட்ரோலியம், இரசாயனங்கள் மற்றும் பெட்ரோ இரசாயனங்கள் (Petroleum, Chemicals and Petrochemicals Investment Region - PCPIR) ஆகியவற்றின் நீண்ட முதலீட்டுத் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கும் 2017 ஆம் ஆண்டு ஜூலை 19 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பாணையை மாநில அரசு ரத்து செய்துள்ளது.

## பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம்

- தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த தினமான பிப்ரவரி 24 ஆம் தேதியானது 'பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக' கொண்டாடப்பட இருக்கின்றது.
- இது தொடர்பாக, மாநில அரசு பின்வரும் நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.
- அரசு நடத்தும் இல்லங்களில் வசிக்கும் ஆதரவற்றப் பெண்கள் 21 வயதைப் பூர்த்தி செய்யும் போது, மாநில அரசு அவர்களின் பெயரில் ரூ. 2 லட்சத்தை வங்கியில் செலுத்தும்.
- சிறுமிகளின் வளர்ப்பிற்காக வளர்ப்புப் பெற்றோருக்கு வழங்கப்படும் மாதாந்திரத் தொகையை மாநில அரசு ரூ. 2,000லிருந்து, ரூ. 4,000 ஆக உயர்த்தியுள்ளது.
- அரசாங்க இல்லங்களில் இருக்கும் ஆதரவற்ற (கைவிடப்பட்ட) பெண்களுக்கு சமூக நலம், சமூக நீதி, ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுப் பணிகள், சி மற்றும் டி வகைப் பணிகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்து உள்ளது. இந்தப் பணிகள் தமிழ்நாடு பொதுப் பணியாளர் ஆணையத்தின் வரம்பிற்குள் வராது.
- 18 வயதைக் கடந்தவுடன் அரசாங்கத்தால் நடத்தப்படும் இல்லங்களை விட்டு வெளியேறிய பின்னர் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சிறுமிகளுக்கான திட்டமும் அறிவிக்கப் பட்டுள்ளது.
- 'உலேமாக்கள்' (இஸ்லாமிய புனிதச் சட்டம் குறித்த சிறப்பு அறிவு பெற்றவர்கள் என அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் அறிஞர்கள்) புதிய இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு 50% மானியத்தையும் அவர்களின் ஓய்வூதியத்தை ரூ. 3,000 ஆக உயர்த்துவதற்கான ஒரு திட்டத்தையும் அரசு அறிவித்துள்ளது.




## ரேஷன் பொருள்கள் விநியோகம் – தமிழ்நாடு

- குடும்ப அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் தற்பொழுது மாவட்டங்களில் உள்ள எந்தவொரு நியாய விலைக் கடையிலிருந்தும் ரேஷன் பொருள்களை வாங்க முடியும்.
- இந்தத் திட்டமானது தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. மேலும் இந்தத் திட்டமானது நான்கு மாதங்களுக்குள் விரிவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.
- இந்த முன்முயற்சியானது 'ஒரு தேசம், ஒரு ரேஷன் அட்டை' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## தமிழகத்திற்கான நெதர்லாந்தின் கௌரவத் தூதர்

- நெதர்லாந்து இராஜ்ஜியத்தின் தூதரகமானது கோபால் சீனிவாசனை தமிழகத்திற்கான கௌரவத் தூதராக நியமித்துள்ளது.
- நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் நகர்ப்புற திட்டமிடல் ஆகிய துறைகளில் தமிழகத்துடனான ஒத்துழைப்பை விரிவுபடுத்த நெதர்லாந்து முயற்சித்து வருகின்றது.



# தேசியச் செய்திகள்

## போர் நினைவிடம் – நாகாலாந்து

- அசாம் ரைபிள்ஸ் படையானது நாகாலாந்தில் ஒரு ஒருங்கிணைந்த போர் நினைவிடத்தை கட்டமைத்துள்ளது.
- வடகிழக்கு மாநிலத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை எதிர்த்து நடைபெற்ற போரில் கொல்லப்பட்ட ராணுவம் மற்றும் அசாம் ரைபிள்ஸ் படையைச் சேர்ந்த 357 வீரர்களுக்காக இந்த நினைவிடமானது கட்டப்பட்டுள்ளது.
- நாகாலாந்தில் அமைந்துள்ள இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது நினைவிடம் இதுவாகும்.
- நாகாலாந்து மாநிலமானது கோஹிமாவில் புகழ்பெற்ற இரண்டாம் உலகப் போரின் கல்லறையான "வீர் சம்ருதியையும்" கொண்டுள்ளது.

*அஸ்ஸாம் ரைபிள்ஸ்*

- அஸ்ஸாம் ரைபிள்ஸ் படையானது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இது இந்தியாவின் மிகப் பழமையான துணை ராணுவப் படையாகும்.
- 2000 ஆம் ஆண்டு முதல், இந்தப் படையானது இந்திய அரசின் "ஒரு எல்லை ஒரு படை" என்ற கொள்கையின் கீழ் இந்தோ - மியான்மர் எல்லையை பாதுகாத்து வருகின்றது.




## இந்திய மானுடவியல் ஆய்வு நிறுவனம்

- காந்தியின் 150வது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில், இந்திய மானுடவியல் ஆய்வு நிறுவனமானது (Anthropological Survey of India - AnSI) "பயன்பாட்டு மானுடவியல் பற்றிய காந்திய நுண்ணறிவு" என்ற தலைப்புக் கொண்ட தனது பத்திரிகையின் முழு வெளியீட்டையும் காந்திக்கு அர்ப்பணித்துள்ளது.
- AnSI ஆனது மனித மற்றும் கலாச்சார அம்சங்களுக்கான மானுடவியல் ஆய்வுகள் மற்றும் கள தரவு ஆராய்ச்சிகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள இந்திய அரசின் ஒரு தலைமை அமைப்பாகும்.

- இது 1945 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் உருவாக்கப்பட்டது.
- இது கலாச்சார அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.

## காவல்துறை தொடர்பான குடிமக்களை மையமாகக் கொண்ட 2 சேவைகள் – NCRB

- தேசிய குற்ற ஆவணக் காப்பகமானது (National Crime Record Bureau - NCRB) குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு அமைப்பு முறைத் தளங்கள் (Crime and Criminal Tracking Network System - CCTNS) மீதான காவல்துறை தொடர்பான குடிமக்களை மையமாகக் கொண்ட 2 சேவைகளைத் தொடங்கியுள்ளது. அவையாவன:
    - காணாமல் போன நபர்களைத் தேடுதல்,
    - வாகன NOCஐ (தடையில்லாச் சான்று) உருவாக்குதல்.

***காணாமல் போன நபர்களைத் தேடுதல்:***

- குடிமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து அடையாளம் தெரியாத நபர் / அடையாளம் தெரியாத இறந்த உடல்களின் தேசிய தரவுத் தளத்தில் உள்ள தரவுகளின் உதவியுடன் காணாமல் போன உறவினர்களைத் தேட இது அனுமதிக்கின்றது.

***வாகன NOCஐ (தடையில்லாச் சான்று) உருவாக்குதல்:***

- காவல்துறைப் பதிவுகளிலிருந்து சந்தேகத்திற்குரியதா அல்லது உண்மைத் தன்மையுடன் இருக்கிறதா என்று குடிமக்கள் ஒரு வாகனத்தை இரண்டாவது முறையாக வாங்குவதற்கு முன் அதன் நிலையை அறிய குடிமக்களை அனுமதிக்கின்றது.

***CCTNS பற்றி***

- CCTNS என்பது 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.
- இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.

## தானியங்கி அடையாளம் மற்றும் தரவு சேகரிப்பு - இந்திய ரயில்வே

- இந்திய ரயில்வேவானது பாதுகாப்பு மற்றும் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ரேடியோ - அதிர்வெண் அடையாள (Radio-frequency identification - RFID) திட்டத்தை மேற்கொண்டுள்ளது.
- இது ரயில் பெட்டிகளின் தானியங்கி அடையாளம் மற்றும் தரவு சேகரிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய ரயில்வே துறையில் இந்த திட்டத்தைச் செயல்படுததுவதற்காக,
    - ரயில்வே தகவல் அமைப்புகளுக்கான மையம் (CRIS, இந்திய ரயில்வேயின் தகவல் தொழில்நுட்ப பிரிவு),
    - ஜிஎஸ் 1 இந்தியா மற்றும்
    - 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற முன்முயற்சியுடன் இந்தியத் தொழில் துறையும் ஒன்று சேர்ந்துள்ளது.
- ரயில் இருப்பு உணர்வி (Train Presence Detectors - TPDs), ரயில் தண்டவாள நிலை கண்காணிப்பு உபகரணங்கள் போன்ற பல்வேறு உபகரணங்களுடன் RFID உபகரணங்களை ஒருங்கிணைப்பதும் ஒரு முழுமையான தீர்வாக அமையும்.

## இந்தியாவின் எஃகுத் தேவை குறித்த அறிக்கை

- உலக நீடித்த வளர்ச்சிக்கான உச்சி மாநாடானது இந்தியாவின் எஃகுத் தேவை குறித்த தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, நாட்டின் எஃகுத் தேவை தொடர்ந்து அதிகரித்தால், எஃகுத் துறையிலிருந்துப் பெறப்படும் CO2 வெளியேற்றமானது 2050 ஆம் ஆண்டுக்குள் 600 மில்லியன் டன்களை எட்டும்.
- ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனத்தின் (TERI) 'குறைந்த கார்பன் பயன்பாட்டைக் கொண்ட எஃகுத் துறையை நோக்கி' என்ற அறிக்கையின்படி, தற்போது எஃகுத் துறையிலிருந்து பெறப்படும் கார்பன்-டை-ஆக்சைடு வெளியேற்றமானது 242 மில்லியன் டன்கள் ஆகும்.
- TERI அமைப்பானது 2030 ஆம் ஆண்டு முதலாக CO2 உமிழ்வுகளுக்கு அபராதம் விதிக்க பரிந்துரைக்கின்றது.
- தொழில் நிறுவனங்கள் கார்பன் நீக்கத் தொழில்நுட்பங்களைப் பின்பற்ற இந்த அமைப்பு கட்டாயப்படுத்தும்.

## சம்பிரிதி இராணுவப் பயிற்சி

- இந்தியாவும் வங்கதேசமும் கூட்டு இராணுவ பயிற்சியின் 9வது பதிப்பை மேகாலயாவின் உம்ரோய் என்ற இடத்தில் நடத்துகின்றன.
- சம்பிரிதி பயிற்சியானது இந்தியாவிலும் வங்கதேசத்திலும் மாறி மாறி நடத்தப்படும் ஒரு வருடாந்திரப் பயிற்சியாகும்.
- இது 2011 ஆம் ஆண்டில் முதல் முறையாக நடைபெற்றது.

## இந்திய ரயில்வே - பழ ரயில் & சரக்கு ரயில் பெட்டி

- பழங்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக இந்திய ரயில்வேயானது பிரத்தியேகமான ஒரு வாழை கொள்கலன் ரயிலை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஆந்திராவின் ததிபாத்ரி ரயில் நிலையத்திலிருந்து 980 மெட்ரிக் டன் எடை கொண்ட வாழைப் பழங்களை மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகத்திற்கு ஏற்றிச் சென்ற முதல் “பழ ரயில்” இதுவாகும்.
- இந்த வாழைப் பழங்கள் ‘ஹேப்பி பனானாஸ்’ என்ற குறியீட்டுப் பெயரில் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.
- இந்திய ரயில்வேயானது சமீபத்தில் டெல்லி சப்தர்ஜங் ரயில் நிலையத்தில் அதிகத் திறன் கொண்ட சரக்கு ரயில் பெட்டிகளை அறிமுகப் படுத்தியது.
- இந்தப் புதிய சரக்கு ரயில் பெட்டிகள் கபுர்தலா ரயில் பெட்டித் தொழிற்சாலையில் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப் பட்டன.
- லிங்கே ஹாஃப்மேன் புஷ் என்ற வகையைச் சேர்ந்த ரயில் பெட்டிகளில் இது முதலாவது வகையாகும்.



FIRST FRUIT TRAIN

## யுனெஸ்கோவுடனான INCCUன் சந்திப்பு

- ❖ யுனெஸ்கோவுடனான இந்திய தேசிய ஒத்துழைப்பு ஆணையத்தின் (Indian National Commission for Cooperation with UNESCO - INCCU) சந்திப்பானது புது தில்லியில் நடைபெற்றது.
- ❖ தேசிய ஆணையத்தின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டம் இதுவாகும்.
- ❖ இந்தத் தேசிய ஆணையமானது கல்வி, இயற்கை அறிவியல், சமூக அறிவியல், தகவல் தொடர்பு மற்றும் கலாச்சாரம் ஆகிய 5 துணை ஆணையங்களின் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

## CII அமைப்பின் 125வது ஆண்டு விழா

- ❖ இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பானது (Confederation of Indian Industry - CII) தனது 125வது ஆண்டு விழாவை 2020 ஆம் ஆண்டில் கொண்டாடுகின்றது.
- ❖ கருத்துரு: CII@ 125: வணிகம் மற்றும் அதற்கு அப்பால்.
- ❖ CII ஆனது 1895 ஆம் ஆண்டில் பொறியியல் மற்றும் இரும்பு வர்த்தகச் சங்கமாகத் (Engineering and Iron Trades Association - EITA) தனது பயணத்தைத் தொடங்கியது.
- ❖ CIIன் 125வது ஆண்டு தினத்தைக் குறிப்பதற்காக தமிழக அரசானது "பசுமை தொழில்களுக்காகச் செயல்படுவதற்கான நேரடி ஒப்புதல்" (Consent To Operate) என்ற ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது.
- ❖ இந்தத் திட்டமானது எளிதில் தொழில் தொடங்குவதை மேம்படுத்தவும் உதவுகின்றது.
- ❖ இந்தத் திட்டமானது பசுமை வகைத் தொழிற் சாலைகளின் அனுமதிக்கான விதிமுறைகளைத் தளர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு - முன்ஜாமீன்

- ❖ இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வானது முன்ஜாமீனை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வழங்க முடியாது என்றும் விசாரணை முடியும் வரை அதன் வரம்பு (முன்ஜாமீன்) தொடரும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (Code of Criminal Procedure - CrPC) பிரிவு 438ன் நோக்கம் குறித்த தில்லி தலைநகரப் பகுதி அரசு (எதிர்) சுசிலா அகர்வால் என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் குறிப்புரையின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பானது வழங்கப் பட்டுள்ளது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438 (முன்ஜாமீன்) ஆனது ஒருவரைக் கைது செய்யப் படுவதிலிருந்துப் பாதுகாக்கும் வகையில் முன்ஜாமீன் வழங்குவதற்கான வழிகாட்டுதலுடன் தொடர்புடையதாகும்.
- இந்த விதியானது அமர்வு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு மட்டுமே முன்ஜாமீன் வழங்குவதற்கான அதிகாரத்தை அளிக்கின்றது.




## இந்தியாவின் விமானப் பயணத்திற்குத் தடை விதிக்கப்பட்ட நபர்களின் பட்டியல்

- சமீபத்தில் உள்நாட்டு விமான போக்குவரத்துத் துறை அமைச்சகமானது இந்தியாவின் விமானப் பயணத்திற்குத் தடை விதிக்கப்பட்ட நபர்களின் பட்டியலைத் தயாரித்து, நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடைமுறையானது விமானப் பயணத்தின் போது பயணிகள் தவறாக நடந்து கொண்டால் அவர்களின் விமானப் பயணத்திற்குத் தடை விதிக்க வழிவகை செய்கின்றது.
- விமானப் பயணத்திற்குத் தடை விதிக்கப்பட்ட நபர்களின் பட்டியல் என்பது குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் விமானத்தில் பயணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்ட பயணிகளின் பட்டியலைக் குறிப்பிடுகின்றது.
- இண்டிகோ, ஸ்பைஸ்ஜெட், ஏர் இந்தியா மற்றும் கோ ஏர் ஆகிய நான்கு இந்திய விமான நிறுவனங்கள் வளர்ந்து வரும் நகைச்சுவை நடிகரான குணால் கம்ராவை விமானத்தில் பயணிப்பதற்குத் தடை விதித்துள்ளன.
- இவர் இண்டிகோ விமானம் கிளம்பிய பின்பு தொலைக்காட்சி செய்தித் தொகுப்பாளரான அர்னாப் கோஸ்வாமியிடம் கை குலுக்கியதாகக் கூறி இந்த நிறுவனங்கள் அந்த நடவடிக்கையை எடுத்துள்ளன.

## தேசியத் தொழில்நுட்ப ஜவுளித் திட்டம்

- 2020 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ஒரு தேசியத் தொழில்நுட்ப ஜவுளித் திட்டமானது முன்மொழியப்பட்டுள்ளது.
- இது 2020 - 21 முதல் 2023 - 24 வரையிலான நான்கு ஆண்டு காலத்திற்கு ரூ. 1,480 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- தொழில்நுட்ப ஜவுளி என்பது அவற்றின் தொழில்நுட்பப் பண்புகள் மற்றும் செயல்பாட்டுத் தேவைகளுக்காகத் தயாரிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிப்புகள் ஆகும்.
- மருத்துவ ஜவுளி (எ.கா. உட்பொருத்திகள்), புவிசார் ஜவுளி (தடுப்பணைகளின் வலுவூட்டல்), வேளாண் ஜவுளி (பயிர்ப் பாதுகாப்புக்கான ஜவுளி) போன்றவை இதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

## சந்துஷ்த் இணையதளம்

- மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகமானது 'சந்துஷ்த்' என்ற ஒரு இணையதளத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த இணையதளமானது அடிமட்ட அளவில் தொழிலாளர் சட்டங்கள் செயல்படும் விதத்தைக் கண்காணிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த இணையதளமானது தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகள் (வேலை அளிப்பவர்களின்) ஆகியோரின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது EPFO (தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் - Employment Provident Fund Organization) மற்றும் ESIC (அரசுத் தொழிலாளர்கள் காப்பீட்டுக் கழகம் - Employment State Insurance Corporation) ஆகியவற்றினால் வழங்கப்படும் சேவைகளைக் கண்காணிக்கின்றது.
- பொது மக்களின் குறைபாடுகளுக்காக, மையப்படுத்தப்பட்ட பொது மக்கள் குறை தீர்க்கும் மற்றும் கண்காணிப்பு அமைப்பு (Centralized Public Grievance Redressal and Monitoring System - CPGRAMS) இணையதளமானது ஏற்கனவே செயல்பட்டு வருகின்றது.

## தேசியத் தரவு மற்றும் பகுப்பாய்வு தளம்

- நிதி ஆயோக் அமைப்பானது 2021 ஆம் ஆண்டில் தேசியத் தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளத்தை (National Data and Analytics Platform - NDAP) தொடங்கப் போவதாக அறிவித்து உள்ளது.
- NDAP ஆனது வெவ்வேறு பங்குதாரர்கள் பற்றிய தரவுகளை எளிதான வழியில் அணுகுவதற்கான ஒரு இடைமுகமாகச் செயல்பட இருக்கின்றது.
- இது அனைத்து அரசு வலைதளங்களிலிருந்தும் சமீபத்தில் திரட்டப்பட்ட தரவுகளை 'தரப்படுத்தப்பட்ட' வடிவத்தில் வழங்க இருக்கின்றது.

## ‘மட்லா அபியான்’ பயிற்சி

- இந்திய கடற்படையானது மேற்கு வங்காளத்தில் உள்ள கொல்கத்தாவில் ‘மட்லா அபியான்’ என்ற ஒரு கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்துகின்றது.
- இந்தப் பயிற்சியானது மட்லா நதியின் நினைவாக ‘மட்லா அபியான்’ என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தப் பயிற்சியானது சுந்தரவனக் கழிமுகப் பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கடலோரப் பகுதிகளில் வாழும் சமூகங்களுடன் தொடர்பு கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கிராம நியாயாலயங்கள் குறித்த உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்

- இந்திய உச்ச நீதிமன்றமானது நான்கு வார காலத்திற்குள் 'கிராம நியாயாலயங்களை' நிறுவ வேண்டும் என்று மாநிலங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.
- இந்தத் தீர்ப்பானது உச்ச நீதிமன்ற நீதிபதியான என் வி ரமணா தலைமையிலான அமர்வினால் வழங்கப் பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள சில மாநிலங்கள் கிராம நியாயாலயங்களை நிறுவுவதற்கான அறிவிப்புகளை இன்னும் வெளியிடவில்லை என்று இந்த அமர்வு குறிப்பிட்டுள்ளது.
- கிராம நியாயாலயங்கள் என்பவை கிராம நீதிமன்றங்களாகும். இவை இந்தியாவில் உள்ள கிராமப் புறங்களில் நீதித்துறையை விரைவான மற்றும் எளிதான முறையில் அணுகப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- கிராம நியாயாலயங்கள் சட்டம், 2008 ஆனது இந்தியப் பாராளுமன்றத்தால் 2008 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

## 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்

- இந்த நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின் போது 15வது நிதி ஆணையத்தின் (Finance Commission - FC) இடைக்கால அறிக்கையானது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.
- 15வது நிதி ஆணையத்தின் தலைவர் என்.கே.சிங் ஆவார்.
- இந்திய அரசியலமைப்பின் 280வது சரத்தானது நிதி ஆணையம் என்ற பகுதியளவு நீதித்துறை சார்ந்த ஆணையத்தை அமைக்க வழிவகை செய்கின்றது.
- இது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியக் குடியரசுத் தலைவரால் அமைக்கப் படுகின்றது.
- 15வது FC ஆனது 2020-2026 (6 ஆண்டுகள்) ஆகிய ஆண்டுகளுக்கான பரிந்துரைகளை வழங்குகின்றது.

*முக்கியப் பரிந்துரைகள்*

- மக்கள்தொகை செயல்திறன் ஆனது பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒரு புதிய முக்கியமான அளவுருவாகும்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், குறிப்பாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களில் உள்ள நகராட்சிகள், வரிப் பகிர்வில் பெரும்

பங்கைப் பெற உள்ளன.

- மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு
    - மத்திய அரசின் வரிகளில் மாநிலங்களுக்கான பங்கானது 42%லிருந்து 41% ஆகக் குறைக்கப் பரிந்துரைக்கப் படுகின்றது.
- மாநிலங்களிடையே, தமிழ்நாட்டைத் தவிர, மற்ற நான்கு தென் மாநிலங்களும் 2020-21 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைக்கப்பட்ட வரி சதவிகிதத்தில் குறைவான பங்கைப் பெற இருக்கின்றன.
- பாதுகாப்புச் செலவினங்களுக்காக காலாவதியாகாத நிதியை ஏற்படுத்த ஒரு நிபுணர் குழுவை அமைக்க FC ஆனது முயற்சி செய்து வருகின்றது.




## அதிநவீனப் பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் (சாத்தி)

- அதிநவீனப் பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் என்ற திட்டமானது (Sophisticated Analytical & Technical Help Institutes - SATHI) மத்தியப் புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் (DST - Department of Science & Technology) தொடங்கப் பட்டுள்ளது.
- DST ஆனது கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், ஐஐடி தில்லியில் உள்ள தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஏற்கனவே நாட்டில் 3 மையங்களை அமைத்துள்ளது.
- அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் 5 சாத்தி மையங்களை அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.
- இந்த மையங்கள் கல்வி, ஸ்டார்ட் அப் (புதிதாகத் தொழில் தொடங்குதல்), தொழில் துறை மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகங்களுக்கான முக்கிய பகுப்பாய்வுக் கருவிகள் மற்றும் மேம்பட்ட உற்பத்தி வசதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

## உஜ் பல்நோக்குத் திட்டம்

- ஜம்மு காஷ்மீரில் உஜ் பல்நோக்குத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவதற்காக நடைபெற்ற ஒரு கூட்டத்திற்கு மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தலைமை தாங்கினார்.
- இந்தத் திட்டமானது ஜம்மு காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் உஜ் நதியில் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது.
- ராவி ஆற்றின் ஒரு முக்கியத் துணை நதி உஜ் நதியாகும்.
- இந்தத் திட்டமானது சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் (1960) படி, இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட கிழக்கு நதிகளின் (ராவி, சட்லஜ் மற்றும் பியாஸ்) நீரின் பயன்பாட்டை மேம்படுத்த இருக்கின்றது.




## மெய்நிகர் அனுபவ அருங்காட்சியகங்கள்

- குஜராத்தின் வாத் நகரில் தேசிய மெய்நிகர் அனுபவ தள அருங்காட்சியகத்தை அமைக்க மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.
- மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகமானது ஏற்கனவே மூன்று மெய்நிகர் அனுபவ அருங்காட்சியகங்களை உருவாக்கியுள்ளது. அவையாவன:
  - வாரணாசியில் மன் மஹால்.
  - தில்லியின் தேசிய அருங்காட்சியகத்தில் உள்ள அஜந்தா குகைகள்.
  - தில்லியில் ஹுமாயூன் கல்லறை.
- 2016 ஆம் ஆண்டில், நாட்டில் குறைந்தது 50 இடங்களில் மெய்நிகர் அருங்காட்சியகங்களை நிறுவும் பணியானது மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்திடம் வழங்கப் பட்டுள்ளது.

## கடல்சார் பாதுகாப்புக் குறித்த கிழக்கு ஆசிய உச்சி மாநாடு

- கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான நான்காவது கிழக்கு ஆசிய உச்சி மாநாடானது (East Asia Summit - EAS) தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நடைபெற இருக்கின்றது.
- EAS கடல்சார் பாதுகாப்பு மாநாடானது இந்திய அரசினால் 2015 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

- நான்காவது மாநாடானது பின்வரும் அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது. அவையாவன:
    - மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம்.
    - ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்கள்.

## சூரிய ஒளி இடர் குறைப்பு முன்முயற்சி

- உலக வங்கி மற்றும் எரிசக்தித் துறை மேலாண்மை உதவித் திட்டமானது (WB-ESMAP - World Bank– Energy Sector Management Assistance Program) பின்வரும் அமைப்புகளுடன் இணைந்து சூரிய ஒளி இடர் குறைப்பு முன்முயற்சியை (SRMI - Solar Risk Mitigation Initiative) உருவாக்கியுள்ளது.
    - ஏஜென்ஸ் ஃபிராங்காயிஸ் டி டெவலப்மென்ட் (AFD - Agence Française de Développement),
    - சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம் (International Renewable Energy Agency - IRENA) மற்றும்
    - சர்வதேச சூரிய ஒளிக் கூட்டிணைவு (International Solar Alliance - ISA).
- SRMI என்பது தனியார் முதலீடுகளை ஈர்க்கக் கூடிய நீடித்த சூரிய ஒளித் திட்டங்களை உருவாக்குவதில் நாடுகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பொது நிதியியல் மீதான நம்பகத்தன்மையைக் குறைக்க இருக்கின்றது.
- இது சூரிய ஒளி தொடர்பான இடரைத் தணிப்பதற்காக பின்வரும் மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன:
    - நீடித்த சூரிய ஒளி இலக்குகள்,
    - வெளிப்படையானக் கொள்முதல்,
    - சாத்தியமான இடர் குறைப்புப் பாதுகாப்பு.

## தேசிய உற்பத்தித்திறன் ஆணைய ஆய்வு

- மண் வள அட்டைகளின் பயன்பாடானது நாட்டில் உரப் பயன்பாட்டை 10% அளவிற்கு குறைத்துள்ளதாக தேசிய உற்பத்தித் திறன் ஆணையம் தெரிவித்துள்ளது.
- மண் வள அட்டை காரணமாக உற்பத்தித் திறனானது 5 - 6% அளவிற்கு அதிகரித்துள்ளது என்றும் இந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



- இதற்கு முக்கியக் காரணம் மண் அட்டைத் திட்டமாகும்.
- மண் ஊட்டச்சத்துக்கள் குறைந்து வரும் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு 2014 - 15 ஆம் ஆண்டில் மோடி அரசால் மண் ஆரோக்கிய அட்டை திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.

## SFURTI திட்டம்

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சகமானது "பாரம்பரியத் தொழில் துறைகளை மீளுருவாக்கம் செய்வதற்கான நிதியியல் திட்டம்" (SFURTI - Scheme of Fund for Regeneration of Traditional Industries) என்ற ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், காதி, கயிறு மற்றும் கிராமத் தொழிற்துறைக் குழுக்கள் போன்ற பாரம்பரியத் தொழிற்துறைக் குழுக்களை அமைப்பதற்கு நிதியுதவி அளிக்கப்பட இருக்கின்றது.
- இந்தக் குழுக்களின் வளர்ச்சியை அதிகரிப்பதற்காக இந்தத் திட்டமானது முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் MSME ஆல் தொடங்கப்பட்டது.
- பின்வரும் திட்டங்கள் SFURTI உடன் இணைக்கப்பட்டுள்ளன.
  - காதி தொழில் மற்றும் கைவினைஞர்களின் உற்பத்தித் திறன் மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கான திட்டம்.
  - பொருள் மேம்பாடு, வடிவமைப்பு இடையீடு மற்றும் பொதி கட்டுதலுக்கான (PRODIP - Scheme for Product Development, Design Intervention and Packaging) திட்டம்.
  - கிராமப்புறத் தொழிற்துறை சேவை மையத்திற்கான திட்டம் (RISC - Rural Industries Service Center) மற்றும்
  - உருமாற்றும் அலகுகள், அணிவதற்கான திட்டம் போன்ற பிற சிறிய இடையீடுகள்.




## இந்தியாவில் காணாமல் போன பெண்கள் மற்றும் குழந்தைகள் – அறிக்கை

- இந்தியாவில் காணாமல் போன பெண்கள் மற்றும் குழந்தைகள் என்ற ஒரு அறிக்கையானது தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தினால் (National Crime Records Bureau - NCRB) வெளியிடப் பட்டுள்ளது.
- 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான NCRBயினால் தொகுக்கப்பட்ட இந்தியாவில் வருடாந்திரக் குற்றங்கள் (Crime in India - CII) என்ற அறிக்கையிலிருந்து இந்தப் பகுப்பாய்விற்கான தரவானது எடுக்கப்பட்டுள்ளது.

- இந்த அறிக்கையின் படி, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மகாராஷ்டிராவில் அதிக எண்ணிக்கையிலான பெண்கள் காணாமல் போயுள்ளனர். இதற்கு அடுத்து மேற்கு வங்கம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிகையிலான பெண்கள் காணாமல் போயுள்ளனர்.
- காணாமல் போன குழந்தைகளின் எண்ணிக்கையானது மத்தியப் பிரதேச மாநிலத்தில் அதிகமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு அடுத்து மேற்கு வங்கம், தில்லி மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் காணாமல் போயுள்ளனர்.




## யுனெஸ்கோவிடம் இருந்து உலகப் பாரம்பரிய சான்றிதழ் – ஜெய்ப்பூர்

- ராஜஸ்தானின் சிவப்பு நகரமான ஜெய்ப்பூரானது யுனெஸ்கோ அமைப்பிடமிருந்து உலகப் பாரம்பரிய சான்றிதழைப் பெற்றுள்ளது.
- இந்தச் சான்றிதழை வழங்குவதற்காக யுனெஸ்கோ அமைப்பின் பொது இயக்குநரான ஆட்ரி அசோலே இந்தியாவிற்கு வந்துள்ளார்.



- ஜெய்ப்பூர் ஆனது அங்குள்ள அரண்மனைகள், கட்டிடக்கலை, கோட்டைகள் ஆகியவற்றிற்குப் பெயர் பெற்று விளங்குகின்றது.
- இந்த நகரத்தின் கட்டிடக் கலையானது முகலாய, பாரசீக மற்றும் இந்து வடிவமைப்புகளைப் பிரதிபலிக்கின்றது.
- இந்த நகரத்தின் கலாச்சாரக் கலவையைப் பாதுகாப்பதற்காக யுனெஸ்கோவும் ராஜஸ்தான் சுற்றுலாத் துறையும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

## சிறைத் துறை சீர்திருத்தங்கள்

- உச்ச நீதிமன்றக் குழுவானது பல்வேறு சிறைத் துறை சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்றமானது சிறை நிர்வாகம் மற்றும் நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக முன்னாள் நீதிபதியான அமிதவ் ராய் தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழுவை 2018 ஆம் ஆண்டில் அமைத்திருந்தது.
- 'சிறைச் சாலைகள்/அதில் வைக்கப்பட்டுள்ள நபர்கள்' என்பது இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் பட்டியல் IIன் கீழ் உள்ள ஒரு மாநிலக் கூறாகும்.

### *பரிந்துரைகள்*

- ஒவ்வொரு புதிய கைதியும், அவரது குடும்ப உறுப்பினர்களுடன் உரையாட ஒரு நாளைக்கு ஒரு முறை அழைத்துப் பேசுவதற்காக இலவச தொலைபேசி வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.
- நவீன சமையல் வசதிகள், அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக சிற்றுண்டிச் சாலையை ஏற்படுத்த வேண்டும்.
- வழக்கு விசாரணைகளுக்காகக் காணொளியைப் பயன்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு 30 கைதிகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு வழக்கறிஞர் இருக்க வேண்டும்.
- சிறிய வகைக் குற்றங்களைப் பிரத்தியேகமாக கையாளுவதற்காக சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

## மின் ஆளுகை தொடர்பான தேசிய மாநாடு (NCeG) 2020

- மின் ஆளுகை தொடர்பான 23வது தேசிய மாநாடு - 2020 (National Conference on e-Governance - NCeG) ஆனது மும்பையில் நடைபெற்று வருகின்றது.
- இந்த மாநாடானது மகாராஷ்டிர மாநில அரசுடன் இணைந்து நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்க்கும் துறை (Department of Administrative Reforms & Public Grievances - DARPG) மற்றும் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, “இந்தியா 2020: டிஜிட்டல் மாற்றம்” என்பதாகும்.

## தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வு - அறிக்கை

- புதிய தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வறிக்கையின் படி (Periodic Labour Force Survey - PLFS)
    - தொழிலாளர் சக்திப் பங்களிப்பானது 36.9% ஆகவும்
    - 2017-18 ஆம் ஆண்டிற்கான வேலையின்மை விகிதமானது 6.1% ஆகவும் உள்ளது.
- இந்த ஆய்வானது மத்தியப் புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தினால் நடத்தப் பட்டது.

## மருத்துவத் தரவுகள் கசிவு குறித்த உலகளாவிய அறிக்கை

- "க்ரீன்போன் சஸ்டைனபிள் ரெஸைலன்ஸ்" என்ற ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு இணையவழிக் குற்றப் பாதுகாப்பு நிறுவனமானது மருத்துவத் தரவுகள் கசிவு தொடர்பான தனது இரண்டாவது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, 120 மில்லியனுக்கும் அதிகமான இந்திய நோயாளிகளின் மருத்துவ விவரங்கள் கசிந்து இணையத்தில் இலவசமாக கிடைக்கப் பெற்றுள்ளன.
- இதன் முதலாவது அறிக்கை வெளியான பின்னர் அரசாங்கங்களினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், நல்ல, மோசமான மற்றும் மிகவும் மோசமான என்ற மூன்று பிரிவுகளில் இது நாடுகளை வகைப்படுத்துகின்றது.
- இதன் முதலாவது அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு அக்டோபரில் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின் "மிகவும் மோசமான" பிரிவில் அமெரிக்காவிற்கு அடுத்து இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- தரவுகள் கசிவால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பட்டியலில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் இதைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## ஐஎன்எஸ் கரன்ஜ்

- ஐஎன்எஸ் கரன்ஜ் ஆனது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இந்தியக் கடற்படையிடம் வழங்கப்பட இருக்கின்றது.
- ஐஎன்எஸ் கரன்ஜ் ஆனது திட்டம் - 75ஐ என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.



- இது இந்தியக் கடற் படைக்கான ஆறு கல்வாரி வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களின் முதலாவது தொகுப்பின் மூன்றாவது நீர்மூழ்கிக் கப்பலாகும்.
- இந்த நீர்மூழ்கிக் கப்பலானது பிரெஞ்சுக் கடற்படைப் பாதுகாப்பு நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டு, மும்பையில் உள்ள இந்தியக் கப்பல் கட்டும் நிறுவனமான மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

## வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு & நகராட்சி செயல்திறன் குறியீடு

- நகரங்களில் உள்ள குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மதிப்பிடுவதற்காக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர விவகாரத்துறை அமைச்சகமானது இரண்டு புதிய குறியீடுகளை அறிமுகப் படுத்தியுள்ளது. அவை,
  - வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு (Ease of Living Index - EoLI) மற்றும்
  - நகராட்சி செயல்திறன் குறியீடு (Municipal Performance Index - MPI).

***வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு:***

- இது நாட்டில் உள்ள நகரங்களைப் பற்றிய முழுமையான தரவுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களை உருவாக்கும் விதமாக இது அமைந்துள்ளது.

***நகராட்சி செயல்திறன் குறியீடு:***

- ஐந்து ஆக்க உணர்வுகளின் அடிப்படையில் நகராட்சிகளின் செயல்திறனை மதிப்பிடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஐந்து ஆக்க உணர்வுகளில் சேவை, நிதி, திட்டமிடல், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம் ஆகியவை அடங்கும்.

## தகுதி அடிப்படையிலான தேசியக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

- இடை நிலை மற்றும் உயர் நிலை வகுப்புகளில் மாணவ மாணவியரின் இடைநிற்றல் விகிதத்தை குறைப்பதற்குத் "தகுதி அடிப்படையிலான தேசிய கல்வி உதவித் தொகைத் திட்டம்" உதவியுள்ளது என்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் தெரிவித்துள்ளார்.
- இந்தத் திட்டத்தின் நோக்கமானது பொருளாதார ரீதியாக மோசமான நிலையில் உள்ள திறமையான மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதே ஆகும்.
- இந்தத் திட்டமானது 2008 ஆம் ஆண்டில் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஒன்பதாம் வகுப்பு பயிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 12000 வழங்கப் படுகின்றது மற்றும் இந்த உதவித் தொகையின் தொடர்ச்சி / புதுப்பித்தலானது பத்தாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் வரை வழங்கப் படுகின்றது.

## லக்னோ பிரகடனம்

- முதலாவது இந்திய - ஆப்பிரிக்கப் பாதுகாப்பு அமைச்சரின் மாநாட்டில் இந்தியாவும் 50 ஆப்பிரிக்க நாடுகளும் லக்னோ பிரகடனத்தை ஏற்றுக் கொண்டன.
- லக்னோவில் நடந்து வரும் டெஃப்எக்ஸ்போ 2020 இன் ஒரு பகுதியாக இந்த மாநாடு நடைபெற்றது.
- லக்னோ பிரகடனமானது அமைதி மற்றும் பாதுகாப்பு, பயங்கரவாதம், கடல்சார் பாதுகாப்பு போன்றவற்றைப் பற்றியதாகும்.

### *AFINDEX பற்றி*

- லக்னோ பிரகடனமானது ஆப்பிரிக்க-இந்தியக் களப்பணி பயிற்சிகள் (AFINDEX) தொடங்கப் படுவதைப் பாராட்டியதுடன், பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த ஒப்புக் கொண்டுள்ளது.
- முதன்முதலில் AFINDEX ஆனது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றது.

## பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ் சகோதரி நகரங்கள்

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத் துறை அமைச்சகமானது சிறப்பாக செயல்படும் 20 நகரங்களை குறைவான செயல்பாடு கொண்ட 20 நகரங்களுடன் இணைத்து, அவற்றை "சகோதரி நகரங்களாக" அறிவித்துள்ளன.
- இவை பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ் செயல்பட உள்ளன.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பொலிவுறு நகரத் திட்டமானது குடிமக்களுக்கு மேம்பட்ட வசதிகளை அளிக்கின்ற வகையில் ஒரு நகரத்தின் அனைத்து விதமான முன்னேற்றங்களையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் தர வரிசைப்படி, சிறந்த செயல்பாடு கொண்ட 20 நகரங்களில் அகமதாபாத் முதலிடத்தில் உள்ளது.
- இந்த வகையின் கீழ் உள்ள சில சகோதரி நகரங்கள்

| |
|---|
| **வாரணாசி - அமிர்தசரஸ்** |
| **ராஞ்சி – சிம்லா** |
| **புனே – தர்மசாலா** |
| **அகமதாபாத் – சண்டிகர்** |
| **விசாகப்பட்டினம் – டையூ** |
| **சூரத் – சரண்பூர்** |
| **போபால் – அய்சால்** |

## ராமர் கோவில் அறக்கட்டளை

- அயோத்தியில் ராமர் கோவிலைக் கட்டுவதற்காக 15 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தன்னாட்சி அறக்கட்டளை உருவாக்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.
- இந்த அறக்கட்டளையானது "ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த் ஷேத்ரா அறக்கட்டளை" என்று பெயரிடப்பட இருக்கின்றது.
- இந்திய உச்ச நீதிமன்றமானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 09 அன்று வழங்கப்பட்ட தனது தீர்ப்பில் 90 நாட்களுக்குள் ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தது.
- ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த் ஷேத்ரா அறக்கட்டளையானது 15 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இதில் தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் இடம்பெறுவார்.
- அரசின் முன்னாள் தலைமை வழக்குரைஞரும் மூத்த வழக்குரைஞருமான K. பராசரன் இந்த அறக்கட்டளையின் தலைவராகப் பணியாற்ற இருக்கின்றார்.




## யுவ விக்யானி காரியகரம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகமானது மே மாதத்தில் நடைபெற இருக்கும் "யுவ விக்யானி காரியகரம்" என்பதின் 2வது நிகழ்விற்கு விண்ணப்பிப்பதற்காக ஒரு நிகழ்நேர நடைமுறையைத் தொடங்கியுள்ளது.
- யுவிகா என்பது விண்வெளி சார்ந்த நடவடிக்கைகள் குறித்து பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்படும் இரண்டு வார கால பயிற்சித் திட்டமாகும்.

- எட்டாம் வகுப்பு படித்து முடித்த பள்ளி மாணவர்கள் மற்றும் தற்பொழுது 9ம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் (2019-20) இத்திட்டத்திற்குத் தகுதி உள்ளவர்களாவர்.
- இத்திட்டத்திற்கு வெளிநாடு வாழ் இந்திய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

## தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சி – பாதுகாப்புத் துறைக் கண்காட்சி

- தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சியானது லக்னோவில் நடைபெற்று வரும் 2020 ஆம் ஆண்டின் பாதுகாப்புத் துறைக் கண்காட்சியின் போது நடைபெற்றது.
- இந்த நிகழ்ச்சிக்குப் "பந்தன்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் படி, இந்த அமைப்பானது 15 அனுமதி உரிமைகளை 17 தொழில் துறைகளுக்கு மாற்றியுள்ளது.
- இந்த மாற்றப்பட்ட உரிமங்கள் அனைத்தும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் தொடர்புடையதாகும்.
- இந்தத் தொழில்நுட்பங்களின் பரிமாற்றமானது உத்தரப் பிரதேச பாதுகாப்புத் துறைப் பெருவழிப் பாதையின் வளர்ச்சிக்கு பெரிதும் ஊக்கமளிக்கும்.
- லக்னோவில் நடைபெற்று வரும் 2020 ஆம் ஆண்டின் பாதுகாப்புத் துறைக் கண்காட்சியின் 11வது பதிப்பானது இதுவரை நடைபெற்ற அனைத்து பாதுகாப்புத் துறைக் கண்காட்சிகளிலும் மிகப் பெரியதாகும்.

## டிஜிட்டல் பண வழங்கீட்டுக் குறியீடு

- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் டிஜிட்டல் பண வழங்கீட்டுக் குறியீட்டை உருவாக்க இருப்பதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- நாட்டில் பணப் பரிமாற்றங்களின் டிஜிட்டல்மயமாக்கத்தைக் கண்காணிப்பதே இந்தக் குறியீட்டு உருவாக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.
- டிஜிட்டல் பணப் பரிமாற்றங்களை கண்காணிப்பதற்காக, மத்திய வங்கியானது டிஜிட்டல் பண வழங்கீட்டுக் குறியீட்டை வெளியிட இருக்கின்றது.
- இந்தக் குறியீட்டில் வகைப்பாட்டை அறிமுகப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது.
- இந்த வகைப்பாட்டில் கிராமப்புற, நகர்ப்புற மற்றும் நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள பகுதிகள் ஆகியவை உள்ளடங்கும்.

## இடஒதுக்கீடு உரிமைகள் தொடர்பான இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளில் மாநிலங்கள் கட்டாயம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று அவசியமில்லை என்று இந்திய உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்துள்ளது.
- பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடு அளிப்பது அடிப்படை உரிமை இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- அரசியலமைப்பின் 16 (4) மற்றும் 16 (4-A) ஆகிய இரண்டு சரத்துகள் பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோருக்கு ஆதரவாக நியமனம் மற்றும் பதவி உயர்வுகளில் இட ஒதுக்கீடு செய்ய அரசிற்கு அதிகாரம் அளிக்கின்றது.
- நீதிமன்றங்கள் இடஒதுக்கீடு வழங்குமாறு மாநிலங்களுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாது என்றும் இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

***பின்னணி***

- 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் தேதியன்று எடுக்கப்பட்ட உத்தரகாண்ட் அரசின் கொள்கை முடிவு தொடர்பான மனுக்களை விசாரிக்கும் போது உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.
- பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோருக்கு இடஒதுக்கீடு வழங்காமல் மாநிலத்தில் பொதுப் பணிகளில் உள்ள அனைத்து பதவிகளையும் நிரப்ப உத்தரகாண்ட் அரசு அறிவித்தது.

***இந்திரா சவ்ஹானி (எதிர்) இந்திய அரசு மற்றும் எம். நாகராஜ் வழக்கு***

- இந்திய உச்ச நீதிமன்றமானது சரத்து16 (4)ன் கீழ் இடஒதுக்கீடானது ஒருவர் அரசாங்கப் பணியில் சேரும் போது மட்டுமே வழங்க முடியும் என்றும் பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடு வழங்க முடியாது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

## 2020 ஆம் ஆண்டின் அஜயா வாரியர் பயிற்சி

- "அஜயா வாரியர் – 2020" என்ற ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியின் ஐந்தாவது பதிப்பானது ஐக்கிய இராஜ்ஜியத்தின் சாலிஸ்பரி சமவெளியில் நடத்தப்பட இருக்கின்றது.
- அஜயா வாரியர் ஆனது இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே நடத்தப்படும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.
- இது முதல்முறையாக 2013 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- நகர்ப்புற மற்றும் நகர்ப் புறங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளித்து, படைப் பிரிவு அளவிலான கூட்டுப் பயிற்சியை நடத்துவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.
- இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே நடத்தப்படும் பிற பயிற்சிகள் பின்வருமாறு:
    - கொங்கன் பயிற்சி: இது ஒரு வருடாந்திர கடல்சார் இருதரப்புப் பயிற்சியாகும்.
    - இந்திரா தனுஷ் பயிற்சி: இது ஒரு கூட்டு இருதரப்பு விமானப் பயிற்சியாகும்.

## ஐ.நா.வின் புலம்பெயர்ந்த உயிரினங்களின் 13வது COP (பங்காளர்கள் மாநாடு)

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் தேதி முதல் 22 ஆம் தேதி வரை புலம்பெயர்ந்த வன விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தின் (Conservation of Migratory Species of Wild Animals - CMS) 13வது பங்காளர்கள் மாநாடானது (Conference of Parties - COP) இந்தியாவால் குஜராத்தில் உள்ள காந்திநகரில் நடத்தப்பட இருக்கின்றது.
- இந்த மாநாடானது இந்தியாவின் சார்பாக மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகத்தினால் நடத்தப்பட இருக்கின்றது.

- இந்தியாவில் நடத்தப்பட இருக்கும் CMS - COP13ன் கருப்பொருள், "புலம்பெயர்ந்த இனங்கள் புவியில் உள்ள பகுதிகளை இணைக்கின்றன மற்றும் நாங்கள் அவற்றை வரவேற்கின்றோம்" என்பதாகும்.
- CMS - COP13க்கான சின்னம் "கிபி - கானமயில்" என்பதாகும்.
- கான மயிலானது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (International Union for Conservation of Nature - IUCN) சிவப்பு பட்டியலில் "மிகவும் அச்சுறு நிலையில்" உள்ள இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

***BONN ஒப்பந்தம் - இந்தியா***

- புலம்பெயர்ந்த வன விலங்குகளின் பாதுகாப்பு ஆனது BONN ஒப்பந்தம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் கீழ் உள்ள ஒரு சுற்றுச்சூழல் சார்ந்த ஒப்பந்தமாகும்.
- இந்த மாநாட்டை ஒருங்கிணைக்கும் இந்தியாவானது, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றது.
- 1983 ஆம் ஆண்டு முதல் புலம்பெயர்ந்த வன விலங்குகளின் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இந்தியா உறுப்பு நாடாக இருந்து வருகின்றது.
- புலம்பெயர்ந்த கடல் உயிரினங்களைப் பாதுகாக்க இந்திய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.
- பாதுகாப்பு மற்றும் மீட்பு செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்காகக் கடல் பசு, திமிங்கல சுறா, கடல் ஆமை (இரண்டு இனங்கள்) உள்ளிட்ட ஏழு இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## ஆயுதங்களின் இருப்பிடத்தைக் கண்டறியும் உலகின் விலை குறைந்த சாதனம் - பார்த்

- இந்தத் துப்பாக்கிக் குண்டு துளைக்காத தலைக் கவசமானது 'ஆயுதங்களின் இருப்பிடத்தைக் கண்டறியும் தலைக் கவசம்' என்று அழைக்கப்படும் நவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப் பட்டிருகின்றது.
- இந்தச் சாதனத்தின் பெயர் 'பார்த்' ஆகும்.
- இந்திய இராணுவத்தின் இராணுவ பொறியியல் கல்லூரியானது ஒரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து இந்தச் சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- இறக்குமதி செய்யப்பட்டு வரும் இதே வகையைச் சேர்ந்த சாதனங்களை விட இவற்றின் விலை மிகவும் குறைவாகும்.
- இந்தச் சாதனமானது 2020 ஆம் ஆண்டின் பாதுகாப்புத் துறைக் கண்காட்சியின் போது காட்சிப் படுத்தப்பட்டது.
- ஆயுதங்களின் இருப்பிடத்தைக் கண்டறியும் சாதனம் என்பது துப்பாக்கி சுடும் இடம் மற்றும் சென்சார்கள் (உணர்விகள்) போன்ற பிற ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் ஒரு அமைப்பாகும்.




## SC & ST வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் மீதான உச்ச நீதிமன்ற தீர்ப்பு

- பட்டியலிடப்பட்ட வகுப்பினர் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்தச் சட்டம், 2018ன் அரசியலமைப்பு செல்லுபடித் தன்மையை இந்திய உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- இந்தத் திருத்தச் சட்டமானது 2018 ஆம் ஆண்டு மார்ச் 20 அன்று வழங்கப்பட்ட அசல் எஸ்சி மற்றும் எஸ்டி (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்தின் கடுமையான விதிகளை நீர்த்துப் போகச் செய்யும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்தது.
- பின்வருவனவற்றின் அடிப்படையில் 2018 திருத்தச் சட்டத்தை எதிர்த்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவையாவன:
    - சமத்துவத்திற்கான அடிப்படை உரிமையை மீறுதல் (சரத்து 14) மற்றும்
    - தனிப்பட்ட (தனியுரிமை) சுதந்திரம் (சரத்து 21).

***திருத்தச் சட்டம், 2018ன் முக்கிய அம்சங்கள்***

- இது அசல் சட்டத்தில் பிரிவு 18Aஐ சேர்த்துள்ளது.
    - எந்தவொரு நபருக்கும் எதிராக முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வதற்கு முதல்கட்ட விசாரணை தேவையில்லை என்று இது கூறுகின்றது.
- காவல் துறையினர் குற்றவாளியைப் பிடியாணை இல்லாமல் கைது செய்து, நீதிமன்றத்திடமிருந்து அனுமதி பெறாமல் சம்பத்தப்பட்ட நபரிடம் விசாரணையைத் தொடங்கலாம்.
- அதிக அளவு சாதிய வன்முறை நிகழும் பகுதிகளை "வன்கொடுமைக்கு உள்ளாகும்" பகுதிகளாக அறிவிக்க மாநிலங்களுக்கு இது அதிகாரங்களை வழங்குகின்றது.
- இது எஸ்சி / எஸ்டி அல்லாத அரசு ஊழியர்களால் இந்தப் பணிகளை வேண்டுமென்றே புறக்கணித்ததற்கான தண்டனையையும் வழங்குகின்றது.



**Strengthening the law**

- The SC, in *Dr. Subhash Kashinath Mahajan vs State of Maharashtra*, held on March 20, 2018: No absolute bar against grant of anticipatory bail under the anti-atrocities law if no prima facie case is made out or if judicial scrutiny reveals the complaint to be prima facie *mala fide*
- Parliament introduces an amendment in 2018. Inserts Section 18A in the original Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act of 1989. Section 18A re-affirms the original legislative intention that Section 438 CrPC (pre-arrest bail) is not applicable to accused booked under the atrocities law
- Prathvi Raj Chouhan and other petitioners challenge the amendments as arbitrary
- February 10, 2020 judgment in Prathvi Raj Chouhan case: Justices Arun Mishra and Vineet Saran uphold Section 18A. However, the judges add that the High Courts will have an "inherent power" to grant anticipatory bail in cases in which *prima facie* an offence under the 1989 law is not made out
- Justice S. Ravindra Bhat adds a caveat about the use of this "inherent power" by courts. He says it should be used "only sparingly and in very exceptional cases". Otherwise, miscarriage of justice may result. The intention of Parliament to protect SCs and STs will be defeated
- "It is important to keep oneself reminded that while sometimes (perhaps mostly in urban areas) false accusations are made, those are not necessarily reflective of the prevailing and wide spread social prejudices against members of these oppressed classes": Justice Bhat

## 2020 ஆம் ஆண்டின் பிம்ஸ்டெக் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி

- இரண்டாவது பிம்ஸ்டெக் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி – 2020 ஆனது ஒடிசாவின் புவனேஸ்வரில் தொடங்கப் பட்டுள்ளது.
- தேசிய பேரிடர் மீட்புப் படையானது (National Disaster Response Force - NDRF) இந்திய அரசின் சார்பாக பிம்ஸ்டெக் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி - 2020ஐ ஏற்பாடு செய்து வருகின்றது.
- இந்தப் பயிற்சியானது பேரிடர்களினால் சேதமடைந்த பாரம்பரியத் தளங்களை மீட்டெடுப்பதற்கும் வழிவகை செய்கின்றது.
- "பூகம்பம் மற்றும் வெள்ளம் அல்லது புயலினால் கடுமையான சேதத்தைச் சந்திக்கும் ஒரு கலாச்சாரப் பாரம்பரியத் தளம்" என்ற கருப்பொருளின் கீழ் இந்தப் பயிற்சியானது நடைபெறுகின்றது.



- இந்தியா, மியான்மர், வங்கதேசம், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.
- இந்த ஆண்டுப் பயிற்சியில் தாய்லாந்து மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் பங்கேற்கவில்லை.

***BIMSTEC (பிம்ஸ்டெக்)***

- பல் துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation - BIMSTEC) என்பது பல்வேறு நாடுகளைக் கொண்ட ஒரு பிராந்திய அமைப்பு ஆகும்.
- இந்தத் துணைப் பிராந்திய அமைப்பானது 1997 ஆம் ஆண்டில் பாங்காக் பிரகடனத்தின் மூலம் செயல்பாட்டுக்கு வந்தது.
- வங்க தேசம், இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மியான்மர், நேபாளம் மற்றும் பூட்டான் ஆகியவை இந்த அமைப்பின் உறுப்பு நாடுகளாகும்.
- BIMSTECன் நிரந்தரச் செயலகமானது வங்க தேசத்தில் உள்ள டாக்காவில் நிறுவப்பட்டுள்ளது.

**SPICe+**

- மத்தியப் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகமானது, தற்போதுள்ள SPICe என்ற படிவத்தை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக 'SPICe+' என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய வலைதளப் படிவத்தை பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.
- எளிதில் தொழில் தொடங்குதலை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த முயற்சி உள்ளது.
- SPICe+ ஆனது ஒரு ஒருங்கிணைந்த வலைதளப் படிவமாக இருக்கும்.
- SPICe+ ஆனது 10 விதமான சேவைகளைப் பின்வரும் 3 மத்திய அரசு அமைச்சகங்கள் மற்றும் துறைகள் மூலமாக வழங்குகின்றது.
    - மத்தியப் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம்,
    - மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்
    - மத்திய நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறை
    - ஒரு மாநில அரசு (மகாராஷ்டிரா). இவை மூலம் இந்தியாவில் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கான பல நடைமுறைகள், நேரம் மற்றும் செலவு ஆகியவை குறைக்கப் படுகின்றது.
- இது புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள அனைத்துப் புதிய நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

## ஹம்பியைச் சுற்றியுள்ள கட்டுமானத்தை இடித்தல் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- உலகப் பாரம்பரிய தளமான ஹம்பியைச் சுற்றியுள்ள வணிகக் கட்டிடங்களை இடித்தல் தொடர்பான கர்நாடக அரசு அதிகாரிகளின் முடிவை உச்ச நீதிமன்றம் உறுதிப் படுத்தியுள்ளது.

- 1961 ஆம் ஆண்டின் மைசூர் பண்டைய வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்கள் சட்டத்தை மீறுவதாக இந்தக் கட்டுமானங்கள் இருந்தன.
- இந்தப் பாரம்பரிய தளம் அமைந்துள்ள விருப்பபுரா காடி என்ற கிராமம் முழுவதும் 1988 ஆம் ஆண்டு தீர்ப்பில் ஒரு பாதுகாக்கப்பட்ட மண்டலமாக அறிவிக்கப்பட்டது.

***ஹம்பி***

- இது இடைக்கால இந்தியாவின் மிகப்பெரிய பேரரசுகளில் ஒன்றான 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகரப் பேரரசின் தலைநகரமாகக் கருதப்படுகின்றது.
- இது யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உலகப் பாரம்பரிய தளமாகும்.
- ஹம்பியில் உள்ள வித்தலா கோயிலானது விஜயநகர பாணியின் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.
- ராமாயணத்தில் உள்ள 'கிஷ்கிந்தா காண்டத்தில்' ஹம்பியைப் பற்றியக் குறிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.
- இது துங்கபத்திரா நதிக்கு அருகில் அமைந்துள்ளது.
- கி. பி 1500 ஆம் ஆண்டு வாக்கில், ஹம்பி - விஜயநகர அரசானது பெய்ஜிங்கிற்கு அடுத்து உலகின் இரண்டாவது மிகப்பெரிய இடைக்கால நகரமாக, அதே நேரத்தில் இந்தியாவின் பணக்கார அரசாகவும் விளங்கியது.

## வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள்

- சமீபத்திய தரவுகளின்படி, 1.36 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் வெளிநாட்டில் வாழ்கின்றனர்.
- அதிக எண்ணிக்கையிலான வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் வாழ்கின்றனர். அங்கு ஒட்டுமொத்தமாக 34,20,000 இந்தியர்கள் அதாவது வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களில் நான்கில் ஒரு பங்கு அளவிற்கு வாழ்கின்றனர்.



## தேசிய நீர் மாநாடு

- மத்தியப் பிரதேச முதலமைச்சர் கமல்நாத் மத்தியப் பிரதேசத்தின் போபாலில் தேசிய நீர் மாநாட்டைத் துவக்கி வைத்துள்ளார்.
- "நீர் பெறுவதற்கான உரிமைச் சட்டம்" அல்லது "நீர் உரிமைகள் சட்டம்" ஆகியவற்றின் வழிகாட்டுதல்களை இறுதி செய்வதற்காக இந்த மாநாடு நடைபெற்றது.
- நீர் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தை விரைவில் அமல்படுத்த உள்ளதாக மத்தியப் பிரதேச அரசு அறிவித்துள்ளது. இதுபோன்ற ஒரு சட்டத்தைச் செயல்படுத்த இருக்கின்ற நாட்டின் முதலாவது மாநிலமாக இது விளங்கும்.

## மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் மருத்துவ சாதனங்கள்

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல், நாட்டில் விற்கப்படும் அனைத்து மருத்துவச் சாதனங்களும் மருந்துகளாக கருதப்படும். மேலும் அவை 1940 ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படும்.
- இந்த அறிவிப்பை மத்தியச் சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- மருந்துப் பொருட்கள் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- 1940 ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டமானது இந்தியாவில் மருந்துப் பொருட்களின் இறக்குமதி, உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

## முகநூல் வழங்கக் கூடிய டிஜிட்டல் கல்வியறிவுப் பயிற்சி

- உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் மற்றும் பீகார் உள்ளிட்ட 7 மாநிலங்களில் 1 லட்சம் பெண்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவுப் பயிற்சி அளிக்க முகநூல் "வீ திங்க் டிஜிட்டல்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது தேசிய மகளிர் ஆணையம் மற்றும் இணையவழி அமைதி அறக்கட்டளை ஆகியவற்றினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தப் பயிற்சித் திட்டமானது பெண்கள் திறன் மேம்பாடு அடைவதையும், பெண்களுக்கு இணையம் மூலம் பொருளாதார வாய்ப்புகள், கல்வி மற்றும் சமூக இணைப்பிற்கு சமமான அணுகலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முகநூலகத்தின் உலகளாவிய டிஜிட்டல் கல்வியறிவுத் திட்டமான "வி திங்க் டிஜிட்டல்" ஆனது 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற தெற்காசியப் பாதுகாப்பு உச்சி மாநாட்டின் இரண்டாவது பதிப்பின் போது அறிவிக்கப்பட்டது.

## கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை

- கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை கோரும் மனுவை டெல்லி உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
- வாக்களிக்கும் உரிமையானது ஒரு அடிப்படை உரிமை அல்லது பொதுவான சட்ட உரிமை அல்ல. இந்த உரிமையானது சட்டத்தால் மட்டுமே வழங்கப்படுகின்றது.

- ❖ சிறையில் அடைக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரும் தேர்தலில் வாக்களிக்க முடியாது என்று 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 62 (5) கூறுகின்றது .
- ❖ ஐரோப்பா, சுவிட்சர்லாந்து, பின்லாந்து, நார்வே, டென்மார்க், அயர்லாந்து, பால்டிக் நாடுகள் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஏற்கனவே கைதிகள் வாக்களிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

## போதைப்பொருள் கடத்தல் தொடர்பான பிம்ஸ்டெக் மாநாடு

- ❖ புது தில்லியில் போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது தொடர்பான பிம்ஸ்டெக் நாடுகளின் மாநாட்டை இந்தியா முதன்முறையாக நடத்துகின்றது.
- ❖ இந்த மாநாட்டை தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு நடத்துகின்றது.
- ❖ போதைப்பொருள் கடத்தலால் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதில் பங்காற்ற அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் ஒரு வாய்ப்பை வழங்குவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

***தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பற்றி:***

- ❖ இது 1986 ஆம் ஆண்டில் போதை மருந்து மற்றும் மனோவியல் பொருட்கள் சட்டம், 1985இன் கீழ் அமைக்கப்பட்டது.
- ❖ இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு ஒருங்கிணைப்பு நிறுவனம் ஆகும்.

***பிம்ஸ்டெக் பற்றி:***

- ❖ பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்டெக்) என்பது 1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- ❖ இதன் தலைமையகமானது வங்க தேசத்தின் டாக்காவில் உள்ளது.

## ஐ.என்.எஸ் ஜமுனா – நீர்ப்பரப்புக் கணக்கெடுப்பு

- ❖ கூட்டு நீர்ப்பரப்புக் கணக்கெடுப்பை மேற்கொள்ள இந்திய கடற்படைக் கப்பல் (ஐ.என்.எஸ்) ஜமுனா ஆனது இலங்கையின் கடற்கரையில் நிறுத்தப்பட்டுள்ளது.
- ❖ நீர்ப்பரப்புக் கணக்கெடுப்பு என்பது கடற்பயணத்தைப் பாதிக்கும் அம்சங்களின் அளவீடு மற்றும் ஆய்வு பற்றியதாகும்.
- ❖ இது கடல் எண்ணெய் ஆய்வு, அகழ்வாராய்ச்சி, எண்ணெய் துளையிடுதல் மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
- ❖ இந்தக் கணக்கெடுப்பை நடத்துவதற்கான தரங்கள் மற்றும் விவரக்குறிப்புகள் ஆகியவற்றை சர்வதேச நீர்ப்பரப்பு அமைப்பு (International Hydrographic Organization - IHO) வெளியிடுகின்றது.
- ❖ இந்த அமைப்பானது 1921 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ❖ இந்தியாவும் இந்த அமைப்பில் உறுப்பினராக உள்ளது.

***இந்திய கடற்படை நீர்ப்பரப்புத் துறை***

- ❖ இதன் அலுவலகம் டேராடூனில் அமைந்துள்ளது.

- தற்போது 8 இந்திய கடற்படைக் கப்பல்கள் நீர்ப்பரப்பு ஆய்வில் ஈடுபட்டுள்ளன.
- இதில் ஐ.என்.எஸ் நிருபக், ஐ.என்.எஸ் ஜமுனா, ஐ.என்.எஸ் இன்வெஸ்டிகேட்டர், ஐ.என்.எஸ் சட்லெஜ், ஐ.என்.எஸ் சந்தாயக், ஐ.என்.எஸ் தர்ஷக், ஐ.என்.எஸ் சர்வேக்ஷக் ஆகியவை உள்ளன.

## நடமாடும் தேனீ வளர்ப்புப் பயிற்சி வாகனம்

- மத்திய மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சர் நிதின் கட்காரி நடமாடும் தேனீ வளர்ப்புப் பயிற்சி வாகனத்தைத் (Apiary on Wheels) தொடங்கி வைத்துள்ளார்.
- Apiary on Wheels என்பது காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம் (Khadi and Village Industries Commission - KVIC) வடிவமைத்த ஒரு தனித்துவமான கருத்தாகும்.
- நேரடி தேனீ காலனிகளைக் கொண்ட தேனீப் பெட்டிகளை எளிதில் பராமரித்தல் மற்றும் இடம்பெயர்வின் மூலம் தேனீ வளர்ப்பவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முயற்சியானது தேசிய தேன் திட்டத்தின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.

***தேசிய தேன் திட்டம் பற்றி:***

- தேசிய தேன் திட்டமானது 2017 ஆம் ஆண்டில் காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தேனீக்களின் வாழ்விடத்தைப் பாதுகாப்பதன் மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற வேலையற்ற இளைஞர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

***KVIC பற்றி:***

- KVIC ஆனது ஒரு சட்டரீதியிலான அமைப்பாகும்.
- இது 1956 ஆம் ஆண்டு காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- இது மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.



## பாரத் கீ வீர் வலைதளம்

- 'பாரத் கே வீர்' வலைதளத்தை மறுஆய்வு செய்வதற்கான உயர்மட்டக் கூட்டத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமை தாங்கினார்.
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தால் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது நாட்டிற்காக கடமையாற்றிக் கொண்டிருக்கும் போதே தங்களது வாழ்க்கையை தியாகம் செய்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்ய விருப்பம் உள்ள நன்கொடையாளர்களுக்கு உதவும் வகையில் அமைந்த ஒரு தகவல் தொழில்நுட்பத் தளமாகும்.




## காசநோய் குறித்த அறிவிப்புகள்

- அரசுக்குக் கிடைத்துள்ள காசநோய் குறித்த அறிவிப்புகள் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 38% ஆக உயர்ந்துள்ளது.
- இருப்பினும், இதற்கு காசநோய் வழக்குகள் அதிகரித்து வருவதாக பொருளில்லை. மாறாக, அரசாங்கம் அதன் முயற்சிகள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மூலமாக அரசுக்கு அந்த நோய் குறித்து தெரிவிக்க வேண்டிய இடைவெளியை நீக்கி, அதிகமான காசநோய் நோயாளிகள் பயனடையும் வகையில் மாறியுள்ளது.
- தனியார் துறை சுகாதாரம் குறித்த தரவுகள் வழங்குநர்களின் ஒத்துழைப்புடன் மூன்று லட்சத்திற்கும் குறைவான நோய் அறிவிப்புகள் கொண்டிருக்கும் இந்தத் திட்டமானது முன்னர் 'மிஸ்ஸிங் மில்லியன்' என்று குறிப்பிடப்பட்டது.

## கடத்தல் தடுப்பு குறித்த மாதிரிப் பயிற்சி

- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினம் விமான நிலையத்தில் ஐ.என்.எஸ் தேகா என்ற கடற்படை விமானத்தைப் பயன்படுத்தி ஒரு மாதிரிச் சூழ்நிலையை உருவாக்கி கடத்தல் தடுப்பு குறித்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமானது கடத்தல் அச்சுறுத்தல்களின் போது பல்வேறு அமைப்புகளால் கையாளப்படும் திட்டங்கள் மற்றும் நடைமுறைகளைச் சோதித்து அறிவதாகும்.

- விமான நிலையத்தின் அவசர காலத் திட்டத்தின் செயல்திறனையும், கடத்தல் சூழ்நிலையில் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகளையும் சோதிப்பதற்காக தேசிய உள்நாட்டு விமானப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக ஆண்டுதோறும் ஒவ்வொரு இந்திய விமான நிலையத்திலும் மாதிரி பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

## CPGRAMS 7.0

- புது தில்லியில் நடைபெற்ற மின்னணு அலுவலகம் குறித்த தேசியப் பயிற்சிப் பட்டறை இதுவாகும்.
- மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் மையப்படுத்தப்பட்ட பொதுமக்களின் குறை தீர்த்தல் மற்றும் கண்காணிப்பு அமைப்பு (Centralized Public Grievance Redress and Monitoring System - CPGRAMS) சீர்திருத்தங்களின் 7.0 ஆவது பதிப்பை தொடங்கி வைத்துள்ளார்.
- CPGRAMS என்பது "குறைந்தபட்ச அரசாங்கம் - அதிகபட்ச ஆளுகை" என்ற இந்திய அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப அமைந்துள்ளது.




## சா - சாய் கலைப் பணி

- போர்ச்சுகல் நாட்டின் அதிபரான மார்செலோ ரெபேலோ டி சௌசா என்பவர் தேசிய அருங்காட்சியகத்தில் சா - சாய் கலைப் பணி நிறுவலைத் தொடங்கி வைத்தார்.
- தொடங்கி வைக்கப்பட்ட இந்த சா - சாய் கலைப் பணியானது ஒரு தேனீர்ப் பாத்திரக் கலைப் பணியாகும்.
- மாலை 5 மணிக்கு அருந்தப்படும் தேநீரானது போர்ச்சுக்கீசியர்களின் குடும்பப் பாரம்பரியமாகும்.
- போர்ச்சுகல் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான நீண்ட காலத் தொடர்பானது தேநீர் அல்லது சாய் மூலம் வளர்ச்சி பெறுகின்றது.
- இந்த சா - சாய் கலைப் பணியானது இரும்புப் பிடிமானங்களால் ஆனது.



## நாக்பூர் ஆரஞ்சு துபாய்க்கு ஏற்றுமதி

- நாக்பூர் ஆரஞ்சுகளின் முதலாவது தொகுப்பானது (சரக்கு) நவி மும்பையிலிருந்து துபாய்க்கு அனுப்பப் பட்டது.
- இந்த ஆரஞ்சுகள் குளிரூட்டப்பட்டக் கொள்கலன்களில் அனுப்பப் பட்டுள்ளன.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் சுமார் 40 ஹெக்டேர் நிலப் பகுதியில் நாக்பூர் ஆரஞ்சு சாகுபடி செய்யப் படுகின்றது.
- APEDA (வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் - Agricultural and Processed Food Products Export Development Authority) ஆனது விவசாய ஏற்றுமதிக் கொள்கையின் கீழ் நாக்பூர் மாவட்டத்தை ஆரஞ்சுகளுக்கான ஒரு தொகுப்பாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

## இந்தியாவின் முதலாவது எரிசக்தி - சமநிலை நிலையங்கள்

- இந்தியத் தெற்கு மத்திய ரயில்வே மண்டலமானது 13 எரிசக்தி - சமநிலை நிலையங்களைக் கொண்ட இந்தியாவின் முதலாவது மண்டலமாக உருவெடுத்து உள்ளது.
- இந்த எண்ணிக்கையானது இந்திய ரயில்வே அமைப்பு முழுவதும் உள்ள அனைத்து மண்டலங்களுக்கிடையேயும் மிக அதிகமாக உள்ளது.
- எரிசக்தி – சமநிலை இரயில் நிலையங்கள் 100% ஆற்றல் தேவைகளை சூரிய ஒளி மின்னழுத்தத் தகடுகள் மூலம் பூர்த்தி செய்யும் திறன் கொண்டவையாகும். இவை ரயில் நிலையக் கட்டிடங்களில் பொருத்தப் பட்டுள்ளன.

## தேசிய கரிம உணவுத் திருவிழா

- இந்திய அரசானது தேசிய கரிம உணவுத் திருவிழாவை புது தில்லியில் நடத்த உள்ளது.
- இந்தத் திருவிழாவானது “இந்தியாவின் கரிம வளச் சந்தைக்கான சாத்தியக் கூற்றைப் ஊக்கப்படுத்து” என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற இருக்கின்றது.

- 3 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவானது கரிமப் பொருட்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காகவும் கரிமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் துறையில் பெண்கள் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காகவும் முதன்முறையாகக் கொண்டாடப் படுகின்றது.

## பாதுகாப்புத் துறை தொடர்பான 5 உறுப்பினர்கள் கொண்ட குழு

- 15வது நிதி ஆணையமானது பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு நிதியளிப்பதற்கான ஒரு தனிப்பட்ட முறையின் அவசியத்தை ஆராய்வதற்காக ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவானது 15வது நிதி ஆணையத்தின் தலைவர் நந்த் கிஷோர் சிங் என்பவரால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.

## நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சமரசச் சட்டம் -1996 மீதான திருத்தம்

- மத்திய அரசானது நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சமரசச் சட்டம், 1996 என்பதனை நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சமரச (திருத்த) சட்டம், 2015 என்பதன் மூலம் திருத்தியுள்ளது.
- இது நடுவர் செயல்முறையானது சீரான முறையில் நடைபெறுவதையும் செலவு குறைந்ததாகவும் வழக்கை விரைவாக விசாரித்து முடிப்பதையும் நடுவரின் நடுநிலைத் தன்மையை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திருத்தமானது இந்தியாவின் ஒரு சுயாதீன நிறுவன நடுவர் தீர்ப்பாய ஆணையத்தை உருவாக்க வழிவகை செய்கின்றது.
- இது உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதிகள் நியமிக்கப்படுவதற்குப் பதிலாக உச்ச நீதிமன்றம்/உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட "நடுவர் நிறுவனங்களால்" நடுவர்களை நியமிக்க அனுமதிக்கிறது.

## வான் பாதுகாப்புக் கட்டுப்பாட்டகத்தை நிறுவுதல்

- இந்திய விமானப் படை அதிகாரியின் தலைமையில் "வான் பாதுகாப்புக் கட்டுப்பாட்டகம்" (Air Defence Command - ADC) என்று அழைக்கப்படும் முதலாவது ஒருங்கிணைந்த முப்படைக் கட்டுப்பாட்டகத்தை நிறுவ இருப்பதாக இந்திய முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் அறிவித்துள்ளார்.
- ADC ஆனது இராணுவம், விமானப் படை மற்றும் கடற் படையின் வான் பாதுகாப்பு மற்றும் அவற்றிற்குச் சொந்தமான பொருள்களை ஒருங்கிணைத்து, நாட்டிற்கு வான் பாதுகாப்பை வழங்க இருக்கின்றது.
- இவர் கூட்டுத் தீபகற்பக் கட்டுப்பாட்டகம் மற்றும் ஒரு தளவாடக் கட்டுப்பாட்டகம் ஆகியவற்றை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தி வருகின்றார்.

## காசி மகாகல் விரைவு ரயில்

- காசி மகாகல் விரைவு ரயில் எனப் பெயரிடப்பட்ட இந்திய ரயில்வேயின் மூன்றாவது "தனியார்" ரயிலானது விரைவில் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.
- இது வாரணாசி மற்றும் இந்தூர் ஆகியவற்றிற்கு இடையே ரயில்வேயின் பொதுத் துறை நிறுவனமான ஐஆர்சிடிசியினால் வாரத்திற்கு மூன்று முறை இயக்கப்பட இருக்கின்றது.
- இது ஓம்காரேஷ்வர் (இந்தூருக்கு அருகில்), மகாகாலேஷ்வர் (உஜ்ஜைன்) மற்றும் காசி விஸ்வநாத் (வாரணாசி) ஆகிய மூன்று ஜோதிர்லிங்க மையங்களை இணைக்க இருக்கின்றது.




## நடமாடும் வானொலி - அசூர் பழங்குடி

- உள்ளூர் செய்திகளையும் பாடல்களையும் பரப்புவதற்காக அசூர் பழங்குடியினர் நடமாடும் வானொலியைப் பயன்படுத்துகின்றனர். இது அழிந்து வரும் பழங்குடியின மொழியைப் புதுப்பிக்க உதவுகின்றது.
- அசூர் பழங்குடியினர் இந்திய மாநிலமான ஜார்க்கண்டில் வாழும் ஒரு ஆஸ்ட்ரோ ஆசியாடிக் இனக் குழுவினர் ஆவர்.
- இவர்கள் குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுக்களின் (Particularly Vulnerable Tribal Groups - PVTG's) பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- சர்ஹுல், பாகுவா, நவகான் ஆகியவை இந்தப் பழங்குடியினரின் முக்கியமான திருவிழாக்களாகும்.

## SUTRA PIC திட்டம்

- "நாட்டு" (பூர்வீக) மாடுகள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக SUTRA PIC என்ற ஒரு திட்டத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது.
- SUTRA PIC ஆனது "ஆராய்ச்சி வளர்ச்சியின் மூலம் அறிவியல்சார் பயன்பாடு - நாட்டுப் பசுக்களிடமிருந்து பெறப்படும் முக்கியமான பொருள்கள்" (Scientific Utilisation Through

Research Augmentation - Prime Products from Indigenous Cows) என்பதைக் குறிக்கின்றது.

- ❖ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்பாகும்.
- ❖ இந்திய நாட்டு மாடுகளிலிருந்துப் பெறப்பட்ட பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களின் முழுமையான தன்மை குறித்த அறிவியல் ஆராய்ச்சியே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

## இந்தியப் பறவைகளின் நிலை – 2020

- ❖ தன்னளவில் முதல் ஆய்வு அறிக்கையான இந்தியப் பறவைகளின் நிலை – 2020 (State of India's Birds 2020 - SoIB) என்ற ஒரு புதிய அறிவியல்சார் அறிக்கையானது 10 அமைப்புகளால் கூட்டாக வெளியிடப்பட்டுள்ளது.




- ❖ ATREE, பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான அறக்கட்டளை, இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு, இந்திய தேசியப் பல்லுயிர் ஆணையம், உயிரியல் அறிவியல் தேசிய மையம், SACON, வெட்லேண்ட்ஸ் இன்டர்நேஷனல், இந்திய வனவிலங்கு நிறுவனம் மற்றும் இயற்கைக்கான உலகளாவிய நிதியம் ஆகியவை இந்த 10 அமைப்புகளாகும்.

- இது 867 இனங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தத் தரவுகள் பறவைக் கண்காணிப்பாளர்களால் நிகழ்நேரத் தளமான ஈபேர்ட் (e-Bird) என்ற தளத்தில் பதிவேற்றப்பட்ட தரவுகளின் உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டது.
- இந்த அறிக்கை தற்போது குஜராத்தில் உள்ள காந்தி நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புலம்பெயர் வனவிலங்குகளுக்கான பாதுகாப்பு மீதான ஒப்பந்தத்தின் உறுப்பு நாடுகளின் 13வது மாநாட்டின் போது வெளியிடப்பட்டது.

## இரயில் நிலைய வைஃபை திட்டம்

- கூகிள் இந்தியா நிறுவனமானது தனது இரயில் நிலைய வைஃபை திட்டத்தை (கம்பியில்லா தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத் திட்டத்தை) முடிவுக்கு கொண்டு வருவதாக அறிவித்துள்ளது.
- கூகிள், இந்தியன் ரயில்வே மற்றும் ரெயில்டெல் ஆகிய நிறுவனங்களால் இத்திட்டமானது 2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் தொடங்கப்பட்டது.
- இது இந்தியாவின் மக்கள் பயன்பாடு அதிகம் கொண்ட 400 ரயில் நிலையங்களில் அதிவேக மற்றும் பாதுகாப்பான இணைய இணைப்பைக் கொண்டு வர முயன்றது.

## மறைந்த மத்திய அமைச்சர்களின் பெயர் இடப்பட்ட தேசிய நிறுவனங்கள்

- இந்திய அரசு மறைந்த அமைச்சர்களின் நினைவாக தேசிய நிறுவனங்களுக்குப் பெயர் மாற்றம் செய்துள்ளது.
- உடல் நலமின்மை காரணமாகப் பின்வரும் தலைவர்கள் 2019 ஆம் ஆண்டில் காலமானார்கள்.
- அவர்கள் மனோகர் பாரிக்கர், அருண் ஜெட்லி மற்றும் சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோராவர்.
- பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு நிறுவனமானது (Institute of Defence studies and Analyses - IDSA) மனோகர் பாரிக்கர் பாதுகாப்பு ஆய்வு நிறுவனம் என மறுபெயரிடப் பட்டுள்ளது.
- அவரது மிகப்பெரிய பங்களிப்பு இந்திய இராணுவத்தினருக்கான "ஒரே பதவி; ஒரே ஓய்வூதியம்" என்ற திட்டமாகும்.
- புதுதில்லியில் உள்ள பிரவாசி பாரதிய மையம் மற்றும் வெளியுறவு நிறுவனம் முறையே சுஷ்மா ஸ்வராஜ் பவன் மற்றும் சுஷ்மா ஸ்வராஜ் வெளியுறவு சேவை நிறுவனம் என்று மறுபெயரிடப் ட்டுள்ளது.
- தேசிய நிதி மேலாண்மை நிறுவனமானது அருண் ஜெட்லி தேசிய நிதி மேலாண்மை நிறுவனம் என்று மறுபெயரிடப் பட்டுள்ளது.
- மேலும், 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில், தில்லியில் உள்ள ஃபெரோஷா கோட்லா கிரிக்கெட் மைதானமானது அருண் ஜெட்லி விளையாட்டரங்கம் என்று மறுபெயரிடப் பட்டுள்ளது.

## நீலப் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் - இந்தியா & நார்வே

- இந்தியா மற்றும் நார்வே ஆகிய நாடுகள் இணைந்து நீடித்த வளர்ச்சிக்கான நீலப் பொருளாதாரத்தின் செயல்முறை நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன.
- இந்த நடவடிக்கையின் மூன்றாவது கூட்டமானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தில் ஒருங்கிணைந்த பெருங்கடல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சியின் புதிய கூட்டமைப்பையும் இரு நாடுகளும் இணைந்து தொடங்கி உள்ளன.
- நார்வே நாட்டின் 70% பொருளாதாரமானது கடல்சார் தொழில்களைப் பொறுத்தது.

## தில்ஹான் திட்டம்

- எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க இந்திய அரசானது "தில்ஹான் திட்டத்தை" தொடங்க உள்ளது.
- மண் வள அட்டை தினத்தை முன்னிட்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று இந்தியா முழுவதும் மண் வள அட்டை தினம் கொண்டாடப் பட்டது.
- தற்போது அமெரிக்கா, சீனா மற்றும் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா உலகின் நான்காவது பெரிய காய்கறி எண்ணெய் பொருளாதாரம் கொண்ட நாடாக உள்ளது.
- முன்னதாக எண்ணெய் வித்துக்கள் மற்றும் பனை எண்ணெய் பற்றிய தேசிய திட்டமானது மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தால் தொடங்கப் பட்டுள்ளது.

## சிறந்த தூய்மையான இடங்கள்

- சிறந்த தூய்மையான இடங்கள் (Swachh Iconic Places - SIP) குறித்த 3வது வருடாந்திர மறுஆய்வுக் கூட்டமானது சமீபத்தில் ஜார்க்கண்டில் நடத்தப்பட்டது.
- SIP என்பது தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட மத்தியக் குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகத்தின் ஒரு முன்முயற்சியாகும்.
- இது முக்கியமான இடங்களையும் அவற்றின் சுற்றுப்புறங்களையும் தூய்மையின் உயர் தரத்திற்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் அனைத்துப் பார்வையாளர்களும் பயனடைவதோடு, தூய்மை குறித்த செய்தியையும் பெறுகின்றனர்.
- இது நகர்ப்புற வளர்ச்சி, கலாச்சாரம், சுற்றுலா ஆகிய மூன்று மத்திய அமைச்சகங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும் ஒரு கூட்டுத் திட்டமாகும்.

## கங்காரு பாணி தாய்ப் பராமரிப்பு

- கங்காரு பாணி தாய்ப் பராமரிப்பு (Kangaroo Mother Care - KMC) என்பது குழந்தைகளைத் தங்கள் தாய்மார்களுடன் நெருக்கமாகத் தொடர்பு கொள்ள வைக்கும் ஒரு இடையீடு ஆகும். இது பிரத்தியேகமாக குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் ஒரு முறையாகும்.

- இது நிலையான குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு உலகளவில் பரிந்துரைக்கப் படுகின்றது.
- குழந்தை 2.5 கிலோ எடையை அடையும் வரை அல்லது குழந்தைகள் நல்ல உடல்நலத்தைப் பெறும் வரை இதைத் தொடருமாறு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கின்றது.
- KMC ஆனது 3 பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன:
    - நெருக்கமான தொடர்பு,
    - பிரத்தியேகமாகக் குழந்தைக்குத் தாய்ப்பால் வழங்குதல்,
    - குழந்தை – தாய்க்கான உதவி.

## 22வது சட்ட ஆணையம்

- இந்தியாவின் 22வது சட்ட ஆணையத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஆணையமானது மூன்று ஆண்டு காலம் செயல்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- 22வது சட்ட ஆணையமானது முழுநேரத் தலைவரைக் கொண்டிருக்கும்.
- இது நான்கு முழுநேர உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். மேலும் சட்ட விவகாரங்கள் துறை மற்றும் சட்டமன்றத் துறை ஆகியவற்றின் செயலாளர்களும் இந்த ஆணையத்தில் இடம் பெறுவர்.

### *சட்ட ஆணையங்கள்*

- இது ஒரு சட்டரீதியற்ற ஒரு அமைப்பாகும். இது அவ்வப்போது இந்திய அரசால் அமைக்கப் படுகின்றது.
- இது 1955 ஆம் ஆண்டில் முதல் முறையாக அமைக்கப்பட்டது.
- இதன் பின்னர் ஒவ்வொரு 3 வருடங்களுக்கு ஒரு முறை இது அமைக்கப்படுகின்றது.
- இதுவரை, இந்திய சட்ட ஆணையமானது 277 அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.

## இந்தியா தூய்மையான எரிபொருளுக்கு மாற்றம்

- இந்தியா 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் பி.எஸ். -IV தரங்களிலிருந்து பி.எஸ். VI என்ற உமிழ்வுத் தரத்திற்கு மாறுகின்றது.
- இந்தியா பி.எஸ். VI என்ற தரத்திற்கு மாறுகின்ற போது, தூய்மையான மற்றும் சுத்தமான எரிபொருளைப் பயன்படுத்தும் நாடுகளின் கூட்டமைப்பில் இணைய இருக்கின்றது.
- இந்த எரிபொருளானது 10 பிபிஎம் சல்பரை மட்டுமே கொண்டுள்ளது.
- தில்லி மற்றும் அதை ஒட்டிய நகரங்கள் ஏற்கனவே 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பி.எஸ். VIஐ (பாரத் நிலை) ஏற்றுக் கொண்டுள்ளன.

## மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் மாநாடு – 2020

- மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் வருடாந்திர அகில இந்திய மாநாடானது புது தில்லியின் விக்யான் பவனில் நடத்தப் பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் பிரிவு 323 - அன் கீழ் 1985 ஆம் ஆண்டு நிர்வாகத் தீர்ப்பாயங்கள் சட்டத்தினால் மத்திய நிர்வாகத் தீர்ப்பாயமானது நிறுவப் பட்டுள்ளது.
- இந்தத் தீர்ப்பாயமானது ஒரு தலைவரையும் 65 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. அவர்கள் பின்வருமாறு நியமிக்கப் படுகின்றனர்.
    - நீதித் துறையிலிருந்து 33 (தலைவர் உட்பட) நபர்கள் மற்றும் நிர்வாகத் துறையிலிருந்து 33 நபர்கள்.
- இதன் தலைவர் பொதுவாக உயர் நீதிமன்றத்தின் பணியில் இருக்கும் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதியாக இருப்பார்.
- உயர்நீதிமன்றம் தான் பயன்படுத்தும் அதிகார வரம்பு மற்றும் அதிகாரம் ஆகியவை இந்தத் தீர்ப்பாயத்திற்கும் வழங்கப் பட்டுள்ளது.

## மின் - மாசிஹா (E - MASIHA) செயலி

- 2020 ஆம் ஆண்டின் முழு ஹஜ் செயல்முறையையும் 100% டிஜிட்டல்மயமாக்கிய உலகின் முதலாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சகமானது அண்மையில் அறிவித்து உள்ளது.
- இ - மாசிஹா என்பது “வெளிநாட்டிலுள்ள இந்திய யாத்ரீகர்களுக்கான (புனிதப் பயணிகள்) மின் - மருத்துவ உதவி முறையை” குறிக்கின்றது.
- மெக்கா - மெதீனாவில் எந்தவொரு அவசரநிலையையும் சமாளிப்பதற்காக யாத்ரீகர்களின் முழுமையான ஒரு சுகாதாரத் தரவுத்தளத்தை உருவாக்கி, அவற்றைப் பராமரிப்பதற்கான ஒரு ஆன்லைன் (நிகழ்நேர) அமைப்பு இதுவாகும்.

## பெண் ராணுவ அதிகாரிகள் நிரந்தர ஆணையத்திற்கு தகுதியானவர்கள் – இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- சமீபத்தில், ஒரு முக்கிய தீர்ப்பில், இந்திய உச்ச நீதிமன்றமானது ஆண் ராணுவ அதிகாரிகளுக்கு இணையாக பெண் ராணுவ அதிகாரிகளுக்கும் நிரந்தர ஆணையத்தை வழங்க வேண்டும் என்ற 2010 ஆம் ஆண்டின் தில்லி உயர் நீதிமன்ற உத்தரவை உறுதி செய்துள்ளது.
- பெண் ராணுவ அதிகாரிகள் போர் அல்லாத பகுதிகளில் கட்டுப்பாட்டகப் பதவிகளுக்குத் தகுதி உடையவர்களாவர்.
- பெண் அதிகாரிகள் தங்களது ஆண் சகாக்களைப் போன்றே தகுதியின் அடிப்படையில் கர்னல் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிக்கு உயர முடியும்.
- இந்தத் தீர்ப்பானது இந்திய அரசியலமைப்பில் சமத்துவத்திற்கான உரிமையை உறுதி செய்துள்ளது.

***பின்னணி:***

- இராணுவத்தில் பெண் அதிகாரிகளைச் சேர்த்தலானது 1992 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- பெண்கள் சிறப்பு நுழைவுத் திட்டத்தின் (WSES - Women Special Entry Scheme) கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் (துறைகளில்) பெண்கள் ஐந்து ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டனர்.
- 2006 ஆம் ஆண்டில், WSES ஆனது குறுகிய காலப் பணி ஆணையத் திட்டத்தால் (SSC - Short Service Commission) மாற்றப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், பெண்கள் 10 ஆண்டுகள் வரை இராணுவத்தில் நியமிக்கப் பட்டனர். இவர்களுக்கு 14 (10 + 4) ஆண்டுகள் வரை பணி நீட்டிப்பு வழங்க முடியும்.
- எனவே, பெண் அதிகாரிகள் எந்தவொரு கட்டுப்பாட்டக நியமனத்திலும் இருந்து விலக்கி வைக்கப்பட்டனர். மேலும் ஒரு அதிகாரியாக 20 ஆண்டுகள் சேவை செய்த பின்னர் மட்டுமே தொடங்கும் அரசு ஓய்வூதியத்திற்கு இவர்களால் தகுதி பெற முடியவில்லை.

## மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் கீழ் லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர்

- லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய ஒன்றியப் பிரதேசங்கள் மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் (Central Administrative Tribunal - CAT) கீழ் கொண்டு வரப்பட உள்ளன.
- இந்த அறிவிப்பானது புது தில்லியில் நடைபெற்ற இந்தத் தீர்ப்பாயத்தின் வருடாந்திர மாநாட்டில் வெளியிடப் பட்டுள்ளது.
- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்திற்கு பிரத்தியேகமாக ஒரு மத்திய நிர்வாக தீர்ப்பாயம் அமைக்கும் வரை, சண்டிகர் தீர்ப்பாய அமர்வானது ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களுக்கு தீர்ப்பாயமாகச் செயல்பட இருக்கின்றது.

***CATன் கூறுகள்***

- இது பொதுப் பணிகளுக்குத் தேவையான நபர்களைத் தேர்வு செய்தல் (ஆட்சேர்ப்பு) அல்லது அந்த நபர்களின் பணி தொடர்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது.
- CATன் விதிகள் பிரிவு 323 - அல் சேர்க்கப்பட்டுள்ளன.
- CATன் விதிகளானது ஆயுதப் படைகள், உச்ச நீதிமன்ற ஊழியர்கள், துணை ராணுவப் படையைச் சேர்ந்தவர்கள் மற்றும் செயலகங்களின் பணியாளர்கள் ஆகியோருக்குப் பொருந்தாது.

## பிரதமர் மோடியின் வாரணாசிப் பயணம்

- பிரதமர் மோடி ஜங்கம்வாடி மடத்திற்குச் சென்று, 19 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட 'ஸ்ரீ சித்தாந்த சிகாமணி கிரந்த்' என்ற பதிப்பை வெளியிட்டுள்ளார்.
- இவர் 'ஸ்ரீ சித்தாந்த சிகாமணி கிரந்த்' என்ற கைபேசிச் செயலியையும் தொடங்கி உள்ளார்.
- இவர் தீன்தயாள் உபாத்யாயா குறித்த நினைவுச் சின்னத்தைத் தேசத்திற்கு அர்ப்பணித்தார். மேலும் இவர் ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கத்தின் (Rashtriya Swayam sewak Sangh - RSS) சிந்தனையாளரான தீன்தயாள் உபாத்யாயாவின் 63 அடி உயர சிலையையும்

திறந்து வைத்தார்.

- இவர் பின்வரும் திட்டங்கள் உட்பட 36 வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தார். அவையாவன:
  - 430 படுக்கைகள் கொண்ட உயர்தரச் சிகிச்சையளிக்கும் சிறப்பு அரசு மருத்துவமனை மற்றும்
  - பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தில் (Banaras Hindu University - BHU) 74 படுக்கைகள் கொண்ட மனநல மருத்துவமனை.
- இந்த உயர்தர சிகிச்சையளிக்கும் சிறப்பு அரசு மருத்துவமனையானது ஏழு அண்டை மாநிலங்கள் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த சுமார் 200 மில்லியன் மக்களுக்கு சேவை செய்ய இருக்கின்றது.
- காசி மகாகல் விரைவு ரயில் எனப் பெயரிடப்பட்ட இந்தியாவின் மூன்றாவது தனியார் ரயிலையும் இவர் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
- இந்த ரயிலானது வாரணாசி, உஜ்ஜைன் மற்றும் ஓம்காரேஷ்வர் ஆகியவற்றின் மூன்று "ஜோதிர்லிங்க யாத்ரீக மையங்களை" இணைக்க இருக்கின்றது.




## PMFBYன் 4வது தேசிய மாநாடு – உதய்ப்பூர்

- பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனாவின் (Pradhan Mantri Fasal Bima yojana - PMFBY) நான்காவது தேசிய மாநாடானது ராஜஸ்தானின் உதய்ப்பூரில் நடைபெற்றது.
- இந்த மாநாடானது மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டில் 140க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.
- இந்த மாநாட்டில் நபார்டு (தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி), ரிசர்வ் வங்கி, காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## தேசிய நிலத்தடி நீர் மேலாண்மை மேம்பாட்டுத் திட்டம்

- நிலத்தடி நீர் நிறுவனங்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தேசியத் திட்டத்தை ஆதரிப்பதற்காக உலக வங்கியும் இந்திய அரசும் இணைந்து கடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- தேசிய நிலத்தடி நீர் மேலாண்மை மேம்பாட்டுத் திட்டமானது உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இது மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் உலக வங்கியானது நிலத்தடி நீரை நீடித்த முறையில் நிர்வகிப்பதற்காக ரூ. 6,000 கோடியை வழங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப் படுகின்றது.

## ஷியாம பிரசாத் முகர்ஜி கிராம - நகரத் திட்டம் - 4வது ஆண்டுவிழா

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 அன்று ஷியாம பிரசாத் முகர்ஜி கிராம - நகரத் திட்டத்தின் 4வது ஆண்டுவிழாவானது இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டது.
- இது 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 அன்று தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது உள்ளூர் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதோடு, நன்கு திட்டமிடப்பட்ட கிராம - நகரப் பிராந்தியங்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 300 கிராம – நகரத் தொகுப்புகளை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இந்தத் தொகுப்புகளை 3 ஆண்டுகளில் 1000 ஆக நீட்டிக்க வேண்டும் என்று நிதி ஆயோக் முன்மொழிந்துள்ளது.
- கிராமப்புறச் சமூக வாழ்க்கையின் சாரத்தைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.



## ஆஸ்க் திஷா பேசும் கருவி

- இந்திய இரயில்வே உணவு வழங்குதல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆஸ்க் திஷா (ASK DISHA) என்ற பேசும் கருவியை, தனது வாடிக்கையாளர்களுடன் இந்தி மொழியில் உரையாடும் வண்ணம் இயக்கியுள்ளது.
- ஐ.ஆர்.சி.டி.சி ஆனது ஆஸ்க் திஷா (எப்போது வேண்டுமானாலும் உதவி பெறுவதற்கான டிஜிட்டல் இடைமுகம்) பேசும் கருவியை 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இரயில்வே பயணிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிப்பதின் மூலம் அணுகலை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த பேசும் கருவி குரலால் இயக்கக்கூடியது. எதிர்காலத்தில் பிற பிராந்திய மொழிகளிலும் இயங்க வல்லது.

## முதலாவது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டு

- முதலாவது கேலோ இந்தியா (KHELO INDIA) பல்கலைக்கழக விளையாட்டுகள் ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெற உள்ளது.
- இப்போட்டியை காணொளியின் மூலம் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
- 17 பிரிவுகளில் 159 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 3400க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இந்த விளையாட்டில் பங்கேற்க உள்ளனர்.
- இதுவே இம்மாதிரியான போட்டிகளில் முதலாவது வகையாகும்.
- இப்போட்டி மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- கேலோ பள்ளி விளையாட்டுகள் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. அதன் பின்னர் ஆண்டுதோறும் ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் நடத்தப் படுகின்றன.



## வட்டி நிதியுதவித் திருத்தம்

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது சமீபத்தில் வட்டிக் குறைப்பு விகிதங்களை ஆண்டுக்கு 2% முதல் 2.5% வரை திருத்த ஒப்புதல் அளித்துள்ளது.
- இது பால் பதனிடுதல் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (DIDF – Dairy Processing and Infrastructure Development Fund) கீழ் நடத்தப்பட்டுள்ளது.
- DIDF என்பதின் கீழ், 2030 வரை இந்திய அரசாங்கம் நபார்டுக்கு (NABARD) 2.5% வரை வட்டியை வழங்கும்.
- இது கடன் வாங்குவதற்கான தனது சொந்தத் திட்டமுறையை உருவாக்க நபார்டுக்கு உதவ இருக்கின்றது.
- இதனால் பால் தொழிற் சங்கங்களுக்கு குறைந்த செலவில் நிதி வழங்க இயலும்.

### *டி.ஐ.டி.எப். திட்டம் (DIDF)*

- 'DIDF திட்டம் 2017-18'க்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டம் கால்நடை பராமரிப்பு, பால்வள மற்றும் மீன்வளத் துறையால் (DADF – Department of Animal Husbandary, Dairying and Fisheries) செயல்படுத்தப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ், நபார்டு ஒரு கணிசமான தொகையை
  - தேசியப் பால்வள மேம்பாட்டு வாரியம் மற்றும்
  - தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திற்கு அளிக்கின்றது.

## பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா

- வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குறைகளைச் சரிசெய்யும் நோக்கில் பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனாவில் (Pradhan Mantri Fasal Bima Yojana - PMFBY) பெரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது விவசாயிகளுக்கு விருப்பமான தேர்வாக மாற்றப்பட்டுள்ளது.



- பிரதமர் நரேந்திர மோடியால் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கப்பட்ட PMFBYன் கீழ், கடன் பெறும் விவசாயிகள் இந்தத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் திட்டத்தை எடுக்க வேண்டியது கட்டாயமாகும்.
- தற்போது, மொத்த விவசாயிகளில் 58 சதவீதம் பேர் கடன் பெற்றவர்களாக உள்ளனர்.

## அடுத்தத் தலைமைத் தகவல் ஆணையர்

- பிரதம மந்திரி தலைமையிலான உயர் மட்டக் குழுவானது தற்போது தகவல் ஆணையராகப் பணியாற்றி வரும் முன்னாள் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறைச் செயலாளரான பிமல் ஜூல்கா என்பவரை மத்திய தகவல் ஆணையத்தின் புதிய தலைமைத் தகவல் ஆணையராக (Chief Information Commissioner - CIC) பெரும்பான்மை முடிவின் அடிப்படையில் தேர்வு செய்து உள்ளது.
- இந்தத் தேர்வுக் குழுவானது மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதமரால் பரிந்துரைக்கப்படும் மத்திய அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர் (பொதுவாக மத்திய உள்துறை அமைச்சர்) ஆகியோரைக் கொண்டிருக்கும்.
- கடைசி CIC ஆகப் பதவி வகித்தவர் சுதிர் பார்கவா ஆவார்.

## குற்றவிலக்கு மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- அரசியல் கட்சிகள் தங்களது வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் ஆகியவற்றில் தங்களது வேட்பாளர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளின் விவரங்களைப் பதிவேற்றுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- மிக முக்கியமாக, அவர்கள் (குற்ற வழக்கு உள்ள வேட்பாளர்கள்) ஏன் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்பதற்கான காரணங்களை வெளியிடும்படி நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது. அதேபோல் குற்ற வழக்குப் பதியப்படாதவர்களுக்கு ஏன் வாய்ப்பு (டிக்கெட்) கொடுக்கவில்லை என்பதையும் தெரிவிக்குமாறு இந்திய உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.
- இந்த விவரங்களை வேட்பாளரைத் தேர்ந்தெடுத்த 48 மணி நேரத்திற்குள் அல்லது வேட்புமனு தாக்கல் செய்வதற்கான முதல் தேதிக்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது இதில் எது முதலில் வருகிறதோ அப்பொழுது வெளியிட வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- முகநூல் மற்றும் சுட்டுரை உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் அதிகாரப்பூர்வ சமூக ஊடகத் தளங்களிலும் ஒரு உள்ளூர் பத்திரிக்கை மற்றும் ஒரு தேசிய செய்தித்தாள் ஆகியவற்றிலும் இந்த விவரங்கள் வெளியிடப்பட வேண்டும்.
- 2004 ஆம் ஆண்டில் 24 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்ததாகவும் அதுவே 2009 ஆம் ஆண்டில் 30 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்ததாகவும் இந்திய உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.
- மேலும், 2014 ஆம் ஆண்டில் 34 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்தன. இது 2019 ஆம் ஆண்டில் 43 சதவீதமாக அதிகரித்துள்ளது.

- நாட்டின் நலனுக்காக அரசியலில் குற்றத் தன்மையைத் தடுப்பதற்காக ஒரு நெறிமுறையை உருவாக்குமாறு இந்திய உச்ச நீதிமன்றம் தேர்தல் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டது. அந்தப் பிரச்சினைகளைத் தடுப்பதற்காக உச்ச நீதிமன்றத்தால் 2018 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட "குற்றவியல் வழக்கு உள்ளவர்களை அறிவிக்க வேண்டும்" என்ற உத்தரவு உதவாது என்று இந்தியத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- தேர்தல் ஆணையமானது 1968 ஆம் ஆண்டின் தேர்தல் சின்னம் தொடர்பான ஆணை அல்லது தேர்தல் நடத்தை விதிமுறைகளைத் (model code of conduct - MCC) திருத்த வில்லை. எனவே அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பு சட்டப்பூர்வ அனுமதியைப் பெறாது.
- 2018 ஆம் ஆண்டில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வானது அனைத்து வேட்பாளர்களும் தங்களது குற்றப் பின்னணியை வாக்கெடுப்பிற்கு முன் தேர்தல் ஆணையத்திடம் அறிவிக்க வேண்டும் என்று ஒருமனதாகத் தீர்ப்பளித்ததோடு, வேட்பாளர்களின் குற்றப் பின்னணி குறித்து அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலமாகப் பரவலாக விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் அது கூறியுள்ளது.
- இந்த நோக்கத்திற்காக முன்னணி செய்தித்தாள்கள் மற்றும் செய்தி அலைவரிசை ஆகியவற்றின் பட்டியலைத் தேர்தல் ஆணையம் வெளியிடவில்லை அல்லது வேட்பாளர்களால் குற்றவியல் பின்னணியை அறிவிப்பதற்கான நேரத்தை தெளிவு படுத்தவில்லை என்று கூறப்பட்டுள்ளது.
- இது மக்கள் அதிக அளவில் பயன்படுத்தாத செய்தித்தாள்கள் & செய்தி அலைவரிசை ஆகியவற்றில் தேவையற்ற நேரத்தில் முக்கியமான தகவல்களை வேட்பாளர்கள் வெளியிட வழிவகுத்துள்ளது.

## நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம்

- இந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்திற்குள் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (Central Consumer Protection Authority - CCPA) அமைக்கப்படும் என்று மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார்.
- CCPA ஆனது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019ன் கீழ் அமைக்கப் படவுள்ளது.
- இது நுகர்வோர் உரிமைகள், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், தவறான விளம்பரங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் களைய இருக்கின்றது. இது மோசமான மற்றும் கலப்படம் செய்யப்பட்ட தயாரிப்புகளை விற்பனை செய்தால் அதற்கேற்றவாறு அபராதம் விதிக்க இருக்கின்றது.
- தற்போது மின்னணு வணிகம் மற்றும் நேரடி விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்கான ஒழுங்குமுறை அமைப்பு எதுவும் நடைமுறையில் இல்லை.

## டிரம்ப் வருகை – இந்தியா

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 அன்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.
- டிரம்ப் பின்னர் அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்தையும் தாஜ்மஹாலையும் பார்வையிட்டார்.

- பார்வையாளர்களின் புத்தகத்தில் மகாத்மா காந்தி பற்றி அவர் எதுவும் குறிப்பிட வில்லை.
- பின்னர் முக்கியத் தலைவர்கள் இருவரும் இந்தியாவின் அகமதாபாத்தில் உள்ள மொடேரா மைதானம் அல்லது சர்தார் படேல் மைதானத்தில் கூடியிருந்த ஒரு பெரிய கூட்டத்தில் உரையாற்றினர்.
- 2020 ஆம் ஆண்டு நிலவரப் படி, இது உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமாகத் திகழ்கின்றது.
- இந்த நிகழ்வை "நமஸ்தே டிரம்ப்" என்று பெயரிட்டு அமெரிக்க அதிபரின் வருகையை இந்தியா கொண்டாடியது.




- இந்தியாவும் அமெரிக்காவும் வானூர்திகளுக்கான இரண்டு பாதுகாப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட இருக்கின்றன.
- இந்தியக் கடற்படைக்காக சுமார் 24 எம்ஹெச் - 60 ஆர் வானூர்திகள் தொடர்பான ஒப்பந்தமும் அப்பாச்சி வானூர்திகளுக்காக ஆறு ஏஎச் - 64 இ வானூர்திகள் தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட உள்ளன.
- இந்தியாவுக்குப் பயணம் செய்த ஏழாவது அமெரிக்க அதிபராகவும் அகமதாபாத்தில் தரையிறங்கிய முதலாவது அமெரிக்க அதிபராகவும் டொனால்டு டிரம்ப் உருவெடுத்து உள்ளார்.
- தனது முதலாவது பதவிக் காலத்தில் இந்தியாவிற்கு பயணம் செய்த இரண்டாவது அமெரிக்க அதிபர் இவர் மட்டுமே ஆவார்.
- இதற்கு முன்பு 2010 ஆம் ஆண்டில் பராக் ஒபாமா தனது முதலாவது பதவிக் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.
- டுவைட் டி ஐசன்ஹோவர் 1959 ஆம் ஆண்டில் இந்தியாவிற்குப் பயணம் செய்த முதலாவது அமெரிக்க அதிபர் ஆவார்.
- ரிச்சர்ட் நிக்சன் 1969 ஆம் ஆண்டிலும் ஜிம்மி கார்ட்டர் 1978 ஆம் ஆண்டிலும் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர்.
- பில் கிளிண்டன் 2000 ஆம் ஆண்டிலும் ஜார்ஜ் டபிள்யூ புஷ் 2006 ஆம் ஆண்டிலும் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர்.
- ஒபாமா 2010 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.




## சர்வதேச நீதித்துறை மாநாடு

- ❖ இது சமீபத்தில் புது தில்லியில் நடத்தப்பட்டது.
- ❖ இராணுவச் சேவைகளில் பெண்களைச் சேர்ப்பதன் மூலம் பாலின சமத்துவத்தைக் கொண்டு வருவதற்காக இந்திய அரசால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் போர் விமானிகளின் தேர்வு செயல்முறை ஆகியவை குறித்து இந்த மாநாடு விவாதித்தது.
- ❖ இரவு நேரங்களில் சுரங்கங்களில் வேலை செய்வதற்காக பெண்களின் சுதந்திரத் தன்மை குறித்தும் இது விவாதித்தது.
- ❖ "பாலின உலகம்" (Gender Just World) என்ற கருப்பொருளானது இந்த மாநாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- ❖ இந்த மாநாடு இந்திய நீதித்துறை அமைப்பில் "Just World" என்ற கருத்தாக்கத்தை அறிமுகப் படுத்தியது.



## தேசிய அங்கக (கரிம) உணவுத் திருவிழா

- புது தில்லியில் நடைபெற்ற தேசிய கரிம உணவுத் திருவிழாவை மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சகம் மற்றும் மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவை கூட்டாக இணைந்து துவக்கி வைத்தன.
- இந்தியாவில் தன்னளவில் நடைபெறும் முதலாவது திருவிழா இதுவாகும்.
- கருப்பொருள்: "இந்தியாவின் அங்ககச் சந்தைக்கான சாத்தியக் கூற்றைப் பயன்படுத்திக் கொள்ளுதல்" என்பதாகும்.
- இந்தியாவில் அங்ககத் துறையானது ஆண்டுக்கு 17% என்ற வேகத்தில் வளர்ந்து வருவதாக இந்த விழாவில் அறிவிக்கப் பட்டுள்ளது.
- உலகில் 9வது பெரிய அங்கக விவசாய நிலத்தையும் அதிக எண்ணிக்கையிலான உற்பத்தியாளர்களையும் கொண்ட இந்தியா அங்கக உணவுப் பிரிவில் வேகமாக வளர்ந்து வருகின்றது.
- இந்தியா சுமார் 1.70 மில்லியன் மெட்ரிக் டன் (2017-18) என்ற அளவில் சான்றளிக்கப் பட்ட அங்ககப் பொருட்களை உற்பத்தி செய்தது.
- இந்திய அங்ககத் துறை – தொலைநோக்குப் பார்வை - 2025 என்ற அறிக்கையின் படி, இந்தியாவின் அங்கக வணிகமானது 2025 ஆம் ஆண்டில் ரூ. 75,000 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ஜெய்விக் கேட்டி தளமானது விவசாய நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- இது அங்கக வேளாண்மை தொடர்பான ஒரு தேசியத் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், அங்கக வேளாண்மையை வலுப்படுத்துவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- உலகின் முதலாவது அங்கக மாநிலம் சிக்கிம் ஆகும்.




## தால் சேனா பவன்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் சமீபத்தில் தில்லி இராணுவ முகாமில் ஒரு புதிய இராணுவத் தலைமையகத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.
- இந்தக் கட்டிடத்திற்கு "தால் சேனா பவன்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தக் கட்டிடம் "உதயமாகும் சூரியன்" வடிவத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளது.



## தேசியப் போர் நினைவுச் சின்னத்தின் முதலாவது ஆண்டுவிழா

- தேசியப் போர் நினைவுச் சின்னத்தின் முதலாவது ஆண்டு விழாவானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று அனுசரிக்கப்பட்டது.
- சுதந்திரத்திற்குப் பின்னர் பல்வேறு போர்கள் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளின் போது பணியாற்றித் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அந்த வீரர்களுக்காக இந்த நினைவுச் சின்னமானது கட்டப்பட்டுள்ளது.



- தேசியப் போர் நினைவுச் சின்னமானது தனது சுவர்களில் சுதந்திரத்திற்குப் பிறகு உயிர்த் தியாகம் செய்த 25,942 வீரர்களின் பெயர்களைக் கொண்டுள்ளது.
- இந்த நினைவுச் சின்னமானது கடந்த ஆண்டு புது தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியால் தேசத்திற்காக அர்ப்பணிக்கப் பட்டது.

## அமெரிக்காவிடமிருந்து இராணுவ உபகரணங்கள்

- வானூர்திகள் உட்பட 3 பில்லியன் டாலருக்கும் (ரூ. 21,000 கோடி) அதிகமான மேம்படுத்தப்பட்ட இராணுவ உபகரணங்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

- 24 எம்ஹெச் - 60 ஆர் கடல் கண்காணிப்பு வானூர்திகள் மற்றும் 6 ஏஎச் - 64இ அப்பாச்சி ரக தாக்குதல் வானூர்திகள் ஆகியவற்றை அமெரிக்காவிடமிருந்து வாங்குவதற்கான ஒப்பந்தங்களில் இந்தியாவும் அமெரிக்காவும் கையெழுத்திட்டுள்ளன.
- அப்பாச்சி ஆனது உலகின் மிகவும் மேம்படுத்தப்பட்ட பல பணிகளை மேற்கொள்ளும் கனரக தாக்குதல் திறன் கொண்ட வானூர்தி ஆகும்.
- எம்.எச் - 60 ஆர் ஆனது 'ரோமியோ' என்றும் குறிப்பிடப் படுகின்றது.

## கடலோரப் பேரழிவு அபாயக் குறைப்பு மற்றும் தாங்குந்தன்மை பற்றிய முதலாவது தேசிய மாநாடு – 2020

- 2020 ஆம் ஆண்டின் கடலோரப் பேரழிவு அபாயக் குறைப்பு மற்றும் தாங்குந்தன்மை பற்றிய முதலாவது தேசிய மாநாட்டிற்கு (Coastal Disaster Risk Reduction and Resilience - CDRR&R) மத்திய உள்துறை இணை அமைச்சரான நித்யானந்த் ராய் என்பவர் தலைமை தாங்கினார்.
- இது புது தில்லியில் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தால் (National Institute of Disaster Management - NIDM) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தத் துறையின் மிக சமீபத்திய முன்னேற்றங்களை ஆராய்ந்து விவாதிப்பதும் கடலோரப் பேரழிவு அபாயக் குறைப்பு மற்றும் தாங்குந்தன்மைக்கான பல்வேறு அம்சங்களில் உள்ள சிக்கல்கள் மற்றும் தீர்வுகள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதும் இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
- இது பிரதமரின் 10 அம்சத் செயல் திட்டம் மற்றும் பேரழிவு அபாயக் குறைப்புக்கான செண்டாய் கட்டமைப்பைச் செயல்படுத்துவதன் மூலம், கடலோரப் பேரழிவு அபாயங்கள் மற்றும் திறனுள்ள ஒத்துழைப்பு நடவடிக்கைகள் பற்றிய சிறந்த புரிதலின் அடிப்படையில் மனிதத் திறனை மேம்படுத்துவதின் மீது கவனம் செலுத்தியது.
- 2016 ஆம் ஆண்டில் பேரிடர் அபாயக் குறைப்பு தொடர்பான ஆசிய அமைச்சர்களுக்கிடையேயான மாநாட்டில் (AMCDRR - Asian Ministerial Conference on Disaster Risk Reduction) 10 அம்ச செயல் திட்டத்தை பிரதமர் பட்டியலிட்டிருந்தார்.

## ஜம்மு காஷ்மீரில் மத்தியச் சட்டங்களை ஏற்றுக் கொள்ளும் உத்தரவுக்கு அமைச்சரவை ஒப்புதல்

- புதிதாக உருவாக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் பொதுப் பட்டியலில் உள்ள அனைத்து 37 மத்தியச் சட்டங்களையும் ஏற்றுக் கொள்வதற்கான உத்தரவை பிறப்பிப்பதற்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தச் சட்டங்கள் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 முதல் நடைமுறைக்கு வந்த ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின் பிரிவு 96ன் கீழ் மாற்றப்பட இருக்கின்றது.
- ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின் 96வது பிரிவானது புதிதாக அமைக்கப்பட்ட ஒன்றியப் பிரதேசங்களில் ஒரு வருடத்திற்குள் எந்தவொரு சட்டத்தையும் பயன்படுத்துவதற்கான சட்டங்களை ஏற்றுக் கொள்ள அல்லது மாற்ற மத்திய அரசிற்கு அதிகாரங்களை வழங்குகின்றது.

## ICoSDiTAUS-2020

- 2020 ஆம் ஆண்டின் ஆயுர்வேதம், யுனானி மற்றும் சித்தா மருத்துவ முறையின் நோயறிதல் மற்றும் சொற்களஞ்சியங்களின் தரப்படுத்தல் (International Conference on Standardization of Diagnosis and Terminologies in Ayurveda, Unani and Siddha Systems of Medicine - ICoSDiTAUS) குறித்த சர்வதேச மாநாடானது புது தில்லியில் நடைபெற்றது.
- இது 'பாரம்பரிய மருத்துவத்தின் (Traditional Medicine - TM) மூலம் கண்டறியும் தரவை சேகரித்தல் மற்றும் வகைப்படுத்துதல் குறித்த புது தில்லிப் பிரகடனத்தை' ஏற்றுக் கொண்டது.
- இந்த மாநாட்டில் மொத்தம் பதினாறு நாடுகள் கலந்து கொண்டன.
- இந்த மாநாடானது உலக சுகாதார அமைப்பின் ஆதரவுடன் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ரகைன் மாகாணத்தை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள்

- மியான்மரின் வடக்கு ரகைன் மாகாணத்தில் சமூகப் பொருளாதார நிலைமையை மேம்படுத்த இந்தியாவும் மியான்மரும் தொடர் ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டுள்ளன.
- 2017 ஆம் ஆண்டில் மியான்மரில் இராணுவம் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான ரோஹிங்கியாக்கள் இந்த மாகாணத்திலிருந்து அண்டை நாடான வங்கதேசத்திற்குத் தப்பிச் சென்றனர்.

## ராக்கிகார்ஹி

- ஐந்து இடங்களில் அகழ் வைப்பகங்களை அமைப்பதற்கு நிதியளிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.
- ராக்கிகார்ஹியில் ஹரியானா அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட தற்பொழுது கட்டப்பட்டு வரும் அருங்காட்சியகமும் இதில் அடங்கும்.
- ராக்கிகார்ஹி பாரம்பரிய தளத்தில் அத்துமீறி கட்டப்பட்ட குடியிருப்புகளை அகற்றுவதின் ஒரு பகுதியாக, 152 குடும்பங்கள் வேறு குடியிருப்புகளுக்கு மாற்றப்படுகின்றன.
- ஐந்து அகழ் வைப்பகங்கள் பின்வருமாறு:
    - ஹரியானாவில் ராக்கிகார்ஹி,
    - உத்தரப் பிரதேசத்தில் ஹஸ்தினாபூர்,
    - அசாமில் சிவசாகர்,
    - குஜராத்தில் தோலவீரா மற்றும்
    - தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர்.

## MIEWS வலை தளம்

- மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில் துறை அமைச்சரான ஹர்சிம்ரத் கவுர் பாதல் சந்தை நுண்ணறிவு மற்றும் முன்னறிவிப்பு அமைப்பு (Market Intelligence and Early Warning System - MIEWS) என்ற ஒரு இணையதளத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு (tomato, onion and potato - TOP) ஆகியவற்றின் விலைகளை 'நிகழ்நேர கண்காணிப்பிற்காக' அறிமுகப்படுத்தப்பட்ட இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது இணையதளம் இதுவாகும்.
- இது பசுமை நடவடிக்கைத் (OG - Operation Greens (OG)) திட்டத்தின் விதிமுறைகளின் கீழ் இடையீடு மேற்கொள்வதற்கான எச்சரிக்கைகளையும் ஏற்படுத்துகின்றது.

### *பசுமை நடவடிக்கைத் திட்டம்*

- 2018-19ன் மத்திய நிதிநிலை அறிக்கையின் உரையில், "வெள்ளைப் புரட்சி" என்ற வரிசையில் "பசுமை நடவடிக்கைத் திட்டமும்" அறிவிக்கப் பட்டுள்ளது.
- உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் (FPO - Farmer Producers Organizations), வேளாண் தளவாடங்கள், செயலாக்க வசதிகள் மற்றும் தொழில்முறை நிர்வாகத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவுத் தொகுதிகள்

- தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கமானது நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டத்துடன் (Atal Innovation Mission - AIM) இணைந்து இந்தியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்காக ஒரு செயற்கை நுண்ணறிவு (artificial intelligence - AI) அடிப்படையிலான தொகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- AIஐ அடிப்படையாகக் கொண்ட இந்தத் தொகுதியானது 5,000 அடல் மேம்படுத்து ஆய்வகங்களில் (Atal Tinkering Labs - ATL) செயல்படுத்தப்படுகின்றது. இது 2.5 மில்லியன் மாணவர்களை மேம்படுத்த இருக்கின்றது.
- இந்தத் தொகுதியானது செயல்பாடுகள், காணொளிகள் மற்றும் சோதனைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இது மாணவர்களுக்கு AIன் பல்வேறு கருத்துகளைக் கற்று, அதன் மூலம் பணியாற்ற மாணவர்களை அனுமதிக்கின்றது.
- 2030 ஆம் ஆண்டில், உலகளாவிய AI சந்தை மதிப்பானது 15 - 15.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் வரம்பில் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இதில் இந்தியாவின் பங்கு ஏறத்தாழ 1 டிரில்லியன் டாலராக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## புதிய எல்சிஎச் வளாகம்

- பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (Hindustan Aeronautics Limited - HAL) வளாகத்தில் புதிய இலகு ரக போர் வானூர்தி உற்பத்தி விமானப் பணிமனையை மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.
- எல்சிஎச் ஆனது HAL நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.

- 500 கிலோகிராம் வெடி பொருள்களுடன் கடல் மட்டத்திலிருந்து 4700 மீட்டர் உயரத்தில் இருக்கும் சியாச்சினில் உள்ள முன்னோக்குப் படைத் தளத்தில் தரையிறங்கிய முதலாவது தாக்குதல் வானூர்தி என்ற பெருமையை எல்சிஎச் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்குள் ரூ. 35,000 கோடி மதிப்பிலான பாதுகாப்பு ஏற்றுமதியை எட்டுவதற்கான இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.
- இலகு ரக வானூர்தி உற்பத்தியானது இந்த இலக்கை அடைய இந்தியாவிற்கு உதவும் என்று நம்பப் படுகின்றது.

## EASE 3.0

- சமீபத்தில் மத்திய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன் புதிய சீர்திருத்தச் செயல் திட்டமான EASE 3.0 என்பதனை அறிமுகப்படுத்தினார்.
- EASE 3.0 (மேம்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் சிறப்புமிகு சேவை) என்ற சீர்திருத்தச் செயல் திட்டமானது பொதுத்துறை வங்கிகளுக்குச் செயல்திறன் மிக்க மற்றும் தொழில்நுட்பத்தால் செயல்படுத்தப்படும் வங்கிச் சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- EASE என்பது சிறந்த வங்கி அனுபவம், பரந்த நிதியியல் உள்ளடக்கம் மற்றும் எளிதாகக் கடன் விநியோகம் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை இணைப்பதற்கான வங்கிச் சீர்திருத்தங்களின் தொகுப்பாகும்.
- EASEன் முதலாவது பதிப்பானது 2018 ஆம் ஆண்டில் ஜனவரியில் தொடங்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## மேற்கு ஆசிய அமைதித் திட்டம்

- சமீபத்தில் மேற்கு ஆசிய அமைதித் திட்டமானது அமெரிக்க அதிபர் டிரம்ப்பால் வெளியிடப்பட்டது.
- இது இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையில் நிறுத்தப்பட்ட இரு நாட்டுப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடரத் திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் படி
  - ஜெருசலேம் ஒன்றிணைந்ததாகவும் இஸ்ரேலின் தலைநகராகவும் இருக்க வேண்டும்.
  - மேற்குக் கரையில் இஸ்ரேல் தனது சட்டவிரோத குடியேற்றங்கள் எதையும் அகற்றக் கூடாது.
  - 1967 ஆம் ஆண்டுப் போரில் இஸ்ரேல் நாட்டினால் கைப்பற்றப்பட்ட நகரத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஜெருசலேமின் கோயிலான மவுண்ட் / அல் - ஹராம் அல் - ஷெரீப் வளாகத்தைப் பாதுகாக்கப்பட வேண்டும்.
  - இணைக்கப்படாத மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனிய பிரதேசங்கள் மற்றும் காசா ஆகியவற்றிற்கு இடையே போக்குவரத்து இணைப்புகள் நிறுவப்பட வேண்டும்.
  - பாலஸ்தீனிய மற்றும் அண்டை அரபு அரசு பொருளாதாரங்களை வலுப்படுத்துவதற்காக 50 பில்லியன் டாலர் முதலீட்டு நிதி உருவாக்கப்பட வேண்டும்.




## சர்வதேச சுகாதார அவசரநிலை - கொரோனா வைரஸ்

- உலக சுகாதார நிறுவனமானது கொரோனா வைரஸ் தொடர்பாக சர்வதேச சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளது.
- சீனாவில் தோன்றிய இந்த நோயானது தற்போது மற்ற 18 நாடுகளுக்குப் பரவியுள்ளதால் இந்த அமைப்பு அவசரநிலையை அறிவித்துள்ளது.
- மேலும், மனிதத் தொடர்பு மூலம் (human-to-human) இந்த நோய் பரவுகின்றது.
- இந்நோயின் பரவலானது PHEIC இன் அளவுகோல்களைப் பூர்த்தி செய்கின்ற காரணத்தால் சுகாதார அவசரநிலை அறிவிக்கப் பட்டுள்ளது.
- PHEIC என்பது சர்வதேச பொது சுகாதார அவசரநிலை அளவுகோல் ஆகும்.

## இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம்

- ராணுவக் கண்காட்சி (DefExpo) வரலாற்றில் முதல் முறையாக, இந்தியாவும் ஆப்பிரிக்காவும் தங்கள் நாடுகளின் பாதுகாப்பு உறவுகள் குறித்து விவாதிக்க உள்ளன.
- இந்தியாவின் மிகப்பெரிய பாதுகாப்புக் கண்காட்சி 2020 பிப்ரவரி 5 முதல் 2020 பிப்ரவரி 8 வரை லக்னோவில் நடைபெற உள்ளது.
- இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு மாநாடு நடைபெற உள்ளது.
- இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு மாநாடானது 2020 பிப்ரவரி 6 அன்று நடைபெற உள்ளது.
- இந்த மாநாட்டில் சுமார் 24 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.
- பல ஆப்பிரிக்க நாடுகளின் காலனித்துவத்திற்குப் பிந்தைய ஆட்சியில் இராணுவத் தளங்களை அமைக்க இந்தியா உதவியுள்ளது.
- நைஜீரியாவில் பாதுகாப்புத் துறைக் கல்லூரி, எத்தியோப்பியாவில் இராணுவ அகாடமி, கானாவில் விமானப்படை ஆகியவற்றை இந்தியா அமைத்துள்ளது.

## 12வது தெற்காசிய மாநாடு

- தெற்காசிய மாநாட்டின் 12வது பதிப்பானது புது தில்லியில் உள்ள பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு நிறுவனத்தில் (Institute for Defence Studies and Analysis - IDSA) நடத்தப் பட்டது.
- இந்த மாநாடானது வளர்ச்சிக்கான பொருளாதார ஒத்துழைப்பு, இந்தியாவின் அண்டை நாடுகளின் மாறிவரும் அரசியல் சூழல் போன்ற பிரச்சினைகளை விவாதித்தது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், 'இந்தியாவின் "அண்டை நாடுகள் முதலில்" என்ற கொள்கை: பிராந்திய உணர்வுகள்' என்பதாகும்.




## பெய்ஜிங் +25ன் மறுஆய்வு குறித்த தேசிய ஆலோசனை

- செயல்பாட்டுக்கான பெய்ஜிங் தளத்தை ஏற்றுக் கொண்டதன் 25வது ஆண்டைக் குறிக்கும் வகையில் பெய்ஜிங் +25ன் மறுஆய்வு குறித்த தேசிய ஆலோசனைக் கூட்டமானது நடத்தப் பட்டது.
- இந்த ஆலோசனைக் கூட்டமானது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சகம், தேசியப் பெண்கள் ஆணையம் (National Commission for Women - NCW) மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் இந்தியா ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- 1995 ஆம் ஆண்டு பெய்ஜிங் பிரகடனம் மற்றும் செயல்பாட்டிற்கான தளமானது எல்லா இடங்களிலும் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆகியோருக்கு அதிகாரமளிப்பதற்கான ஒரு இலட்சிய செயல் திட்டமாகும்.
- 1995 ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற பெண்கள் பற்றிய நான்காவது உலக மாநாடானது பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் அதிகாரம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியது.

## IMO 2020 - கப்பல்களுக்கான புதிய விதிகள்

- சர்வதேச கடல்சார் அமைப்பானது (International Maritime Organization - IMO) "IMO 2020" எனப்படும் புதிய விதிமுறைகளை முன்வைத்துள்ளது.
- IMO 2020 விதிமுறையானது 0.5 சதவீதத்திற்கு மேல் கந்தகம் அல்லது சல்பரைக் கொண்ட

எரிபொருட்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்கின்றது. இதற்கு முன்பு சல்பரின் அளவானது 3.5 சதவீதமாக இருந்தது.

- துப்புரவாக்கிகள் என அழைக்கப்படும் சல்பர் - துப்புரவு சாதனங்களுடன் பொருத்தப்பட்ட கப்பல்கள் மட்டுமே உயர் சல்பர் எரிபொருளைத் தொடர்ந்து எரிக்க அனுமதிக்கப் படுகின்றன.
- கடல் வாயு எண்ணெய் (marine gas oil - MGO) மற்றும் மிகக் குறைந்த அளவு சல்பரைக் கொண்ட எரிபொருள் எண்ணெய் (very low-sulphur fuel oil - VLSFO) போன்ற தூய்மையான எரிபொருட்களைக் கப்பல்கள் தேர்வு செய்யலாம்.

***IMO பற்றி***

- ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிறுவனமான IMO ஆனது சர்வதேசக் கப்பல் போக்குவரத்து மற்றும் கப்பல்களில் இருந்து வெளிப்படும் மாசுக்களைத் தடுக்கும் பணியை மேற்கொள்ளுகின்றது.
- இது 1948 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள லண்டனைத் தலைமையிடமாகக் கொண்டுச் செயல்படுகின்றது.

## பிரெக்ஸிட்

- ஐக்கிய இராஜ்ஜியமானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து (EU - European Union) அதிகாரப் பூர்வமாக வெளியேறியது. இது 47 ஆண்டுகளாக EUல் உறுப்பினராக இருந்தது.
- 28 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய முதலாவது நாடாக பிரிட்டன் உருவெடுத்துள்ளது.
- இரண்டாம் எலிசபெத் ராணி 2020 ஆம் ஆண்டு ஜனவரி 23 அன்று பிரெக்சிட் மசோதாவுக்குத் தனது அரச ஒப்புதலை வழங்கினார். இது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கு வழி வகுத்தது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை ஐக்கிய ராஜ்ஜியமானது ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள உறுப்பு நாடுகளுடன் சுதந்திரமாக (தடையற்ற முறையில்) பணியாற்றவும் வர்த்தகம் செய்யவும் முடியும்.
- இருப்பினும், இதற்கு இனிமேல் ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைப்புகளில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட மாட்டாது.

## சீனாவிற்கு வெளியே நிகழ்ந்த கொரோனா வைரஸ் மரணம்

- கொரோனா வைரஸ் பாதிப்பினால் பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட மரணமானது சீன நிலப் பகுதிக்கு வெளியே ஏற்பட்ட முதலாவது மரணமாகும்.
- சீனாவிற்கு வெளியே நிகழ்ந்த இரண்டாவது கொரோனா வைரஸ் மரணம் ஹாங்காங் நாட்டில் பதிவாகியுள்ளது.
- சமீபத்தில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, ஜப்பான், பாகிஸ்தான், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் சீனாவிற்கு சென்று வந்த அனைத்து வெளிநாட்டுப் பார்வையாளர்களுக்கும் பயணக் கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளன.

**Cases of coronavirus outside China**




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Japan | 20 | Malaysia | 8 | Canada | 4 | Cambodia | 1 |
| Thailand | 19 | US | 8 | Italy | 2 | Finland | 1 |
| Singapore | 18 | Germany | 8 | UK | 2 | Nepal | 1 |
| South Korea | 15 | Vietnam | 7 | India | 2 | Sri Lanka | 1 |
| Australia | 12 | France | 6 | Philippines | 2 | Spain | 1 |
| Taiwan | 11 | UAE | 5 | Russia | 2 | Sweden | 1 |

Source: European Centre for Disease Prevention and Control,

## காமன்வெல்த் அமைப்புடன் மீண்டும் இணைப்பு - மாலத்தீவு

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று மாலத்தீவானது காமன்வெல்த் அமைப்பில் மீண்டும் அதிகாரப் பூர்வமாக இணைந்துள்ளது.
- இது காமன்வெல்த் ஒன்றியத்தின் 54வது உறுப்பு நாடாக உருவெடுத்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ருவாண்டாவில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளின் அரசுத் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டத்தின் ஒரு பகுதியாக மாலத்தீவு கலந்துகொள்ள இருக்கின்றது.
- மாலத்தீவானது 1982 ஆம் ஆண்டில் காமன்வெல்த் அமைப்பில் சேர்ந்தது. இது 2016 ஆம் ஆண்டில் இந்த அமைப்பிலிருந்து வெளியேறியது.

## அடு சுற்றுலா

- அடு பவளப்பாறைத் தீவுக் குழுவில் உள்ள 5 தீவுகளில் அடு சுற்றுலாவை ஏற்படுத்த இந்தியாவும் மாலத்தீவும் இணைந்து 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்து போட்டுள்ளன.
- அடு என்பது மாலத்தீவில் உள்ள ஒரு நகரமாகும். அதில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கும் தீவுகள் உள்ளன.
- இந்தியா தனது தூதரக அலுவலகத்தை 1972 ஆம் ஆண்டில் மாலத்தீவின் தலைநகரான மாலியில் நிறுவியது.

## ப்ளூ டாட் அமைப்பு

- அமெரிக்க அதிபரின் இந்தியப் பயணத்தின் போது அமெரிக்கா தலைமையிலான ப்ளூ டாட் அமைப்பில் இந்தியா (Blue Dot Network - BDN) இணைய இருக்கின்றது.
- ப்ளூ டாட் அமைப்பு என்ற ஒரு முன்முயற்சியானது 2019 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் உள்ள பாங்காக்கில் நடைபெற்ற இந்தோ - பசிபிக் வர்த்தக மன்றக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.




- அமெரிக்கா தலைமையிலான இந்த முன்முயற்சியானது பின்வரும் அமைப்புகளினால் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது.
  - அமெரிக்க வெளிநாட்டுத் தனியார் முதலீட்டுக் கழகம் (OPIC - US Overseas Private Investment Corporation)
  - ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை (DFAT - Department of Foreign Affairs and Trade)
  - சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC - Japan Bank for International Cooperation).

## நீடித்த வளர்ச்சிக் கட்டணம்

- இந்தியா, மாலத்தீவு மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நீடித்த வளர்ச்சிக் கட்டணத்தை (Sustainable Development Fee - SDF) பூடான் நாடு விதிக்க இருக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல், நாள் ஒன்றிற்கு ரூ. 1,200 ($ 17) என்ற அளவில் கட்டணமானது விதிக்கப்பட இருக்கின்றது.
- அந்நாட்டில் அதிகரித்து வரும் சுற்றுலா நெரிசலை எதிர்கொள்வதற்காக இது உதவ இருக்கின்றது.

## செனட் சபை விசாரணையில் அமெரிக்க அதிபர் விடுவிப்பு

- பிரதிநிதிகள் சபையால் குற்றம் சாட்டப்பட்ட அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் செனட் சபை விசாரணையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
- இவர் தற்பொழுது அமெரிக்க வரலாற்றில் பிரதிநிதிகள் சபையால் குற்றம் சாட்டப்பட்டு செனட் சபையால் விடுவிக்கப்பட்ட மூன்றாவது அதிபராக உருவெடுத்துள்ளார்.
- மற்ற இரண்டு அதிபர்கள்
  - பில் கிளிண்டன் (1999) மற்றும்
  - ஆண்ட்ரூ ஜான்சன் (1868).

## சர்வதேச மதச் சுதந்திரக் கூட்டணி

- 27 நாடுகளைக் கொண்ட சர்வதேச மதச் சுதந்திரக் கூட்டணியை அமெரிக்கா தொடங்கியுள்ளது.
- இது உலகெங்கிலும் உள்ள மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் ஒரு கூட்டு அணுகு முறையைப் பின்பற்ற முயற்சிக்கின்றது.
- ஆஸ்திரியா, பிரேசில், ஐக்கிய இராஜ்ஜியம், இஸ்ரேல், உக்ரைன், நெதர்லாந்து மற்றும் கிரீஸ் ஆகியவை இந்தக் கூட்டணியில் சேர இருக்கும் முக்கியமான நாடுகளாகும்.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மேம்படுத்தப்பட்ட மதச் சுதந்திரத்திற்கான அடுத்த அமைச்சரவை மாநாட்டை போலந்து நாடு வார்சாவில் நடத்த இருக்கின்றது.

## இந்தியாவிற்கும் வங்கதேசத்திற்கும் இடையிலான ரயில் பாதைத் திட்டம்

- இந்தியாவில் உள்ள அகர்தலா (திரிபுரா) – வங்கதேசத்தில் உள்ள அகௌரா ஆகியவற்றிற்கு இடையே 15.6 கி.மீ நீளமுள்ள ரயில் பாதைத் திட்டமானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவடைய இருக்கின்றது.
- இந்த ரயில் பாதைகளானது இந்திய ரயில்வே மற்றும் வங்கதேச ரயில்வே ஆகியவற்றிற்கு இடையே இணைப்பை மேம்படுத்துவதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை அதிகரிக்க இருக்கின்றன.
- இந்தத் திட்டமானது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வங்கதேசப் பிரதமரான ஷேக் ஹசீனாவின் இந்தியப் பயணத்தின் போது தொடங்கப்பட்டது.
- இந்தியப் பகுதியில் 5.46 கி.மீ நீளம் கொண்ட இந்த ரயில் பாதையை அமைப்பதற்கான செலவை மத்திய வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது (Ministry of Development of North Eastern Region - DoNER) ஏற்கின்றது.
- வங்கதேசப் பகுதியில் 10.6 கி.மீ நீளமுள்ள இந்த ரயில் பாதையை அமைப்பதற்கான செலவானது இந்திய அரசின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

## இந்தியா மற்றும் ரஷ்யா ஆகியவற்றிற்கிடையேயான ஒப்பந்தம் - கச்சா எண்ணெய்

- மத்தியப் பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சரான தர்மேந்திர பிரதான் மற்றும் ரோஸ்நெப்ட் நிறுவனத்தின் தலைவர் ஆகியோர் முதலாவது கால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
- ரோஸ்நெப்ட் ஆனது ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நிறுவனமாகும்.
- கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதற்காக அரசிற்குச் சொந்தமான இந்தியன் ஆயில் கழகம் மற்றும் ரோஸ்நெப்ட் ஆகியவற்றிற்கு இடையே ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது.
- இந்தியாவானது உலகின் 3வது மிகப்பெரிய எரிசக்தி நுகர்வோராக விளங்குகின்றது. இந்தியா தனது எண்ணெய்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உலகளவில் 83% எண்ணெய்யை இறக்குமதி செய்கின்றது.

## ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு

- ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடானது எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் நடைபெற்றது.
- இந்த உச்சிமாநாடு ஆப்பிரிக்க கண்டத்தில் பயங்கரவாதத்தை சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இம்மாநாட்டின் கருப்பொருள் : "ஆயுதங்களைப் பயன்படுத்தாமை" என்பதாகும்.
- இந்த ஆண்டின் தலைமை தென்னாப்பிரிக்காவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இந்தியா சமீபத்தில் பாதுகாப்பு ஒப்பந்தமான லக்னோ பிரகடனத்தில் கையெழுத்திட்டதால் இந்த உச்சி மாநாடு இந்தியாவுக்கு முக்கியமானதாகக் கருதப் படுகின்றது.
- ஆப்பிரிக்க ஒன்றியத்தின் பிராந்தியங்களில் பாதுகாப்புத் துறையில் கணிசமான அளவில் முதலீடு செய்வதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

### *ஆப்பிரிக்க ஒன்றியம்*

- ஆப்பிரிக்க ஒன்றியம் என்பது ஆப்பிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள 55 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஒரு கண்ட அளவிலான ஒன்றிய அமைப்பாகும்.
- தலைமையகம் : அடிஸ் அபாபா, எத்தியோப்பியா.
- லிபியத் தலைவர் முயம்மர் அல்-கடாஃபி தலைமையில் இந்த ஆப்பிரிக்க ஒன்றியத்தின் உருவாக்கமானது புதுப்பிக்கப்பட்டது.
- சிர்டே பிரகடனம் மூலம் ஆப்பிரிக்க ஒன்றியம் நிறுவப்பட்டது.

## ஒளிபுகா மண்டலத்திற்கு பயணம்

- விஞ்ஞானிகள் குழுவானது இந்தியப் பெருங்கடலின் மிகவும் ஆழமான பகுதியான "ஒளிபுகா மண்டலத்திற்கு" (நள்ளிரவு மண்டலம்) செல்லத் தயாராகி வருகின்றது.
- ஒளி அரிதாகவே இந்தப் பகுதியைச் சென்றடைகின்றது. ஆனால் உயிரினங்கள் இன்னும் இந்தப் பகுதியில் காணப்படுகின்றன.
- இந்த ஐந்து வார காலப் பயணமானது கடல் தளத்திலிருந்து ஆயிரக்கணக்கான மீட்டர் உயரமுள்ள நீருக்கடியில் இருக்கும் மிகப்பெரிய மலைகளான "கடல் மலைகளை" சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சியாரா புயல்

- இது வடக்கு ஐரோப்பாவைத் தாக்கிய ஒரு மிகப்பெரிய புயலாகும். இந்தப் புயலானது இப்பகுதியில் போக்குவரத்திற்கும் பொது நிகழ்வுகளுக்கும் இடையூறு விளைவிக்கின்றது.
- ஐக்கிய இராஜ்ஜியத்தில் 'சியாரா' என்று பெயரிடப்பட்ட இந்தப் புயலானது அயர்லாந்து, பிரான்சு, பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைத் தாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ஜெர்மனியில் இது 'சபின்' என்று குறிப்பிடப்படுகின்றது.

- வானிலை நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்கு இன்னும் ஒரு முழு அளவிலான ஐரோப்பிய அமைப்பு இல்லாத காரணத்தால் இந்தப் புயலுக்கு இரண்டு பெயர்கள் உள்ளன.

## வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதி

- ஐக்கிய நாடுகள் சபையின் வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியமானது (International Fund for Agricultural Development - IFAD) வளரும் நாடுகளில் உள்ள பட்டினி மற்றும் வறுமையை நிவர்த்தி செய்ய செயல்படுகின்றது.
- IFAD இன் 43வது அமர்வானது ரோமில் நடைபெற்றது.
- தற்போதைய வளர்ச்சி விகிதத்துடன், ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நீடித்த வளர்ச்சி இலக்கை அடைய முடியாது என்று இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.
- இந்த மன்றமானது ரோமில் ஐக்கிய நாடுகள் சபையின் FAO (உணவு மற்றும் வேளாண் அமைப்பு) இல் கூடியது.
- 2015 ஆம் ஆண்டில் உலகத் தலைவர்கள் நீடித்த வளர்ச்சி இலக்கின் கீழ் 2030 ஆம் ஆண்டுக்குள் பட்டினியை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.
- IFAD ஆனது 1974 ஆம் ஆண்டு உலக உணவு மாநாட்டில் நிறுவப்பட்டது.

## பாதுகாப்பு செலவுகள் குறித்த அறிக்கை

- சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனமானது (International Institute of Strategic Studies - IISS) பல்வேறு நாடுகளின் பாதுகாப்புச் செலவினம் குறித்த தனது அறிக்கையை "இராணுவ இருப்பு" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது.
- பாதுகாப்புக்கான உலகளாவியச் செலவினமானது 2019 ஆம் ஆண்டில் 4% அதிகரித்து உள்ளது.
- இது கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய வளர்ச்சியாகும்.
- அமெரிக்கா, சீனா, சவுதி அரேபியா, ரஷ்யா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் 2019 ஆம் ஆண்டில் உலகின் முதல் ஐந்து பாதுகாப்புச் செலவினர்களாக தங்கள் நிலைகளைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன.

***IISS பற்றி***

- 1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த சர்வதேச நிறுவனமானது ஒரு பிரிட்டிஷ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.
- இந்நிறுவனமானது கோ டு திங்க் டேங்க் என்ற ஒரு உலகளாவிய குறியீட்டு அறிக்கையில் 10வது சிறந்த நிறுவனமாக இடம் பெற்றுள்ளது.




## சர்வதேசத் தேடல் மற்றும் மீட்பு ஆலோசனைக் குழு (INSARAG)

- ❖ தேசியப் பேரிடர் மீட்புப் படையானது சர்வதேசத் தேடல் மற்றும் மீட்பு ஆலோசனைக் குழு (International Search & Rescue Advisory Group - INSARAG) வழிகாட்டுதல்களின் படி இரண்டாவது பிம்ஸ்டெக் பேரிடர் மேலாண்மைப் பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளது.
- ❖ INSARAG ஆனது 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ❖ இது பேரழிவு பாதிப்புக்கு உள்ளாகும் நாடுகள், பேரழிவு மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளும் நாடுகள் மற்றும் நகர்ப்புறத் தேடல் & மீட்பு நடவடிக்கைக்கு அர்ப்பணிக்கப்பட்ட அமைப்புகளின் வலையமைப்பாகும்.

## முனிச் பாதுகாப்பு மாநாட்டின் 56வது பதிப்பு

- ❖ சமீபத்தில் முனிச் பாதுகாப்பு மாநாட்டின் (Munich Security Conference - MSC) 56வது பதிப்பானது ஜெர்மனியின் தெற்கு நகரமான முனிச்சில் தொடங்கியது.
- ❖ MSC என்பது 1963 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் சர்வதேசப் பாதுகாப்புக் கொள்கை தொடர்பான ஒரு வருடாந்திர மாநாடாகும்.
- ❖ இந்த ஆண்டின் இந்த மாநாட்டின் கருப்பொருள், "வெஸ்ட்லெஸ்னஸ்" என்று தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த மாநாட்டில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான எஸ். ஜெய்சங்கர் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார்.

## நெதர்லாந்தின் டிஜிட்டல் அடையாளத் திட்டத்தின் மீதான தீர்ப்பு

- உலகில் இதுவரை எங்கும் நிகழாத வகையில், நெதர்லாந்தில் உள்ள ஒரு நீதிமன்றமானது டிஜிட்டல் அடையாள நெறிமுறைக்கு எதிராகத் தீர்ப்பளித்துள்ளது.
- இந்த வழிமுறை SyRI (கணினி இடர் காட்டி - System Risk Indicator) என அழைக்கப் படுகின்றது.
- தரவுகளின் தனியுரிமையைப் பாதுகாப்பதற்காகவும் (தரவு அந்தரங்கம்) மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தடுப்பதற்காகவும் இந்த தீர்ப்பானது வழங்கப் பட்டுள்ளது.

### *SyRI பற்றி*

- டச்சு சமூக நலத் துறை அமைச்சகமானது 2014 ஆம் ஆண்டில் SyRIயை உருவாக்கி உள்ளது.
- SyRIயின் நோக்கமானது மோசடி செய்தவர்களை அரசாங்கத்தின் சலுகைகளைப் பெறுவதிலிருந்து நீக்குதலாகும்.
- அடையாள அட்டையின் பயன்பாடு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் ஆதார் தீர்ப்பின் வரம்புகளைப் போலவே ஹேக் நீதிமன்றமும் சமூக நலனைத் தனிப்பட்ட தனியுரிமையுடன் சமநிலைப்படுத்த முயன்றுள்ளது.

## IFADன் 43வது நிர்வாகக் குழுக் கூட்டம்

- IFADன் 43 வது நிர்வாகக் குழுக் கூட்டமானது இத்தாலியின் ரோம் நகரில் "2030 ஆம் ஆண்டிற்குள் பட்டினியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நீடித்த உணவு முறைகளில் முதலீடு செய்தல்" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.
- வேளாண் மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியமானது (International Fund for Agricultural Development - IFAD) காலநிலை மாற்ற நிகழ்வுகளும் விவசாயத்தின் மீதான அவற்றின் தாக்கங்களும் 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 100 மில்லியன் மக்களை வறுமை நிலைக்குள் தள்ளும் என்று கூறியுள்ளது.

## 13வது ஆசிய வணிக மற்றும் சமூக முதலீட்டாளர்கள் மன்றம் 2020

- 2019-20 ஆம் ஆண்டின் ஆசிய வணிக மற்றும் சமூக முதலீட்டாளர்கள் மன்றத்தின் 13வது பதிப்பு & 2019-20 ஆம் ஆண்டின் ஆசியாவின் சிறந்த நிறுவனங்கள் & தலைவர்கள் அமைப்பின் 4வது பதிப்பு ஆகிய மாநாடுகள் தாய்லாந்தில் நடைபெற்றன. இந்த மாநாடுகள் இந்தியா மற்றும் ஆசியாவில் முதலீட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, ஆசியா ஒன் இதழ் & யுஆர்எஸ் மீடியா ஆகியவை இணைந்து 'இந்தியா - தாய்லாந்து: இன்று, நாளை, ஒன்றிணைந்து' என்ற அமைப்பு முறைசார் கூட்டத்தை ஏற்பாடு செய்தன.

## வடக்கு ஐரோப்பிய நாடுகளைச் சுற்றி அமைக்கப்படும் அணை

- காலநிலை மாற்றத்தின் விளைவாக 15 வட ஐரோப்பிய நாடுகளின் பல இலட்சக் கணக்கான மக்களையும் முக்கியமான பொருளாதாரப் பகுதிகளையும் உயரும் கடல்நீர் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்க ஒரு பெரிய அணை அமைக்கும் திட்டமானது முன்மொழியப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தில் 637 கி.மீ நீளமுள்ள இரண்டு அணைகள் கட்டப்பட உள்ளன.
    - முதலாவது அணையானது வடக்கு அயர்லாந்து மற்றும் மேற்கு நார்வே ஆகிய பகுதிகளுக்கு இடையே கட்டப்பட உள்ளது.
    - இரண்டாவது அணையானது பிரான்ஸ் மற்றும் தென்மேற்கு இங்கிலாந்து ஆகிய பகுதிகளுக்கு இடையே கட்டப்பட உள்ளது.

## FATFல் பாகிஸ்தான் குறித்த சீனாவின் நிலைப்பாடு

- பாகிஸ்தானை FATFன் சாம்பல் நிறப் பட்டியலில் (நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு - Financial Action Task Force) சேர்ப்பதற்காக சீனாவானது இந்தியா மற்றும் அமெரிக்காவுடன் இணைந்துள்ளது.
- சீனா மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரண்டு நாடுகளும் அமெரிக்கா, இந்தியா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து பாகிஸ்தானின் பயங்கரவாத நிதியுதவி & பண மோசடித் தடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தங்களது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.
- தற்பொழுது வரை சீனா, சவுதி அரேபியா மற்றும் துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் பாகிஸ்தானை FATFன் சாம்பல் நிறப் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கைக்கு எதிராக பாகிஸ்தானை ஆதரித்தன.
- ஆனால் தற்பொழுது துருக்கி மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் மட்டுமே பாகிஸ்தானை ஆதரிக்கின்றன.
- 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பாகிஸ்தான் சாம்பல் நிறப் பட்டியலில் வைக்கப் பட்டது.

## சாலைப் பாதுகாப்பிற்கான “சாலை விபத்துகளற்ற அணுகுமுறை” (Vision Zero approach)

- சுவீடனின் ஸ்டாக்ஹோமில் இரண்டு நாட்கள் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு குறித்த உலகளாவிய அமைச்சர்களுக்கிடையேயான மாநாட்டில் “சாலை விபத்துகளற்ற அணுகுமுறையானது” அதிக அளவிலான கவனத்தையும் பாராட்டையும் பெற்றுள்ளது.
- சாலை விபத்துகளினால் எந்தவொரு நபரும் கொல்லப்படக் கூடாது அல்லது வாழ்நாள் முழுவதும் காயமடையக் கூடாது என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- “சாலை விபத்துகளற்ற அணுகுமுறை” என்ற கருத்தாக்கமானது சுவீடன் நாடாளுமன்றத்தினால் 1997 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது.
- இந்த அணுகுமுறையால் சுவீடன் நாடானது சாலை இறப்புகளை பாதியாகக் குறைத்துள்ளது.




## ப்ளூ டாட் அமைப்பு (Blue Dot Network)

- ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடன் இணைந்து அமெரிக்காவின் தலைமையில் ப்ளூ டாட் அமைப்பானது (Blue Dot Network - BDN) 2019 ஆம் ஆண்டு நவம்பரில் தாய்லாந்தில் முறையாக அறிவிக்கப் பட்டது.
- "உலகளாவிய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான உயர்தரமான, நம்பகமான தரங்களை" ஊக்குவிப்பதற்காக அரசாங்கங்கள், தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்ட பல பங்குதாரர்களின் முன்முயற்சியாக இது கருதப் படுகின்றது.
- BDNக்கான திட்டமானது அமெரிக்காவின் இந்தோ - பசிபிக் உத்திசார் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது சீனாவின் மண்டலம் மற்றும் பாதை வழித்தட முன்முயற்சியை (Belt and Road Initiative - BRI) எதிர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா எதிர்காலத்தில் அமெரிக்கா தலைமையிலான BDNல் இணைய இருக்கின்றது.

***சீனாவின் மண்டலம் மற்றும் பாதை வழித்தட முன்முயற்சி***

- BRI என்பது ஆசியாவை நிலம் மற்றும் கடல் பாதைகள் வழியாக ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவுடன் இணைப்பதற்கான ஒரு லட்சியத் திட்டமாகும்.
- BRI ஆனது பின்வருவனவற்றைக் கொண்டிருகின்றது. அவையாவன
    - பட்டுச் சாலைப் பொருளாதார மண்டலம் - சீனாவை நிலப்பாதை வழியாக தென்கிழக்கு ஆசியா, தெற்காசியா, மத்திய ஆசியா, ரஷ்யா மற்றும் ஐரோப்பாவுடன் இணைக்கும் கண்டங்களுக்கிடையேயான பாதையாகும்.

- 21 ஆம் நூற்றாண்டு கடல்சார் பட்டுச் சாலை - சீனாவின் கடலோரப் பகுதிகளை தென்கிழக்கு மற்றும் தெற்காசியா, தென் பசிபிக், மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவுடன் ஐரோப்பாவிற்கு இணைக்கும் ஒரு கடல்வழிப் பாதையாகும்.

## ஜி20 - 2020

- 2020 ஆம் ஆண்டிற்கான ஜி20 நாடுகள் சந்திப்பானது சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற உள்ளது.
- இந்தக் கூட்டத்தில் உலகப் பொருளாதாரம் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோயால் ஏற்படும் அபாயங்கள் குறித்து விவாதிக்கப்பட இருக்கின்றது.
- மேலும், 'அனைவருக்குமான 21 ஆம் நூற்றாண்டின் வாய்ப்புகளை உணர்ந்து கொள்ளுதல்' என்ற கருப்பொருளின் கீழ் சவுதி ஜி20 கூட்டத்தின் முன்னுரிமைகள் குறித்து இவர்கள் விவாதிக்க இருக்கின்றனர்.
- ஜி 20 அமைப்பின் தலைவர் பதவியை வகித்த முதலாவது அரபு நாடு சவுதி அரேபியாவாகும்.
- கடந்த ஆண்டு ஜி20 உச்சி மாநாடானது ஜப்பானின் ஒசாகாவில் நடைபெற்றது.

## ஆர்ட்டெமிஸ் திட்டம்

- ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் மூலம், நாசா 2024 ஆம் ஆண்டிற்குள் முதல் பெண்ணையும் அடுத்த ஆணையும் சந்திரனில் தரையிறக்க இருக்கின்றது.
- இவ்வாறு விண்வெளி வீரர்களை சந்திரனில் தரையிறக்கி ஆய்வு செய்து, அங்கு கற்றுக் கொண்ட தகவல்களைப் பயன்படுத்தி நாசா அமைப்பானது செவ்வாய்க் கிரகத்திற்கு விண்வெளி வீரர்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

## போர்க் குற்றங்கள் தொடர்பான UNHRCன் தீர்மானத்திலிருந்து இலங்கை விலகல்

- இலங்கை அரசு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (United Nations Human Rights Council - UNHRC) தீர்மானத்திலிருந்து விலகுகின்றது.
- இந்தத் தீர்மானத்தின் முக்கிய நோக்கம் தமிழ் விடுதலைப் புலிகள் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போர்க்கால வன்முறைகள் பற்றிய விசாரணை ஆகும்.
- மனித உரிமைகள் ஆணையம் என்பது ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பில் உள்ள அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அமைப்பு ஆகும்.
- இது உலகெங்கிலும் உள்ள அனைத்து மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் 47 உறுப்பு நாடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## பொருளாதார ஆய்வு அறிக்கை 2020

- 2020 ஆம் நிதியாண்டின் பொருளாதார ஆய்வறிக்கையானது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.
- இந்த ஆய்வறிக்கையானது நாட்டின் பொருளாதாரப் போக்குகள், கடந்த 12 மாதங்களில் நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் வளங்கள் குறித்து அறிய உதவுகின்றது.
- பொருளாதார ஆய்வறிக்கை 2020இன் கருப்பொருளானது "வளங்களை உருவாக்குதல், வணிக சார்புக் கொள்கைகளை மேம்படுத்துதல், பொருளாதாரத்தில் நம்பிக்கையை வலுப்படுத்துதல்" என்பதாகும்.
- பொருளாதார விவகாரத் துறையின் பொருளாதாரப் பிரிவானது தலைமைப் பொருளாதார ஆலோசகரான டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியனின் வழிகாட்டுதலின் படி இந்த ஆய்வறிக்கையைத் தயாரித்துள்ளது.




### *முக்கியக் கூறுகள்*

- இந்த ஆய்வறிக்கையின் படி, தற்போதைய ஆண்டின் வளர்ச்சி 5% ஆகும்.
- 2020-21 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6% முதல் 6.5% வரை இருக்கும்.
- 2020 ஆம் நிதியாண்டின் (2019-20) தொழில்துறை வளர்ச்சியானது 2.5% ஆகும்.
- 2019 (2018-19) ஆம் நிதியாண்டின் அந்நிய செலாவணி இருப்பு 461.2 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

- 2020 ஆம் நிதியாண்டின் பொருட்கள் மற்றும் சேவை வரி வசூலிப்பானது 4.1% அதிகரித்துள்ளது.
- உலக வங்கியின் தொழில்முனைவோர் குறித்த தரவுப்படி, புதியதாக உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையில், உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது என்று இந்த ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.
- சேவைத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய நிறுவன உருவாக்கமானது உற்பத்தி, உள்கட்டமைப்பு அல்லது விவசாயத் துறைகளை விட கணிசமாக அதிகமாக உள்ளது.
- குஜராத், மேகாலயா, புதுச்சேரி, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உற்பத்தித் துறையில் தொழில் முனைவோர் செயல்பாடானது அதிகமாக உள்ளது என்று இந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றது.
- இந்தியா 2024-25 ஆம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள பொருளாதாரத்தை அடைய, உள்கட்டமைப்புத் துறையில் 1.4 டிரில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவிட வேண்டும் என்று இந்த ஆய்வறிக்கை கூறுகின்றது.
- 2013-14 ஆம் ஆண்டில் 64.2 சதவீதமாக இருந்த அரசினால் சுகாதார நலத் துறைக்குச் செலவிடப்படும் தொகையானது 2016-17 ஆம் ஆண்டில் 58.7 சதவீதமாக குறைந்துள்ளது.
- இந்த ஆய்வறிக்கையின் படி, இந்தியப் பொருளாதாரத்தில் 55% சேவைத் துறை பங்காற்றுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரலில் 3.2 சதவீதத்திலிருந்த பணவீக்கம் 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் 2.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது பொருளாதாரத்தில் தேவை பலவீனமடைவதை பிரதிபலிக்கின்றது.



- 2011-12 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை பெண்களின் வேலைவாய்ப்பு 8% அதிகரித்துள்ளது.
- கால்நடை
    - இந்த ஆய்வறிக்கையின் படி, கிராமப்புறக் குடும்பங்களின் வருமானத்தின் இரண்டாம் நிலை ஆதாரமாக கால்நடைகள் மாறிவிட்டன.
    - கால்நடைகளின் வளர்ச்சியானது கடந்த 5 ஆண்டுகளில் 7.9% ஆக உள்ளது.
- பசுமை இந்தியா
    - காடு மற்றும் மரங்களின் பரப்பு 80.73 மில்லியன் ஹெக்டேரை எட்டியுள்ளது என்றும் இந்த ஆய்வறிக்கை கூறுகின்றது.
    - இது நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவில் 24.56% ஆகும்.
- ஆயுஷ்மான் பாரத் திட்டம்
    - இந்தத் திட்டமானது 2022 ஆம் ஆண்டுக்குள் 150000 சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்களை (Health and Wellness Centres - HWC) அமைக்க முன்மொழியப் பட்டுள்ளது.
    - 2020 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி வரை இதுவரை 28,005 HWC கள் அமைக்கப் பட்டுள்ளன.
- வேலை உருவாக்கம்
    - 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017-18 ஆம் ஆண்டில் சம்பள ஊழியர்கள் அல்லது வழக்கமான ஊதிய ஊழியர்களின் வேலை உருவாக்கம் 5% அதிகரித்துள்ளது.
    - சுமார் 2.62 கோடி புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.
- பசுமைப் பத்திரச் சந்தை
    - சீனாவுக்குப் பிறகு வளர்ந்து வரும் இரண்டாவது பெரிய பசுமைப் பத்திரச் சந்தையாக இந்தியா மாறியுள்ளது.
    - சுற்றுச்சூழல் குறித்த நிலையான முதலீடுகளை அதிகரிக்க 2019 ஆம் ஆண்டில் இந்தியா சர்வதேச நீடித்த சுற்றுச்சூழல் நிதியத்தின் தளத்துடன் இணைந்தது.



## நிதிநிலை அறிக்கை 2020-21

- 2020 - 21 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்தார்.
- இந்த நிதிநிலை அறிக்கையானது பின்வரும் மூன்று முக்கிய கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டது. அவையாவன:
  - இந்தியாவின் இலக்கு.
  - அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சி.
  - சமூக நலன் - மனிதாபிமானம் மற்றும் இரக்கம்.

*நிதிநிலை அறிக்கை*

- இந்தியாவின் நிதிநிலை அறிக்கை என்பது நாட்டின் விரிவான வருடாந்திர நிதிநிலை அறிக்கையாகும்.
- மத்திய நிதிநிலை அறிக்கையானது அரசாங்கத்தின் நிதி, அதன் வருவாய் மற்றும் செலவுகள் ஆகியவை பற்றிய விரிவான கணக்கைக் கொண்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் 112வது சரத்தில் குறிப்பிட்டுள்ள படி,
  - ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை, அந்த ஆண்டிற்கான அதன் மதிப்பிடப்பட்ட ரசீதுகள் மற்றும் செலவினங்களின் அறிக்கையை மத்திய அரசு நாடாளுமன்றத்தின் இரு அவையிலும் சமர்ப்பிக்கின்றது.

*சிறப்பம்சங்கள்*

- மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பொறுத்தவரை இந்தியா தற்பொழுது உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இருக்கின்றது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இயல்பு வளர்ச்சி - 10% (2020-21).
- நிதிப் பற்றாக்குறை - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.8% (2019-20), மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5% (2020-21).
- வருவாய்ப் பற்றாக்குறை - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7% (2020-21).
- 15வது நிதி ஆணையமானது மாநிலங்களுக்கான மத்திய வரிகளின் மாநிலப் பங்கை ஒரு சதவீதம் குறைத்து 41% ஆக குறைத்துள்ளது.

**WHO GETS WHAT IN BUDGET 2020-21** (UNION BUDGET 2020)

**TOTAL OUTLAY (IN ₹CRORE)**

| | | | |
|---|---|---|---|
| Agriculture & allied activities | 2.83 lakh | Development of Industry & Commerce | 27,300 |
| Transfort Infra | 1.7 lakh | Power & Renewable energy | 22,000 |
| Defence pension | 1.33 lakh | Swachh Bharat Mission | 12,300 |
| Education | 99,300 | Sr. citizens & Divyang | 9,500 |
| Welfare of SCs & OBCs | 85,000 | Bharat Net Program | 6,000 |
| Healthcare | 69,000 | Development of Ladakh | 5,958 |
| Welfare of STs | 53,700 | Clean Air | 4,400 |
| Nutrition programme | 35,600 | Ministry of Culture | 3,150 |
| Development of J&K | 30,757 | Tourism & Development | 2,500 |
| Women-specific programmes | 28,600 | Hosting G-20 Summit | 100 |

- புதிய வரி உச்ச வரம்புகள் மற்றும் குறைந்த வருமான வரி விகிதங்கள்.
- மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு 5% சுகாதாரத் தீர்வை விதிக்கப் படும்.
- வேளாண்மை தொடர்பான 16 செயல் திட்டங்களுக்கு ரூ. 2.83 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு.
- வங்கி வைப்புக் காப்பீட்டுத் தொகையானது ஒரு வைப்புத் தொகைதாரருக்கு ரூ. 1 லட்சத்திலிருந்து ரூ. 5 லட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது.

## இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் ரிசர்வ் வங்கியின் 6வது நாணயக் கொள்கை

- ரிசர்வ் வங்கியானது (Reserve Bank of India - RBI) இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் 2020-21க்கான தனது 6வது நாணயக் கொள்கை விகிதங்களை மகாராஷ்டிராவின் மும்பையில் அறிவித்தது.
- பணவியல் கொள்கைக் குழுவின் இந்த கொள்கை மறுஆய்வுக் கூட்டமானது ரிசர்வ் வங்கியின் ஆளுநரான சக்திகாந்த தாஸ் தலைமையில் நடைபெற்றது.

| Policy Rates under Liquidity Adjustment Facility (LAF) | Value |
|---|---|
| **Repo Rate** | 5.15% |
| **Reverse Repo Rate** | 4.90% |
| **Marginal standing facility (MSF) Rate** | 5.40% |
| **Bank Rate** | 5.40% |
| **Reserve Ratios** | |
| **Cash reserve Ratio (CRR)** | 4% |
| **Statutory Liquidity Ratio (SLR)** | 18.25% |
| **GDP Prediction for 2020-21** | 6 % (from 5 % in FY20) |
| **CPI Inflation- H1:2020-21** | 5.4-5.0 % |

## சிறந்த 500 வங்கி நிறுவனங்கள் - 2020

- வங்கியாளர்களின் "2020 ஆம் ஆண்டின் சிறந்த 500 வங்கி நிறுவனங்கள்" என்ற அறிக்கையின்படி, உலகளாவிய வங்கிகளிடையே 'நிறுவன மதிப்பில் உயர் அதிகரிப்பு' கொண்ட வங்கிகளின் பட்டியலில் இந்தியாவின் இண்டஸ்இண்ட் வங்கியானது முதலிடத்தில் உள்ளது.
- இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக, "நாட்டின் மொத்த நிறுவன மதிப்பில் சிறந்த 50 நாடுகள்" என்ற பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தப் பட்டியலில் 2019 ஆம் ஆண்டில் 10வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 8வது இடத்தில் உள்ளது.

## முதலீடுகளை ஈர்க்கக் கூடிய சிறந்த மாநிலங்கள் - ரிசர்வ் வங்கி

- முதலீடுகளை ஈர்க்கக் கூடிய சிறந்த மாநிலங்கள் குறித்த தரவுகளை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.
- 2018 - 19 ஆம் ஆண்டில், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த செலவில் ஆந்திர மாநிலமானது அதிக பங்கைக் கொண்டிருந்தது.
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத், தெலுங்கானா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இருப்பினும், 2014-15 ஆண்டு முதல் 2018-19 ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் இருந்தது. அதனைத் தொடர்ந்து குஜராத் இருந்தது.
- ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் ஒரு திட்டம் அனுமதிக்கப் படுவதனைத் தீர்மானிக்கும் காரணிகள் பின்வருமாறு:
    - திட்டம் செயல்படுத்தப்பட உள்ள இடம்
    - மூலப்பொருட்களின் அணுகல்
    - திறமையான உழைப்பாளர்கள் கிடைத்தல்
    - போதுமான உள்கட்டமைப்பு
    - சந்தை அளவு
    - வளர்ச்சி வாய்ப்புகள்

## USTR அமைப்பின் வளரும் நாடுகளின் பட்டியலில் இருந்து இந்தியா நீக்கம்

- அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதிகள் (United States Trade Representative - USTR) அமைப்பானது வளரும் நாடுகளின் பட்டியலிலிருந்து இந்தியாவை நீக்கியுள்ளது.
- இந்தப் பட்டியலில் உள்ள நாடுகளானவை ஈடுசெய் வரிகள் (Countervailing duties) தொடர்பாக முன்னுரிமை நன்மைகளை கோரத் தகுதியுடைய நாடுகளாகும்.
- தற்போது USTR அமைப்பானது இந்தியாவுடன் சேர்த்து வேறு சில நாடுகளையும் இந்தப் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- அமெரிக்கா இந்தியாவிலிருந்து வரும் பொருட்களுக்கு ஈடுசெய் வரி விதிப்பதை இது எளிதாக்கும்.

### *இந்தியா நீக்கப்பட்டதற்கான காரணம்*

- USTR அமைப்பின் கூற்றுப்படி, 2017 ஆம் ஆண்டில் உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு ஏற்றுமதியில் 2.1% ஆகவும், இறக்குமதியில் 2.6% ஆகவும் இருந்தது.
- இந்தியா ஜி20 உறுப்பு நாடுகளின் பொருளாதாரத்தில் உலகளாவிய பொருளாதார உற்பத்தி மற்றும் வர்த்தகத்தின் பெரிய பங்குகளைக் கொண்டுள்ளது.
- மேலும், ஜி20 நாடுகளின் அமைப்பில் இந்தியா ஒரு பகுதியாக இருக்கின்ற காரணத்தால் 12,375 டாலருக்கும் குறைவான தனிநபர் மொத்த தேசிய வருமானம் கொண்ட நாடாக இருந்த போதிலும் இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக வகைப்படுத்தலாம்.

## தேசிய நிதி உள்ளடக்கத்திற்கான உத்தி 2019-24

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) சமீபத்தில் 2019-24 ஆண்டின் நிதி உள்ளடக்கத்திற்கான தேசிய உத்தியை வெளியிட்டுள்ளது.
- 'நிதி சார்ந்த விழிப்புணர்வு மற்றும் மேம்படுத்தப்பட்ட இந்தியா'வை உருவாக்குவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.
- இது முறையான மற்றும் குறைந்த நிதிச் சேவைகளை வழங்குவதையும் வாடிக்கையாளர்களிடையே நிதி சார்ந்த கல்வியறிவை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிதி உள்ளடக்க ஆலோசனைக் குழுவின் உதவியுடன் ரிசர்வ் வங்கி இந்த உத்தியை வெளியிட்டுள்ளது.
- இந்த உத்தியின் சில பரிந்துரைகள்:
  - 5 கி.மீ. தொலைவில் நிதிச் சேவை வழங்குநர்களை அமைத்தல்.
  - 2022க்குள் பொதுக்கடன் பதிவை (Public Credit Registry) முழுமையாக இயக்குதல், மற்றும் பிற.

## வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட முனையம்

- மும்பை விமான நிலையமானது சமீபத்தில் வேளாண் மற்றும் மருந்து தயாரிப்புகளை சேமித்து வைக்கும் உலகின் மிகப்பெரிய வெப்பநிலைக் கட்டுப்பாட்டு வசதியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள "ஏற்றுமதி குளிர்ச்சி மண்டலமானது" 700 டன்களுக்கும் அதிகமான சரக்குகளை வைத்திருக்கும் திறன் கொண்டது.
- மும்பை விமான நிலையமானது IATA CEIV PARMA அங்கீகாரத்தைப் பெற்ற உலகின் சில விமான நிலையங்களில் ஒன்றாகவும் நாட்டின் முதலாவது விமான நிலையமாகவும் ஆசியாவில் மூன்றாவது விமான நிலையமாகவும் திகழ்கின்றது.
- இது சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தினால் (IATA - International Air Transport Association) வழங்கப்படும் ஒரு அங்கீகாரமாகும்.
- உலகெங்கிலும் உள்ள மருந்துத் தயாரிப்புகளின் விநியோகத் தொடரை மேம்படுத்தும் பொருட்டு, மருந்துத் தளவாடத்தில் சுயாதீன மதிப்பீட்டாளர்களுக்கான சிறப்புமிகு மையமானது (Centre of Excellence for Independent Validators in Pharmaceuticals Logistics - CEIV Pharma) IATAவினால் தொடங்கப்பட்டுள்ளது.

## PM - KISAN சம்மன் நிதி திட்டம்

- இது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 அன்று ஒரு வருடத்தை நிறைவு செய்தது.
- பிரதான் மந்திரி கிசான் கைபேசிச் செயலியானது மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமரால் தொடங்கி வைக்கப் பட்டது.
- இத்திட்டமானது ஆரம்பத்தில் 2 ஹெக்டேர் வரை நிலத்தை வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 6000 ரூபாய் வருமான நிதியுதவியை வழங்கியது.

- பின்னர், இது விவசாயிகள் வைத்திருக்கும் நிலங்களின் அளவைப் பொருட்படுத்தாமல் அனைத்து விவசாயிகளுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது.
- இத்திட்டமானது மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### ஹுனார் ஹாத்

- இது சமீபத்தில் புது தில்லியில் நடைபெற்றது.
- இது "USTTAD" என்ற திட்டத்தின் கீழ் மத்திய சிறுபான்மை விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது சிறுபான்மையினச் சமூகங்களைச் சேர்ந்த கைவினைஞர்களால் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் மற்றும் பாரம்பரியத் தயாரிப்புகளின் கண்காட்சியாகும்.
- USTTAD (Upgrading the Skills and Training in Traditional Arts/Crafts for Development scheme) ஆனது "மேம்பாட்டுத் திட்டத்திற்கான பாரம்பரிய கலைகள்/கைவினைப் பொருள்கள் மீதான திறன்கள் மற்றும் பயிற்சியினை மேம்படுத்துதல்" என அழைக்கப்படுகின்றது.
- சிறுபான்மையினச் சமூகங்களின் பாரம்பரியக் கலைகள் மற்றும் கைவினைப் பொருட்களின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதும் பாரம்பரியக் கைவினைஞர்களின் திறனை வளர்ப்பதும் உலகளாவியச் சந்தையுடன் பாரம்பரிய திறன்களின் இணைப்புகளை நிறுவுவதும் இதன் நோக்கமாகும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### திரள் வெடிப்பு நிகழ்வு

- நமது அண்டத்தில் காலப்போக்கில் வெவ்வேறு விகிதங்களில் திரள் வெடிப்பு நிகழ்வு நடப்பதாக வானியலாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- திரள் என்பது ஈர்ப்பு விசையினால் ஏற்படும் பொருள்கள் சேகரிப்பின் மூலம் கிரகங்கள் மற்றும் பிற விண்வெளிக் கோள்கள் உருவாகும் நிகழ்வாகும்.
- சில நேரங்களில் உருவாகும் நட்சத்திரமானது ஒரு பெரிய அளவிலான பொருளை விழுங்குகின்றது. இதன் விளைவாக மிகப் பெரிய நட்சத்திரத்தில் வெடிப்பு நிகழ்வுகள் ஏற்படுகின்றன. இது திரள் வெடிப்பு நிகழ்வு என்று அழைக்கப்படுகின்றது.
- திரள் வெடிப்பு நிகழ்வானது முதன்முதலில் 2016 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மேசர் கண்காணிப்பு அமைப்பானது ரேடியோ தொலைநோக்கிகளைப் பயன்படுத்தி இந்த நிகழ்வைக் கண்காணிக்கின்றது.



## ஸ்பிட்சர் தொலைநோக்கி

- நாசாவின் ஸ்பிட்சர் விண்வெளித் தொலைநோக்கியானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றது.
- நாசாவின் ஸ்பிட்சர் திட்டமானது அண்டத்தை அகச்சிவப்பு ஒளியின் மூலம் 16 ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வு செய்துள்ளது.
- ஸ்பிட்சர் விண்வெளித் தொலைநோக்கியானது 2003 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- நாசா ஆய்வுத் திட்டத்தின் கடைசித் திட்டம் இதுவாகும். 1990 மற்றும் 2003க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் தொடங்கப்பட்ட நான்கு தொலைநோக்கிகள் (ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி உட்பட) திட்டத்தை நாசா தொடங்கியுள்ளது.



- வெவ்வேறு அகச்சிவப்பு அலைநீளங்களைப் பயன்படுத்தி, ஸ்பிட்சர் தொலைநோக்கியானது அண்டத்தின் அம்சங்களை ஆய்வு செய்து, வெளிப்படுத்தியது.
- ஸ்பிட்சர் தொலைநோக்கியானது பொதுவாகப் பொருட்களிலிருந்து வெப்ப கதிர்வீச்சைக் குறிக்கும் அகச்சிவப்புக் கற்றையின் மீது கவனம் செலுத்துகின்றது.
- 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது ஸ்பிட்சர் தொலைநோக்கியினால் ஆய்வு செய்யப்பட்ட அதே அலை நீளங்களில் உள்ள பொருள்களைக் கொண்ட பிரபஞ்சத்தைப் பற்றி ஆய்வு செய்ய இருக்கின்றது.

## சூரியனின் துருவங்களின் முதலாவது படங்களை எடுப்பதற்கான திட்டம்

- நாசாவும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனமும் இணைந்து சூரியனின் வடக்கு மற்றும் தெற்குத் துருவங்களின் முதலாவது படங்களை எடுப்பதற்காக ஒரு புதிய விண்கலத்தைச் செலுத்த இருக்கின்றன.
- இதற்கு "சூரியன் சுற்றுவட்டப் பாதை விண்கலம்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த விண்கலமானது வெள்ளி மற்றும் பூமியின் ஈர்ப்பைப் பயன்படுத்த இருக்கின்றது. இது சூரியனின் துருவங்களின் புகைப்படத்தை எடுப்பதற்காக சூரியனின் சுற்று வட்டப் பாதையிலிருந்துத் தன்னைச் சுழற்றுகின்றது.

## உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட அதிவேக விமான உயிரி எரிபொருளில் இயங்கிய IAFன் விமானம்

- இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட 10% கலவையைக் கொண்ட அதிவேக விமான உயிரி எரிபொருளினால் இயங்கும் AN - 32 விமானத்தை இந்திய விமானப்படையானது வெற்றிகரமாக இயக்கியுள்ளது.
- விமானத்தின் இரு என்ஜின்களும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட அதிவேக விமான உயிரி எரிபொருளால் இயக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இந்த விமானமானது லேஹ் நகரத்தில் உள்ள குஷோக் பாகுலா ரிம்போச்சி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது.
- இந்த எரிபொருளை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பமானது 2013 ஆம் ஆண்டில் உத்தரகண்ட் மாநிலத்தின் டேராடூனில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் - இந்தியப் பெட்ரோலிய நிறுவனத்தினால் (Council of Scientific and Industrial Research- Indian Institute of Petroleum / CSIR-IIP) உருவாக்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது எரிபொருள் சோதனைக்காக 2018 ஆம் ஆண்டில் இந்திய விமானப் படையால் ஆதரிக்கப் பட்டது.
- அதிவேக விமான உயிரி எரிபொருளானது உண்ணுவதற்குத் தகுதியற்ற 'மரத்தினால் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய்களிலிருந்து' உற்பத்தி செய்யப் படுகின்றது.
- இவை சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள பழங்குடிப் பகுதிகளில் வளர்க்கப்பட்டு, அங்கு இருந்து வாங்கப்படுகின்றன.

## கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பூசி

- ஆஸ்திரேலியாவின் ஆராய்ச்சிக் குழுவானது மிகக் கொடிய ஒரு புதிய கொரோனா வைரஸிற்கு (novel coronavirus - nCov) எதிரான தடுப்பூசி ஒன்றை உருவாக்குவதற்காக சிஎஸ்ஐஆர்ஓ (CSIRO) அமைப்பில் உள்ள ஒரு ஆய்வகத்தில் வைரஸின் முதலாவது தொகுப்பை உருவாக்கியுள்ளது.
- காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி அமைப்பானது (Commonwealth Scientific and Industrial Research Organisation - CSIRO) ஆஸ்திரேலியாவின் முன்னணி அறிவியல் நிறுவனம் ஆகும்.
- ஆஸ்திரேலியாவில் வாழும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விஞ்ஞானியான எஸ்.எஸ். வாசன் தலைமையிலான இந்த ஆராய்ச்சிக் குழுவானது இந்த வைரஸ் தொகுப்பை உருவாக்கியுள்ளது.

## ஷரங் – பீரங்கித் துப்பாக்கி

- பீரங்கித் தொழிற்சாலை வாரியமானது (OFB - Ordnance Factory Board) ஷரங் என்ற பீரங்கித் துப்பாக்கியை இந்திய ராணுவத்திடம் ஒப்படைத்துள்ளது.
- OFB என்பது மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் பாதுகாப்பு உபகரண உற்பத்தித் துறையின் கீழ் செயல்படும் ஒரு மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய தொழில்துறை அமைப்பாகும்.
- பீரங்கித் துப்பாக்கிகள் தற்போது கான்பூர் பீரங்கித் தொழிற்சாலையில் தயாரிக்கப் படுகின்றன.
- ஷரங் என்பது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட 155 மிமீ உள்விட்டம் கொண்ட பீரங்கித் துப்பாக்கியாகும்.
- இந்த துப்பாக்கி அமைப்பின் தாக்குதல் நடத்தும் வரம்பானது 12 கி.மீலிருந்து 39 கி.மீ ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது.



## வாயேஜர் 2 விண்கலம்

- ❖ நாசா தனது வாயேஜர் - 2 ஆய்வை அதன் இருப்பிடத்திலிருந்து, அதாவது கிட்டத்தட்ட 11.5 பில்லியன் மைல் தொலை தூரத்திலிருந்தே மேற்கொண்டது.
- ❖ வாயேஜர் 2 ஆனது நாசாவினால் 1977 ஆம் ஆண்டில் செலுத்தப் பட்டது.
- ❖ சூரியக் குடும்பத்தின் நான்கு பெரிய கிரகங்களை (வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன்) நெருங்கிச் சென்று ஆய்வு செய்த ஒரே விண்கலம் வாயேஜர் 2 ஆகும்.
- ❖ வாயேஜர் 2 ஆனது வியாழனில் 14வது சந்திரனைக் கண்டுபிடித்தது.
- ❖ யுரேனஸைக் கடந்து சென்ற மனிதனால் உருவாக்கப்பட்ட முதலாவது பொருள் வாயேஜர் 2 ஆகும்.
- ❖ வாயேஜர் 2 ஆனது யுரேனஸில் 10 புதிய நிலவுகளையும் இரண்டு புதிய வளையங்களையும் கண்டுபிடித்துள்ளது.
- ❖ நெப்டியூனைத் தாண்டிக் கடந்து சென்ற மனிதனால் உருவாக்கப்பட்ட முதலாவது பொருள் இதுவாகும்.
- ❖ விண்மீன் இடைவெளியில் நுழைந்த இரண்டாவது விண்கலம் (நவம்பர் 2019) இதுவாகும். இதற்கு முன்பு 2012 ஆம் ஆண்டில் வாயேஜர் 1 ஆனது விண்மீன் இடைவெளியில் நுழைந்தது.



## மரபணு இந்தியா திட்டம்

- மரபணு (ஜீனோம்) இந்தியா திட்டம் என்று அழைக்கப்படும் ஒரு லட்சிய மரபணு – குறியாக்கத் திட்டத்திற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- மரபணு என்பது ஒரு உயிரினத்தின் முழுமையான டி.என்.ஏ தொகுப்பைக் குறிக்கின்றது. அதில் அனைத்து மரபணுக்களும் உள்ளடங்கும்.
- இந்த மரபணுக்களை குறியாக்கம் செய்வது என்பது ஒரு குரோமோசோமில் உள்ள இந்த மரபணுக்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதாகும்.
- நீர்மத் திசு அழற்சி மற்றும் டுச்சேன் தசைநார் டிஸ்டிராபி போன்ற ஒற்றை மரபணு மரபுவழி கோளாறுகளுக்குக் காரணமான மரபணுக்களைக் கண்டுபிடிக்க இது பயன்படுகின்றது.
- ஜீனோம் (மரபணு) இந்தியா என்ற திட்டத்தில் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (Indian Institute of Science - IISc) மற்றும் ஒரு சில இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களும் கலந்து கொள்ள இருக்கின்றன.
- ஒரு தன்னாட்சி நிறுவனமான IIScன் மூளை ஆராய்ச்சிக்கான மையமானது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனமாகச் செயல்பட இருக்கின்றது.



## சூரியனின் துருவப் பகுதியை ஆராய்வதற்கான ஆய்வு – நாசா

- அமெரிக்காவின் நாசா மற்றும் ESA (ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் - European Space Agency) ஆகியவை சூரியனின் துருவப் பகுதிகளை ஆராய்வதற்காக சூரியனுக்கு விண்கலன்களை அனுப்பியுள்ளன.
- இந்த சூரிய சுற்று வட்டப்பாதை விண்கலமானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 அன்று ஏவப்பட்டது.
- இந்த ஆய்வு விண்கலமானது பூமி மற்றும் வெள்ளி ஆகியவற்றின் ஈர்ப்பு விசையைப் பயன்படுத்தி சூரியனில் இருந்து 26 மில்லியன் மைல் தொலைவில் தன்னை நிலை நிறுத்துகின்றது.
- இந்த ஆய்வானது முதல்முறையாக சூரியனின் துருவங்களை ஆராய இருக்கின்றது.
- இது சூரியக் காற்றைக் கண்காணிக்க விஞ்ஞானிகளுக்கு உதவ இருக்கின்றது.
- சூரியக் காற்றானது சூரியனின் மேல் வளிமண்டலத்திலிருந்து வெளியேறுகின்றது.



## ககரின் ஆராய்ச்சி மற்றும் சோதனை விண்வெளிப் பயிற்சி மையம்

- ககன்யான் விண்வெளிப் பயணத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 இந்திய விண்வெளி வீரர்கள் "ககரின் ஆராய்ச்சி மற்றும் சோதனை விண்வெளிப் பயிற்சி மையத்தில்" (Gagarin Research and Test Cosmonaut Training Centre - GCTC) தங்கள் பயிற்சியைத் தொடங்கினர்.
- GCTC என்பது விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் விண்வெளி வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு பயிற்சி அமைப்பாகும்.
- இது ரஷ்யாவின் மாஸ்கோவில் அமைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் (இஸ்ரோ) செலுத்தப் பட உள்ள இந்தியாவின் முதலாவது மனித விண்வெளித் திட்டம் ககன்யான் ஆகும்.

## நாசாவின் சூப்பர்கேம் என்னும் ரோபோ

- கனிமவியல் மற்றும் வேதியியல் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நாசா விண்வெளி ஆராய்ச்சி மையமானது செவ்வாய் கிரகத்திற்கு ‘சூப்பர்கேம்’ (SuperCam) என்ற புதிய லேசர் முறையிலான ரோபோவை அனுப்ப இருக்கின்றது.
- சிவப்புக் கோளில் புதைபடிவ நுண்ணுயிர் வாழ்விற்கான அறிகுறிகளைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகளுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொலையுணர் கருவியான இது செவ்வாய்க் கிரகம் 2020 என்னும் விண்கலத்தில் உள்ள ஏழு கருவிகளின் ஒரு பகுதியாகும்.




## சூரியக் குடும்பத்தில் நாசாவின் புதிய திட்டங்கள்

- சூரிய குடும்பத்தின் ரகசியங்களை ஆய்வு செய்வதற்காக நாசா நான்கு சாத்தியமான பயணத் திட்டங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. அவையாவன:

1. DAVINCI+ (அருவளிமம் (அருமன் வாயுக்கள்), வேதியியல் மற்றும் இமேஜிங் பிளஸ் பற்றிய ஆழ்ந்த வளிமண்டல வெள்ளி ஆய்வு - Deep Atmosphere Venus Investigation of Noble gases, Chemistry, and Imaging Plus).

- DAVINCI+ ஆனது வெள்ளிக் கோளின் வளிமண்டலத்தை ஆய்வு செய்ய இருக்கின்றது.

2. Io எரிமலை கண்காணிப்பகம் (IVO - Io Volcano Observer).
   - IVO ஆனது வியாழனின் சந்திரனை ஆராய இருக்கின்றது.
3. ட்ரைடென்ட்
   - நெப்டியூனின் தனித்துவமான மற்றும் உயர் செயல்பாடு கொண்ட பனிக்கட்டி நிலவான ட்ரைடென்ட்டை ஆராய இருக்கின்றது.
4. VERITAS (வெள்ளியின் கதிர்உமிழ்த் திறன், ரேடியோ அறிவியல், இன்சார், இடவியல் மற்றும் அலைமாலையியல் - Venus Emissivity, Radio Science, InSAR, Topography, and Spectroscopy).
   - VERITAS ஆனது கிரகத்தின் புவியியல் வரலாற்றைக் கணிப்பதற்காக வெள்ளிக் கோளின் மேற்பரப்பை வரைபடமாக்க இருக்கின்றது.

## இந்தியாவின் 11வது அண்டார்டிக் பயணம்

- தென்னாப்பிரிக்க கடல்சார் ஆய்வுக் கப்பலான எஸ்.ஏ. அகுல்ஹாஸ் கப்பலானது லூயிஸ் (மொரீஷியஸ்) துறைமுகத்திலிருந்து அண்டார்டிக் பெருங்கடலுக்கான தனது பயணத்தைத் தொடங்கியுள்ளது.
- தெற்குப் பெருங்கடல் அல்லது அண்டார்டிக் பெருங்கடலுக்கான 11வது இந்தியப் பயணம் இதுவாகும்.
- முதலாவது பயணமானது 2004 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையே நடைபெற்றது.
- இந்தப் பயணக் குழுவினரால் வழங்கப்படும் தரவுகள் கோவாவில் உள்ள தேசியத் துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையத்தின் (National Centre for Polar and Ocean Research - NCOPR) மூலம் ஆய்வு செய்யப்பட இருக்கின்றது.
  - NCOPR ஆனது மத்தியப் புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- தற்போது, இந்த ஆய்வுக் கப்பலானது “பாரதி” நிலையத்தின் அருகில் பிரிட்ஸ் விரிகுடாவில் உள்ளது.
  - அண்டார்டிகாவில் அமைந்துள்ள இந்தியாவின் மூன்றாவது ஆய்வு நிலையம் பாரதி ஆகும்.
  - மற்ற இரண்டு ஆய்வு நிலையங்கள் தக்சின் கங்கோத்ரி மற்றும் மைத்ரி ஆகியவையாகும்.

## Betelgeuse நட்சத்திரத்தின் ஒளிரும் தன்மை குறைந்துள்ளது

- பெட்டல்ஜியூஸ் (Betelgeuse) என்ற மிகப்பெரிய சிவப்பு நட்சத்திரமானது இறுதியாக முன் எப்பொழுதும் இல்லாத அளவில் தனது ஒளிரும் தன்மையை நிறுத்தியுள்ளது.
- பெட்டல்ஜியூஸ் ஆனது ஓரியன் விண்மீன் குழுவில் சுமார் 722 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

- இது 100,000 ஆண்டுகளாக ஒரு மிகப்பெரிய சிவப்பு நட்சத்திரமாக இருக்கலாம் என்று கருதப் படுகின்றது.




## சூரிய மண்டலத்திற்கு அருகிலுள்ள வெளிக்கோள்

- ரோசெஸ்டர் தொழில்நுட்ப நிறுவனத்தின் விஞ்ஞானிகள் சமீபத்தில் மற்ற எந்த கோளையும் விட பூமிக்கு மிக நெருக்கமாக உள்ள ஒரு வெளிக்கோளைக் கண்டுபிடித்துள்ளனர்.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த வெளிக்கோளிற்கு "2MASS 1155-7919 b" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது நமது சூரிய மண்டலத்திலிருந்து சுமார் 330 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- இந்த வெளிக்கோளானது பூமிக்கு நெருக்கமாக எப்சிலன் கெமிலியோன்டிஸ் என்ற விண்மீன் திரளில் அமைந்துள்ளது.



## Ra'ad-II ஏவுகணை

- அணுசக்தித் திறன் கொண்ட விமானத்திலிருந்துச் செலுத்தப்படும் "Ra'ad-II" என்ற ஏவுகணைச் சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நிகழ்த்தியது.
- இது 600 கி.மீ வரை தாக்குதல் வரம்பைக் கொண்டுள்ளது.

- இலக்குகளை அதிக துல்லியத்துடன் தாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக அதிநவீன வழிகாட்டுதல் மற்றும் வழிசெலுத்தல் அமைப்புகள் ஆகியவை இந்த ஏவுகணை அமைப்பில் பொருத்தப்பட்டுள்ளன.




## ஹோப் விண்கலம்

- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏவப்பட இருக்கும் ஹோப் விண்கலத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய அரபு அமீரகமானது ஒரு புதிய அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளது.
- ஹோப் விண்கலமானது அமீரகத்தின் செவ்வாய் திட்டம் (Emirates Mars Mission - EMM) என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்படும் அரபு நாடுகளின் முதலாவது விண்கலமாக இருக்கும்.
- இந்தத் திட்டமானது செவ்வாய் கிரகத்தின் வளிமண்டலத்தைப் படம் பிடிக்கும் முதலாவது விண்வெளி ஆய்வுத் திட்டமாக உருவெடுக்க இருக்கின்றது.



## கொழுப்பு சேர்க்கப்பட்ட உணவை உட்கொள்ளுதல்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது நாட்டில் உள்ள குடிமக்களின் உணவுப் பழக்கம் குறித்து ஆய்வு நடத்தியது.
- அசைவ உணவு உண்பவர்களை விட சைவ உணவு உண்பவர்கள் அதிக கொழுப்பை உட்கொள்வதாக ஆய்வில் கூறப்பட்டுள்ளது.
- மேலும், இந்தியாவில் உள்ள பெருநகரங்களில், தில்லி மற்றும் அகமதாபாத் ஆகிய நகரங்கள் கொழுப்பு சேர்க்கப்பட்ட உணவை உட்கொள்வதில் முன்னிலையில் உள்ளன.
- 36 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள் கொழுப்பு சேர்க்கப்பட்ட உணவை அதிக அளவில் உட்கொள்கின்றனர் மற்றும் குறைந்த அளவாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் கொழுப்பு சேர்க்கப்பட்ட உணவை குறைந்த அளவில் உட்கொள்கின்றனர்.
- "நமது உலகத்தை மாற்றியமைத்தல்: நீடித்த வளர்ச்சிக்கான செயல்திட்டம் - 2030" என்ற தீர்மானத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- உள்ளடக்கிய வளர்ச்சியை அடைவது என்பது நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாகும்.

## கல்லீரல் மாற்று சிகிச்சைக்கான புதிய தொழில்நுட்பம்

- கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்பது இறுதி நிலை கல்லீரல் செயலிழப்புக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட சிகிச்சையாகும். மேலும் இது நோயாளியின் கடைசிக் கட்ட சிகிச்சையாகும்.
- ஹைப்போதெர்மிக் ஆக்ஸிஜனேற்றப்பட்ட பெர்ஃப்யூஷனின் (Hypothermic Oxygenated Perfusion - HOPE) வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள ராணி எலிசபெத் மருத்துவமனையின் ஆண்ட்ரியா ஷ்லெகல் என்பவர் MIOT இன்டர்நேஷனல் நிறுவனத்தில் கல்லீரல் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்களுடன் உரையாடினார்.
- ஹைப்போதெர்மிக் ஆக்ஸிஜனேற்றப்பட்ட பெர்ஃப்யூஷனின் மூலம் விளிம்பு அல்லது அதிக ஆபத்துள்ள நன்கொடையாகப் பெறப்பட்ட கல்லீரல்களை இடமாற்றம் செய்ய முடியும்.
- உறுப்பு தானம் செய்பவரிடமிருந்து கல்லீரல் அகற்றப் படும்போது ஏதாவது பாதிப்புக்கு உள்ளாகி இருந்தால், அந்த பாதிப்பைச் சரி செய்வதற்கு இந்த இயந்திரம் உதவுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இறைச்சி உண்ணும் புதிய வகை டைனோசர் இனங்கள்

- அமெரிக்காவில் உள்ள உட்டா இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் இறைச்சி உண்ணும் ஒரு புதிய வகை டைனோசர் இனத்தை தொல்லுயிரியல் வல்லுனர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது வட அமெரிக்காவின் மேற்குச் சமவெளிப் பகுதிகளில் 157-152 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது இடையூழிக் காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தது.
- அலோசோரஸ் ஜிம்மண்ட்சேனி என பெயரிடப்பட்ட இந்தப் புதிய வகை இனங்கள் குறைந்தது 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகின.

## கொங்கன் சரணாலயத்தில் இந்தியக் காட்டெருமை

- அண்மையில் வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் மகாராஷ்டிராவில் உள்ள பன்சாத் வனவிலங்குச் சரணாலயத்தில் ஒரு இந்தியக் காட்டெருமை இருப்பதை முதன்முறையாக உறுதி செய்துள்ளனர்.
- காட்டெருமைகள் உலகின் மிகப்பெரிய மற்றும் மிக உயரமான வனங்களில் வாழும் காட்டெருமை இனங்களாகும்.
- இது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972ன் கீழ் அட்டவணை Iல் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்பு நிறப் பட்டியலில் "பாதிக்கப்படக் கூடிய" இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.



## மஞ்சள் சொறி நோய்

- பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் கோதுமை பயிர்களில் மஞ்சள் சொறி நோய் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.
- மஞ்சள் சொறி நோய் அல்லது பட்டை சொறி நோய் என்பது கோதுமைப் பயிரின் இலைகளின் மீது மஞ்சள் கோடுகளினால் தாக்கப்படும் ஒரு பூஞ்சை நோயாகும்.

- இது அவற்றின் ஒளிச்சேர்க்கையைப் பாதிக்கின்றது. இது தானியத்தின் அளவைக் குறைக்கின்றது.
- மழை, பனி மற்றும் மூடுபனி ஆகியவை இந்த நோயின் வளர்ச்சியை ஆதரிக்கின்றன.
- கடந்த ஆண்டு, இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தால் எச்டி - 3266 அல்லது பூசா யஷஸ்வி என்ற ஒரு புதிய வகைக் கோதுமையானது வெளியிடப்பட்டது.
- இது மஞ்சள் / பட்டை, பழுப்பு / இலை மற்றும் கருப்பு / தண்டு போன்ற பெரிய சொறி நோய் சார்ந்த பூஞ்சைகளுக்கு எதிராக அதிக அளவு எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருந்தது.



## கொரோனா வைரஸ் ஒரு தொற்றுநோய் அல்ல

- கொரோனா வைரஸ் நோயானது இன்னும் தொற்றுநோயாக மாறவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் (World Health Organization –WHO) அறிவித்துள்ளது.
- இந்த நோயானது இதுவரை 560 நபர்களை பலி கொண்டுள்ளது. இந்த நோயானது 20,000க்கும் மேற்பட்டவர்களுக்குத் தொற்றியுள்ளது.
- தற்பொழுது, WHOன் தொற்றுநோய்களின் பட்டியலில் எச்ஐவி, 2009 காய்ச்சல், ஸ்பானிஷ் காய்ச்சல் மற்றும் எச்1 என்1 ஆகியவை உள்ளன.

## தேசிய விளையாட்டுகளுக்கானப் புதிய சின்னம்

- 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் சின்னமாக சுடர் தொண்டை கொண்ட புல்புல் வகை பறவையானது (ஒரு வகை குருவி இனம்) தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- தேசிய விளையாட்டுப் போட்டியின் 36வது பதிப்பினை கோவா மாநிலம் நடத்த இருக்கின்றது.
- சுடர் தொண்டை கொண்ட புல்புல் வகை உயிரினமானது (பைக்னோநோட்டஸ் குலாரிஸ்) குருவி இனத்தைச் சேர்ந்த புல்புல் வகை குடும்பத்தில் உள்ள ஒரு பறவையாகும்.
- இவை ரூபிகுலா என்றும் அழைக்கப் படுகின்றன. மேலும் இது கோவாவின் மாநிலப் பறவையாகவும் விளங்குகின்றது.
- இது தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள காடுகளில் மட்டுமே காணப்படுகின்றது.

- இந்தப் பறவையானது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்பு நிறப் பட்டியலில் "தீவாய்ப்பு கவலை குறைந்த இனமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- இது வனவிலங்குப் பாதுகாப்பு சட்டம், 1972ன் கீழ் அட்டவணை IVல் பட்டியலிடப் பட்டுள்ளது.




## உலகின் பழமையான மூங்கில் புதைபடிவம்

- 1941 ஆம் ஆண்டில் பட்டகோனியாவில் முன் ஊழிக் காலத்தின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு இலைக் கிளையின் புதைபடிவமானது இன்றும் உலகின் மிகவும் பழமையான மூங்கில் என்று கருதப் படுகின்றது.
- மேலும் பென்சில்வேனியா மாகாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பீட்டர் வில்ப் என்பவரால் சமீபத்தில் நடத்தப்பட்ட சோதனையின் போது இந்தத் தாவரத்தின் உண்மைத் தன்மையானது (சுஸ்கியா ஆக்ஸிஃபில்லா) தெரிய வந்தது.
- பண்டைய கோண்டுவானாவின் தெற்கு நிலப் பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மூங்கில் பெரும் புதைபடிவமானது பழமையானதாகக் கருதப்படுகின்றது. இந்த நிலையில் தற்போதைய திருத்தப்பட்ட இந்த ஆய்வானது முக்கியமானதாகக் கருதப் படுகின்றது.
- வடக்கு அரைக் கோளத்தில் மூங்கில் இருப்பதற்கான மிகப் பழமையான நுண் புதைபடிவங்கள் இருப்பதற்கான சான்றுகள் மத்திய முன் ஊழிக் காலத்தைச் சேர்ந்தவையாக உள்ளன.
- மற்ற தென் அமெரிக்கப் புதைபடிவங்கள் பிளியோசீன் காலக் கட்டத்தை விட பழமையானவை அல்ல.



## புதிய இயற்கை எரிவாயுப் பகுதி

- ஐக்கிய அரபு அமீரகமானது 'ஜெபல் அலி எரிவாயுப் பகுதி' எனப்படும் மிகப்பெரிய ஆழமற்ற எரிவாயு வளங்களைக் கண்டுபிடித்துள்ளது.
- இது அபுதாபி மற்றும் துபாய் ஆகியவற்றின் எல்லைப் பகுதியில் 5,000 சதுர கிலோமீட்டர் (சதுர மீட்டர்) பரப்பளவில் 80 டிரில்லியன் நிலையான கன அடி எரிவாயு இருப்பதாக மதிப்பிட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பானது ஐக்கிய அரபு அமீரகத்தின் எரிவாயுவில் தன்னிறைவை அடைவதற்கான நோக்கத்தை மேம்படுத்துவதோடு பெரிய வளர்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்த உதவ இருக்கின்றது.

## எறும்புத் திண்ணியிலிருந்து கொரோனா வைரஸ் பரவுதல்

- கொரோனா வைரஸின் பாதிப்பிற்கு எறும்புத் திண்ணி காரணம் என்று சீனாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இவர்களைப் பொறுத்த வரை, சீனாவில் சுமார் 636 மக்களைக் கொன்ற கொரோனா வைரஸ் பாதிப்பானது வுஹான் நகரில் உள்ள ஒரு சந்தையிலிருந்த எறும்புத் திண்ணிகள் மூலமாக ஏற்பட்டது.
- எறும்புத் திண்ணியிலிருந்து பிரிக்கப்பட்ட கொரோனா வைரஸின் மரபணுத் தொகுப்பானது கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்பட்ட வைரஸ் தொகுப்புகளை 99% ஒத்திருக்கின்றது.

*எறும்புத் திண்ணி*

- சீனாவில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் எறும்புத் திண்ணி பயன்படுத்தப் படுகின்றது.
- புவியில் வாழும் செதில்களைக் கொண்ட ஒரே பாலூட்டி இதுவாகும்.
- ஆசியாவில் அதிக அளவில் கடத்தப்பட்ட பாலூட்டி இனம் இதுவாகும்.
- இந்த வைரஸானது எறும்புத் திண்ணி வர்த்தகத்தின் மூலம் சீனாவிற்குள் நுழைந்ததாக சந்தேகிக்கப் படுகின்றது.
- சீன எறும்புத் திண்ணியானது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்புப் பட்டியலில் (International Union for Conservation of Nature - IUCN) "மிகவும் அச்சுறு நிலையில் உள்ள இனமாகப்" பட்டியலிடப் பட்டுள்ளது.
- IUCNன் சிவப்புப் பட்டியலில் இந்திய எறும்புத் திண்ணியானது (மனிஸ் கிராசிகுடாட்டா) "அருகி வரும் இனமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.

## மெராபி எரிமலை வெடிப்பு

- மெராபி எரிமலை வெடித்து சாம்பல் மற்றும் புகையை வான் நோக்கி மூன்று மைல்கள் தொலைவிற்கு வெளியேற்றி வருகின்றது.
- மெராபி என்பது மத்திய ஜாவா மற்றும் இந்தோனேசியாவின் யோக்யகர்தா மாகாணங்களுக்கு இடையிலான எல்லையில் அமைந்துள்ள ஒரு செயல்படும் எரிமலை ஆகும்.

- இந்தோனேசியாவில் உள்ள அதிக விளைவுகளை ஏற்படுத்தும் இந்தச் செயல்படும் எரிமலையானது 1548 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெடித்து வருகின்றது.




## யாரா வைரஸ்

- பிரேசிலில் உள்ள ஒரு ஏரியில் வழக்கத்திற்கு மாறாக ஒரு சிறிய வைரஸை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- பிரேசிலியப் புராணங்களில் நீர் ராணி உருவமான 'யாரா' என்பதன் பெயரால் இந்த வைரஸிற்கு யாரா வைரஸ் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- யாரா வைரஸ் ஆனது அமீபாவைப் பாதிக்கின்றது.
- இது தற்பொழுது வரை வரையறுக்கப்படாத மரபணுக்களைக் கொண்டுள்ளது.
- யாரா வைரஸ் மனித உயிரணுக்களைப் பாதிக்காது.




## த்வைட்ஸ் பனிப்பாறை உருகுதல்

- ஒரு புதிய ஆய்வானது த்வைட்ஸ் பனிப்பாறைக்கு அடியில் ஒரு முக்கிய இடத்தில் வெதுவெதுப்பான நீர் இருப்பதைக் கண்டறிந்துள்ளது. இந்த வெதுவெதுப்பான நீரானது த்வைட்ஸ் பனிப்பாறை உருகுதலுக்குக் காரணமாக இருக்கின்றது.
- இந்த ஆய்வானது பனிப்பாறையின் தரைமட்ட மண்டலத்தில் நீரின் வெப்ப நிலையானது நீரின் உறைநிலையை விட இரண்டு டிகிரி அதிகமாக இருப்பதைக் கண்டறிந்துள்ளது.

*த்வைட்ஸ் பனிப்பாறை*

- த்வைட்ஸ் பனிப்பாறையானது 120 கி.மீ அகலத்துடன் வேகமாக நகரும் பனிப் பாறையாகும். இது அண்டார்டிகாவில் அமைந்துள்ளது.
- இதன் உருகுதலானது ஒவ்வொரு ஆண்டும் 4% உலகளாவிய கடல் மட்ட உயர்விற்குக் காரணமாக இருக்கின்றது.
- த்வைட்ஸ் பெரும்பாலும் "டூம்ஸ்டே பனிப்பாறை" என்றும் அழைக்கப் படுகின்றது.




## அண்டார்டிகாவில் மிக அதிக வெப்பநிலை பதிவு

- அண்டார்டிகா முதன்முறையாக அதன் அதிகபட்ச வெப்பநிலையான 20.75 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையைப் பதிவு செய்துள்ளது என்று உலக வானிலை அமைப்பானது அறிவித்துள்ளது.
- இதுவரை, இங்கு மிக அதிகபட்சமாக 18.3 டிகிரி செல்சியஸ் என்ற வெப்பநிலையானது 1982 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் பதிவாகி இருந்தது.
- எல் நினோ மற்றும் பெருங்கடல் நீரோட்டங்களில் ஏற்படும் மாற்றங்களால் இங்கு அதிக வெப்பநிலையானது பதிவாகி இருந்தது.
- அண்டார்டிக் பகுதியானது உலகில் 70%க்கும் அதிகமான தூய்மையான நீரைச் சேமிக்கின்றது.
- இது உருகினால், கடல் மட்டமானது 50 முதல் 60 மீட்டர் வரை அதிகரிக்கும்.

## நகர்ப்புற பல்லியின் புதிய இனங்கள்

- அசாமின் குவஹாத்தியில் நகர்ப்புற - வளைந்த கால்விரலைக் கொண்ட கெக்கோ (சைர்டோடாக்டைலஸ் நகர்ப்புறம்) என்ற ஒரு புதிய வகைப் பல்லியானது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த வகைப் பல்லியானது முன்பு மேகாலயாவின் காசி மலைப் பல்லியைப் போன்றதாகக் கருதப் பட்டது.

- இந்த வகைப் பல்லி இனங்கள் பெரும்பாலும் சிறியவையாகவும் மென்மையான தோலுடன் இரவு நேர ஊர்வனவாகவும் உள்ளன.



## புலம்பெயர்ந்த வன விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பான பங்காளர்கள் மாநாடு

- புலம்பெயர்ந்த (இடம்பெயர்ந்த) வன விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தின் (conservation of migratory species of wild animals - CMS) 13வது பங்காளர்கள் மாநாடானது (COP-13) இந்தியாவால் குஜராத்தில் உள்ள காந்திநகரில் நடத்தப்பட்டது.
- இந்தியா முதன்முறையாக இந்த மாநாட்டை நடத்தியது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், "புலம்பெயர்ந்த இனங்கள் கிரகத்தை இணைக்கின்றன, நாம் அவற்றை வரவேற்கிறோம்" என்பதாகும்.
- CMSன் COP-13க்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சின்னம் இந்தியக் கானமயில் ஆகும்.

### *Gibi (கிபி)*

- இந்த மாநாட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சின்னமான இந்தியக் கானமயில் ஆனது 'கிபி' என்று பெயரிடப் பட்டுள்ளது.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்பு நிறப் பட்டியலில் இந்தியக் கானமயில் ஆனது "மிகவும் அருகி வரும் இனமாகப்" பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்த இனத்திற்கு வனவிலங்கு பாதுகாப்பு சட்டம், 1972ன் கீழ் மிக உயர்ந்த பாதுகாப்பு அங்கீகாரமானது (அட்டவணை I ல் பட்டியலிடப் பட்டுள்ளது) வழங்கப் பட்டுள்ளது.

### *விலங்குகள் தொடர்பான கலாச்சாரம்*

- எண்ணெய்த் திமிங்கலம் மற்றும் மனிதக் குரங்கு ஆகியவை அந்த இனங்களின் கலாச்சாரத்தின் அடிப்படையில் பாதுகாப்பதற்காகத் திட்டங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.
- இதுபோன்ற முன்மொழிவு உலகில் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறையாகும்.

### *உயிர் பன்முகத் தன்மை*

- புலம்பெயர்ந்த உயிரினங்களின் 13வது மாநாடானது உயிர் பன்முகத் தன்மை குறித்து நடத்தப்பட்ட முதலாவது சந்திப்பாகும்.
- இந்த மாநாடானது புலம்பெயர்ந்த இனங்கள் மீதான உள்கட்டமைப்பின் தாக்கங்களைத் தணிக்கக்கூடிய வழிகாட்டுதல் கூறுகளைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பரிசீலிக்கின்றது.

- இதுவரை, பெரிய பாலூட்டிகளுக்கான உள்கட்டமைப்பு அச்சுறுத்தல்கள் மத்திய ஆசியப் பாலூட்டிகளின் முன்முயற்சியினால் நிர்வகிக்கப்பட்டன.
- CMS வழிகாட்டுதல்கள் தற்போது நீருக்கடியில் ஏற்படும் இடர்ப்பாடுகளின் (இரைச்சல்கள்) மீது மட்டுமே கவனம் செலுத்துகின்றன.
- இது உள்கட்டமைப்பு மேம்பாடு தொடர்பான அச்சுறுத்தல்கள் மீது கவனம் செலுத்துவதில்லை.
- இந்த மாநாட்டின் போது புலம்பெயர்ந்த உயிரினங்களில் பூச்சிகள் வீழ்ச்சியடைவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து முதல்முறையாக விவாதிக்கப்பட இருக்கின்றது.
- ஐரோப்பிய ஒன்றியத்தால் முன்மொழியப்பட்ட EUROBATS என்ற ஒப்பந்தமானது பூச்சி குறைதலை மையமாகக் கொண்ட இதே வகையைச் சேர்ந்த ஒரு ஒப்பந்தமாகும்.

***தொலைநோக்குப் பார்வைத் திட்டம் (2020-2030)***

- மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது நாட்டில் சுற்றுச்சூழல் அமைப்புகள், வாழ்விடங்கள், பறவைகள் பன்முகத் தன்மை மற்றும் இயற்கைக் காட்சிகளைப் பாதுகாப்பதற்காக தொலைநோக்குப் பார்வைத் திட்டத்தை (2020-2030) தொடங்கியுள்ளது.
- இந்த வரைவின் படி, இந்தியாவில் 1,317 பறவை இனங்கள் உள்ளன.
- இவற்றில் 72 இனங்கள் மிகப் பரவலாகப் பரவியும் 100 இனங்கள் அச்சுறுத்தல் நிலையிலும் 17 இனங்கள் அருகி வரும் நிலையிலும் 63 இனங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையிலும் 20 இனங்கள் ஆபத்தான நிலையிலும் உள்ளன.
- சுமார் 270 வகையான பறவையினத் தொகுதிகள் “அரிய” வகையின் கீழ் வருகின்றன.

***புலம்பெயர்ந்த பாலூட்டிகளின் உள்கட்டமைப்பு***

- இந்த மாநாட்டின் செயல் திட்டத்தில் புலம்பெயர்ந்த பாலூட்டிகளின் உள்கட்டமைப்பு தொடர்பான திட்டங்கள் இருக்கின்றன.
- இந்த உச்சி மாநாட்டில் கோபி கரடி, பாரசீக சிறுத்தை மற்றும் யூரியல் விலங்கு ஆகிய புலம்பெயர்ந்த பாலூட்டிகள் குறித்து கவனம் செலுத்தப் படுகின்றன.
- இந்த உச்சி மாநாடானது கங்கை நதி ஓங்கில், இந்தியக் கானமயில் மற்றும் ஆசிய யானைகள் ஆகியவற்றிற்கு பல்லுயிர்ப் பாதுகாப்பை வழங்க இருக்கின்றது.
- கோபி கரடியானது பழுப்புக் கரடியின் துணை இனமாகும். இது மங்கோலியாவின் கோபி பாலைவனத்தில் காணப்படுகின்றது.
- பாரசீக சிறுத்தைகள் ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசியாவில் காணப்படுகின்றன.
- யூரியல்கள் என்பது மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில், அதாவது கஜகஸ்தான், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் காணப்படும் காட்டு ஆடுகளாகும்.
- 2020 ஆம் ஆண்டானது ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட உலகளாவிய விவாதக் குழுக்களால் "சிறந்த ஆண்டு" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது 21 நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவற்றின் குறிக்கோள்களை முன்னிலைப்படுத்த மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- CMSன் COP-13 மாநாட்டோடு இந்தியா “பல்லுயிர் பெருக்கத்தின் சிறந்த ஆண்டை” அனுசரிக்கின்றது.

- இந்தியாவும் நார்வேயும் 2020 - 30 ஆம் பத்தாண்டை "காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான விரைவான நடவடிக்கைகளின் பத்தாண்டு" என்று அறிவித்துள்ளன.

***"ஆபத்தான நிலையில் உள்ள இடப்பெயர்வு இனங்கள்"***

- CMSன் COP 13 மாநாட்டில் ஆசிய யானை, இந்தியக் கானமயில் மற்றும் வங்காள வரகுக் கோழி ஆகியவை "ஆபத்தான நிலையில் உள்ள இடப்பெயர்வு இனங்கள்" என்று அறிவிக்கப்பட்டுள்ளன.
- இந்திய யானையை "தேசியப் பாரம்பரிய விலங்காக" இந்தியா அறிவித்துள்ளது.
- இது வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டம், 1972ன் அட்டவணை Iன் கீழ் விலங்குகளுக்கு மிக உயர்ந்த சட்டப் பாதுகாப்பை வழங்குகின்றது.

***அடுத்து நடைபெற இருக்கும் உச்சி மாநாடுகள்***

- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஐ.நா உச்சி மாநாடும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஐ.நா. பல்லுயிர் மாநாடும் நடைபெற இருக்கின்றன.
- இந்த சிறந்த ஆண்டில், காலநிலை, பெருங்கடல், பாலினம், நீருக்கடியிலான வாழ்வு மற்றும் நிலத்தில் வாழும் உயிர்கள் ஆகியவற்றின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் ஆகியவை செயல்படுத்தப்பட உள்ளன.
- பெய்ஜிங் செயல் திட்டமானது 2020 ஆம் ஆண்டில் 25வது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது.
- இது 1995 ஆம் ஆண்டில் பெண்கள் தொடர்பான நான்காவது ஐக்கிய நாடுகளின் உலக மாநாட்டில் வடிவமைக்கப்பட்டது.
- COP 25ல் குறிப்பிடப்பட்ட இலக்குகளின் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாட்டின் COP26 ஆனது 2020 ஆம் ஆண்டில் கிளாஸ்கோவில் நடைபெற உள்ளது.
- நீடித்த போக்குவரத்து குறித்த முதலாவது உலகளாவிய போக்குவரத்து மாநாடானது 2020 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற உள்ளது.
- உயிர் பன்முகத் தன்மைக்கான உத்திசார் திட்டம் – 2011 - 20 ஆனது 2020 ஆம் ஆண்டில் முடிவுக்கு வருகின்றது.
- இது 2010 ஆம் ஆண்டில் உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியமானது 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரான்சின் மார்சேயிலியில் உலகப் பாதுகாப்பு மாநாட்டை நடத்த உள்ளது.
- இது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்பாடு செய்யப்படுகின்றது.
- ஐ.நா.வின் இரண்டாவது பெருங்கடல் மாநாடானது 2020 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது.
- முதலாவது மாநாடு 2017 ஆம் ஆண்டில் நியூயார்க்கில் நடைபெற்றது.
- 2020 ஆம் ஆண்டானது உயிர் பன்முகத்தன்மை செயல் திட்டங்களையும் நிறைவு செய்ய இருக்கின்றது.
- இது பாலைவனமாக்கலுக்கு எதிரான போராட்டத்தைக் குறிக்கின்ற பாலைவனமாக்கலுக்கான பத்தாண்டையும் உள்ளடக்கியுள்ளது.
- பாலைவனமாக்கலை எதிர்த்து போராடுவதற்காக ஐ.நா. ஒப்பந்தத்தால் இது குறிக்கப்பட்டுள்ளது.

***CMS மற்றும் இந்தியா***

- இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் கீழ் உள்ள ஒரு சுற்றுச்சூழல் ஒப்பந்தமாகும்.
- இது புலம்பெயர்ந்த உயிரினங்களுக்கான ஒப்பந்தம் அல்லது பான் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- ஜெர்மனியின் பான் நகரில் 1979 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தமானது 1983 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இதன் தலைமையகம் ஜெர்மனியின் பான் நகரில் உள்ளது.
- 1983 ஆம் ஆண்டு முதல் இந்தியா CMSல் உறுப்பினராக இருந்து வருகின்றது.
- சைபீரியக் கொக்குகள் (1998), கடல் ஆமைகள் (2007), கடல் பசுக்கள் (2008) மற்றும் வேட்டைப் பறவைகள் (2016) ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்து CMS உடன் சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்படாத புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- இந்தியத் துணைக் கண்டமானது முக்கியமான பறவைகள் பறக்கும் பாதை வலையமைப்பின் அதாவது, மத்திய ஆசிய ஃப்ளைவேயின் (CAF - Central Asian Flyway) ஒரு பகுதியாக விளங்குகின்றது.
- பல புலம்பெயர்ந்த விலங்குகள் மற்றும் பறவைகள் ஆகியவற்றிற்கு இந்தியா ஒரு தற்காலிக வாழ்விடமாக விளங்குகின்றது.
- இவற்றில் அமுர் வல்லூறு, வரித்தலை வாத்து, கருப்பு கழுத்து கொக்குகள், கடல் ஆமைகள், கடல் பசுக்கள், கூனல் முதுகுத் திமிங்கலங்கள் ஆகியவை முக்கியமானவையாகும்.

## க்ராஸ்பெடோட்ரோபிஸ் கிரெட்டதுன்பெர்கே

- இது புருனேயில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய வகை நில நத்தையாகும்.
- ஸ்வீடனின் காலநிலை ஆர்வலரான கிரெட்டா துன்பெர்க்கின் நினைவாக இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- புதிய இனங்கள் வெப்பமண்டல மழைக் காடுகளிலிருந்து வருகின்றன. மேலும் வறட்சி மற்றும் தீவிர வெப்பநிலை ஆகியவற்றினால் அவை பாதிக்கப்படக் கூடியதாக இருக்கின்றன.



## பக்கே புலிகள் காப்பகம்

- கிழக்கு காமெங் மாவட்டத்தில் உள்ள பக்கே புலிகள் காப்பகம் (Pakke Tiger Reserve - PTR) வழியாக நெடுஞ்சாலை ஒன்றை அமைக்க அருணாச்சலப் பிரதேச மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- பக்கே புலிகள் காப்பகம் பாகுய் புலிகள் காப்பகம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்தப் புலிகள் காப்பகம் தனது இருவாய்ச்சி கூடுகளை ஏற்றுக் கொள்ளுதல் திட்டத்திற்காக 'அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் பாதுகாப்பு' என்ற பிரிவில் 2016 ஆம் ஆண்டின் இந்தியா பல்லுயிர் விருதினை வென்றுள்ளது.

## சிறுத்தை மீள் அறிமுகத் திட்டம்

- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 28 அன்று இந்திய உச்ச நீதிமன்றமானது சிறுத்தை மீள் அறிமுகத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது இதனை மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ - பால்பூர் வனவிலங்குச் சரணாலயத்தில் மீள் அறிமுகம் செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தியாவில் அழிந்து போன ஒரே ஒரு முக்கிய இனம் சிறுத்தை மட்டுமே ஆகும்.
- IUCNன் (இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் - International Union for Conservation of Nature) சிவப்புப் பட்டியலானது "சிறுத்தையை" "பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய இனம்" என்று வகைப்படுத்தியுள்ளது.
- வேட்டையாடுதலின் காரணமாக சிறுத்தை இனம் இந்தியாவில் அழிந்துவிட்டது.
- இந்தியாவின் கடைசி சிறுத்தை 1947 ஆம் ஆண்டில் சத்தீஸ்கரில் கொல்லப் பட்டது.

## நிலத்தடியில் வாழும் ஒரு புதிய மீன் இனம்

- மேகாலயாவில் நிலத்தடியில் வாழும் ஒரு புதிய மீன் இனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது அருகிவிட்ட இனமான பொன் மீனைப் போன்ற உடற்கூறு அமைப்பைக் கொண்டு உள்ளது.
- இதுவரை அறியப்பட்ட மிகப்பெரிய நிலத்தடி மீன் இனம் இதுவாகும்.
- இந்தியாவில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட நிலத்தடியில் வாழும் அனைத்து மீன்களும் சிறிய மீன்களாகும். இது நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நிலத்தடியில் வாழும் மீன் இனங்களில் மிகப் பெரியதாகும். இது உலக அளவில் நிலத்தடியில் வாழும் மீன் இனங்களில் மிகப் பெரியதாகக் கருதப்படுகின்றது.
- இந்தியாவில் மிகப் பரவலாக நுகரப்படும் பொன் மீன் (mahseer) ஆனது பெரும்பாலும் "வேகமாக ஓடும் நீரோடைகள், ஆறுகள் மற்றும் பெரிய நீர்த் தேக்கங்களில் வாழ்கின்றது.
- இந்தப் புதிய இனங்கள் மேகாலயாவின் ஜெயந்தியா மலையின் நிலத்தடியில் வாழும் பொன் மீனைப் போன்றது.



## யோங்கிள் நீலத் துளை (YBH)

- குறைந்த அளவு கரைக்கப்பட்ட அங்கக (கரிம) கார்பன் மற்றும் 8000 ஆண்டுகள் பழமையான கரைக்கப்பட்ட கனிம கார்பன் ஆகியவை யோங்கிள் நீலத் துளையில் (Yongle Blue Hole - YBH) கண்டறியப் பட்டுள்ளன.
- YBH என்பது சமீபத்தில் தென் சீனக் கடலில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் ஆழமான நீலத் துளை (300 மீட்டர் ஆழம்) ஆகும்.
- முன்னதாக பஹாமாஸில் உள்ள டீனின் நீலத் துளையானது ஆழமானதாகக் கருதப்பட்டது. இது 202 மீட்டர் ஆழத்தைக் கொண்டிருந்தது.



## உலகக் காற்றுத் தர அறிக்கை 2019

- உலக காற்றுத் தர அறிக்கையானது IQAir AirVisual என்ற அமைப்பால் தொகுக்கப் பட்டுள்ளது.
- மிக மோசமான காற்று மாசுபாட்டைக் கொண்ட உலகில் உள்ள 30 நகரங்களில் 21 நகரங்கள் இந்தியாவில் உள்ளன.
- PM 2.5க்கு மிகவும் மாசுபட்ட நாடாக வங்கதேசம் உருவெடுத்துள்ளது என்றும் உலகில் 5வது அதிக மாசுபட்ட நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் இந்த அறிக்கை கூறுகின்றது.

- நாட்டின் முதலாவது தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டத்தை (National Clean Air Programme - NCAP) இந்தியா அறிமுகப்படுத்தியதையும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.
- NCAP ஆனது பிஎம் 2.5 மற்றும் பிஎம் 10 காற்று மாசுபாட்டை 102 நகரங்களில் 2017 நிலைகளுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் 20-30% ஆகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**MOST POLLUTED COUNTRIES**

| Rank | Country |
|---|---|
| 1 | Bangladesh |
| 2 | Pakistan |
| 3 | Mongolia |
| 4 | Afghanistan |
| 5 | India |

**MOST POLLUTED CITIES IN 2019**

| Rank | City | PM2.5 (micrograms/cu. m) |
|---|---|---|
| 1 | Ghaziabad (India) | 110.2 |
| 2 | Hotan (China) | 110.1 |
| 3 | Gujranwala (Pak) | 105.3 |
| 4 | Faisalabad (Pak) | 104.6 |
| 5 | Delhi (India) | 98.6 |
| 6 | Noida (India) | 97.7 |
| 7 | Gurgaon (India) | 93.1 |
| 8 | Raiwind (Pak) | 92.2 |
| 9 | Greater Noida (India) | 91.3 |
| 10 | Bandhwari (India) | 90.5 |

# மாநிலச் செய்திகள்

## கர்நாடக மூடநம்பிக்கை எதிர்ப்புச் சட்டம்

- மனிதாபிமானமற்ற தீய நடைமுறைகள் மற்றும் கருப்பு மாயச் சட்டம், 2017 என்ற ஒரு சட்டத்தை கர்நாடக மாநில அரசு முறையாக அறிவித்துள்ளது.
- இந்த மசோதா மூடநம்பிக்கை எதிர்ப்பு மசோதா என்று பிரபலமாக அறியப்படுகின்றது.
- மேட் ஸ்னனா என்ற மீதமுள்ள உணவை தலித்துகள் உண்ணும் நடைமுறையானது தற்பொழுது தன்னார்வமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த நடைமுறையில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டியதில்லை.
- மகாராஷ்டிரா மனிதப் பலியிடுதலைத் தடுத்தல் & ஒழித்தல் மற்றும் கருப்பு மாயச் சட்டம், 2013 ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மசோதாவானது தயாரிக்கப்பட்டுள்ளது.

## உலகின் மிகப்பெரிய தியான மையம்

- உலகின் மிகப்பெரிய தியான மையமானது தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் உள்ள கன்ஹா சாந்தி வனத்தில் திறக்கப் பட்டுள்ளது.
- இது ஸ்ரீ ராம் சந்திரா திட்டம் மற்றும் ஹார்ட்ஃபுல்னெஸ் நிறுவனம் ஆகியவற்றின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த மையமானது ஹார்ட்ஃபுல்னெஸ் லாலாஜி மகாராஜியின் முதலாவது வழிகாட்டிக்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- இங்கு ஒரே நேரத்தில் 1 லட்சம் பயிற்சியாளர்கள் தியானப் பயிற்சியில் ஈடுபட முடியும்.



## பெண்களால் மட்டுமே இயக்கப்படும் வாடகை மகிழுந்துச் சேவை

- புது தில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் ‘வுமன் வித் வீல்ஸ்’ என்ற வாடகை மகிழுந்துச் சேவையானது தொடங்கப்பட்டுள்ளது.
- இது பெண்களின் பாதுகாப்பிற்காக ‘சாகா வாடகை மகிழுந்து’ என்ற அமைப்பினால் இயக்கப் படுகின்றது.
- இந்த வாடகை மகிழுந்துகள் மகளிர் ஓட்டுநர்களால் இயக்கப்படுகின்றன. இந்தச் சேவையானது பெண்கள் அல்லது குடும்பத்துடன் உள்ள ஆண்களுக்கு மட்டுமே வழங்கப் படுகின்றது.
- இந்த வாடகை மகிழுந்தானது மகளிர் ஓட்டுநர்கள் மற்றும் மகளிர் பயணிகளுக்கு உதவுவதற்காக புவியிடங் காட்டி மற்றும் அவசரகால பொத்தானுடன் நிறுவப்பட்டுள்ளது.

## ஒய்எஸ்ஆர் ஒய்வூதிய கனுகா திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது மாநிலம் முழுவதும் வீட்டிற்கே சென்று ஒய்வூதியத்தை வழங்கும் “ஒய்வூதிய வழங்கல் திட்டத்தை” தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர்களின் வீட்டிற்கே சென்று பல்வேறு நல ஒய்வூதியங்கள் வழங்கப் படுகின்றன.
- மேலும், முதியோர் ஒய்வூதியம் பெறுவோரின் வயது வரம்பானது 65லிருந்து 60 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.

## மெய்நிகர் காவல் நிலையம் - ஒடிசா

- ஒடிசா காவல்துறையின் இதர 2 உருமாறும் (மாற்றத்தைக் கொண்டு வரும்) திட்டங்களுடன் ஒரு மெய்நிகர் காவல் நிலையத்தை ஒடிசா மாநில அரசு தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டங்களின் நோக்கம் அரசாங்க அலுவலகங்களுடன் மக்களின் இடையீட்டைக் குறைப்பதாகும்.

- www.imsop.odisha.gov.in என்ற இணையதளத்தில் இருந்து மக்கள் முதல் தகவல் அறிக்கை, இறுதிப் படிவம், குறிப்பிட்ட பகுதியின் வரைபடம், விசாரணை தொடர்பான ஆவணங்களை அணுகலாம்.
- 3 திட்டங்கள் பின்வருமாறு
    - மெய்நிகர் காவல் நிலையம்,
    - சாலை விபத்து வழக்குகள் ஆவணங்களின் தொகுப்பு மற்றும்
    - மருத்துவ சட்டக் கருத்துகள் அமைப்பு.

## இந்தியாவின் முதலாவது கண்ணாடி தரைப் பாலம்

- இந்தியாவின் முதலாவது கண்ணாடி தரைப் பாலமானது உத்தரகாண்ட் மாநிலத்தின் ரிஷிகேஷில் கங்கை ஆற்றின் குறுக்கே கட்டப்பட இருக்கின்றது.
- 94 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்த லக்ஷ்மன் ஜூலா என்ற பாலமானது பாதுகாப்பு காரணங்களுக்காக 2019 ஆம் ஆண்டில் மூடப்பட்டது. இந்தப் பாலத்திற்கு மாற்றாக இந்தக் கண்ணாடிப் பாலமானது கட்டப்பட இருக்கின்றது.
- கண்ணாடித் தரை தொங்கு பாலத்தின் வடிவமைப்பானது பொதுப் பணித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய பாலமானது குறைந்தது 150 ஆண்டுகளுக்கு பாதுகாப்பானதாக இருக்கும்.

## மகாராஷ்டிராவில் வாதவன் துறைமுகம்

- மகாராஷ்டிராவில் வாதவன் துறைமுகத்தை அமைப்பதற்காக மத்திய அமைச்சரவையானது தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- ஜவஹர்லால் நேரு துறைமுக அமைப்பானது வாதவன் துறைமுகத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காளர் நிறுவனமாக செயல்பட இருக்கின்றது.
- வாதவன் துறைமுகத்தை மேம்படுத்துவதைத் தொடர்ந்து, உலகின் முதல் 10 கொள்கலன் துறைமுகங்களைக் (top 10 container ports) கொண்ட நாடுகளின் குழுவில் இந்தியாவும் இணைய இருக்கின்றது.
- ஜவஹர்லால் நேரு துறைமுகமானது இந்தியாவின் மிகப்பெரிய கொள்கலன் துறைமுகமாக விளங்குகின்றது. இது உலகில் 28வது இடத்தில் உள்ளது.

## ஜனசேவகா திட்டம்

- கர்நாடக அரசு ஜன சேவகா திட்டம் என்று அழைக்கப்படுகின்ற அரசின் சேவைகளை வீடுகளுக்குச் சென்று விநியோகிக்கும் ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், குடிமக்கள் தாங்கள் பெற விரும்புகின்ற சேவைக்கான கோரிக்கையை வலை தளம் அல்லது செல்லிடப் பேசிகள் மூலம் தெரிவிக்க வேண்டும்.
- இத்திட்டமானது பெங்களூருவில் செயல்படுத்தப்படுகின்றது.

## முக்கிய மந்திரி பரிவார் சம்ரிதி யோஜனா - ஹரியானா

- ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டார் முக்கிய மந்திரி பரிவார் சம்ரிதி யோஜனாவை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- வருடாந்திர நிதி உதவி அளிப்பதன் மூலம் தகுதியான குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்புச் சலுகைகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், ரூ. 6000 நிதி உதவி பெறுகின்ற அந்த குடும்பங்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
    - ஆண்டு வருமானம் ரூ. 1.80 லட்சம் வரை இருக்க வேண்டும்.
    - 5 ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்திருத்தல்.

## சிஎப்எல் விளக்குகள் மீதான தடை – கேரளா

- நீடித்த ஆற்றல் கொள்கையின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து சிஎப்எல் விளக்குகள் மற்றும் ஒளிர்வு விளக்குகள் (இழை) ஆகியவற்றின் விற்பனைக்கு கேரள மாநில அரசு தடை விதிக்க இருக்கின்றது.
- இது அம்மாநிலத்தின் உர்ஜ கேரளா என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட “மின்னிழையற்ற கேரளா” என்பதன் வரிசையில் அமைந்து உள்ளது.
- மின்னிழையற்ற கேரளா என்ற திட்டமானது கேரள மாநில மின் வாரியம் மற்றும் கேரள ஆற்றல் மேலாண்மை மையம் ஆகியவற்றினால் செயல்படுத்தப் படுகின்றது.
- உர்ஜ கேரளா திட்டம் என்பது ஒரு ஆற்றல் உற்பத்தி மற்றும் சேமிப்புத் திட்டமாகும்.

## முதலாவது திஷா காவல் நிலையம்

- இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் திஷா மசோதாவைச் செயல்படுத்த ஆந்திர மாநில அரசு தயாராகி வருகின்றது.
- முதலாவது திஷா காவல் நிலையத்தை ஆந்திர மாநில முதல்வரான ஜெகன் மோகன் ரெட்டி திறந்து வைத்தார்.
- இந்தக் காவல் நிலையங்கள் அம்மாநிலத்தில் அமையவிருக்கும் முதன்மையான காவல் நிலையங்களாகும். இந்தக் காவல் நிலையங்கள் பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கையாள இருக்கின்றன.
- ஆந்திர மாநில அரசானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதிக்குள் 18 திஷா காவல் நிலையங்களைத் திறக்க உள்ளது.
- இந்தக் காவல் நிலையங்கள் திஷா சட்டம், 2019ன் கீழ் நிறுவப் பட்டுள்ளன.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஆந்திர மாநிலமானது 2019 ஆம் ஆண்டின் திஷா மசோதாவை நிறைவேற்றியது.

## முக்தோஷ்ரி அரிசி வகை

- மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆர்சனிக் எதிர்ப்பு சக்தியைக் கொண்ட ஒரு அரிசி வகையை உருவாக்கி வணிகமய மாக்கியுள்ளனர்.
- இந்தப் புதிய அரிசி வகையானது முக்தோஷ்ரி என்று அழைக்கப்படுகின்றது. இது IET 21845 என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது மேற்கு வங்கத்தின் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் சின்சுராவில் உள்ள அரிசி ஆராய்ச்சி நிலையம் மற்றும் லக்னோவின் தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- இது போரோ (குளிர்கால) பருவத்தில் ஒரு ஹெக்டேருக்கு 5.5 மெட்ரிக் டன் மற்றும் காரீப் பருவத்தில் ஒரு ஹெக்டேருக்கு 4.5 முதல் 5 மெட்ரிக் டன் வரையிலான மகசூலைத் தரும் திறன் கொண்டது.
- இந்த அரிசி வகையானது நீளமானதாகவும் மெல்லியதாகவும் நறுமணம் கொண்டதாகவும் இருக்கின்றது.

## நிலத்தடி நீர்ச் சட்டம் - 2020

- முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரப் பிரதேச மாநில அமைச்சரவையானது நிலத்தடி நீர்ச் சட்டம் – 2020 என்ற ஒரு சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இச்சட்டமானது நீரில் மூழ்கக்கூடிய பம்புகளை பதிவு செய்வதைக் கட்டாயம் ஆக்குகின்றது.
- விவசாயிகள் மற்றும் வீட்டுப் பயனர்கள் பம்புகளைப் பயன்படுத்த கட்டணம் செலுத்தத் தேவையில்லை.
- இந்தச் சட்டமானது அனைத்து தனியார்ப் பள்ளிகள், கல்லூரிகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைப்பதைக் கட்டாயமாக்குகின்றது.
- நிலத்தடி நீரை மாசுபடுத்தும் நபர்கள் / நிறுவனங்களுக்குத் தண்டனையும் அபராதமும் விதிக்க இந்தச் சட்டம் வழிவகை செய்துள்ளது.

## பழங்குடி இனச் சட்டங்கள் குறித்த தீர்மானங்கள் - திரிபுரா

- திரிபுரா மாநிலப் பழங்குடியினர் பகுதி தன்னாட்சி மாவட்ட மன்றமானது (Tripura Tribal Areas Autonomous District Council - TTAADC) மூன்று பழங்குடி இனங்களின் சட்டங்கள் குறித்தத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அந்த 3 பழங்குடி இனங்களாவன:
    - மிசோ
    - கைபெங் மற்றும்
    - மால்சம்
- ஆறாவது அட்டவணையின்படி, அசாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகிய நான்கு மாநிலங்கள் தொழில்நுட்ப ரீதியாக மற்ற பகுதிகளிலிருந்து வேறுபடக் கூடிய பழங்குடிப் பகுதிகளைக் கொண்டுள்ளன.

- அவற்றின் மீது சில சட்டமன்ற மற்றும் நீதித்துறை அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு மாவட்ட மன்றங்கள் மற்றும் பிராந்திய மன்றங்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- இதன்படி ஒவ்வொரு மாவட்டமும் ஒரு தன்னாட்சி மாவட்டமாகும். மேலும் ஆளுநர் அறிவித்தலின் மூலம் அந்த பழங்குடியினப் பகுதியின் எல்லைகளை மாற்ற அல்லது பிரிக்க முடியும்.

## இரயில் தடங்களில் 5 நட்சத்திர உணவகம்

- குஜராத் மாநிலத் தலைநகரான காந்தி நகரில் உள்ள ரயில் நிலையத்தில் தண்டவாளத் தடங்களுக்கு அருகில் 5 நட்சத்திர உணவகம் கட்ட இந்திய ரயில்வே அமைப்பு திட்டமிட்டுள்ளது.
- இது இந்தியாவில் முதன்முறையாக சோதனை முறையில் அமைக்கப்பட உள்ளது.
- தண்டவாளத் தடங்களுக்கு அருகிலுள்ள தூண்களில் கூரை அமைக்கப்பட்டு, அதன் மீது உணவகம் கட்டப்படும்.



## மகாராஷ்டிரா - அரசு ஊழியர்களுக்கு வாரத்திற்கு ஐந்து வேலை நாட்கள்

- மகாராஷ்டிரா அரசு பிப்ரவரி 29 ஆம் தேதி முதலாக அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு வாரத்திற்கு ஐந்து வேலை நாட்களை அறிவித்துள்ளது.
- தற்போது வார இறுதி விடுமுறையைப் பெறுவதற்கு, ஊழியர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை மேலும் 45 நிமிடங்கள் வேலை செய்வார்கள்.
- மத்திய அரசைத் தொடர்ந்து வாரத்திற்கு 5 வேலை நாட்கள் என்ற முறையை பின்பற்றும் மாநிலங்கள் ராஜஸ்தான், பீகார், பஞ்சாப், டெல்லி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகியவையாகும்.
- இந்த முறையானது தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் தொழில்துறை தீர்வைச் சட்டத்தின் கீழ் உள்ள அரசு அலுவலகங்களுக்கும் அத்தியாவசிய சேவைகளாகக் கருதப்படும் நிறுவனங்களுக்கும் பொருந்தாது.

## லூய் – காய் - நி திருவிழா

- மணிப்பூரில் உள்ள நாகா பழங்குடியினர் மணிப்பூரில் விதை விதைப்புத் திருவிழாவான 'லூய் – காய் – நி" என்ற ஒரு திருவிழாவைக் கொண்டாடினர்.
- 2 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவானது "கலாச்சாரத்தின் மூலம் ஒற்றுமை" என்ற கருப்பொருளின் கீழ் தொடங்கப்பட்டது.
- லூய் – காய் - நி திருவிழா என்பது நாகா சமூகத்தின் மிகப்பெரிய திருவிழாக்களில் ஒன்றாகும்.

## 'பாராட்டு மற்றும் பரிந்துரை' திட்டம்

- பஞ்சாப் மாநிலக் காவல்துறைப் பொது இயக்குநர் 'பாராட்டு மற்றும் பரிந்துரை' என்ற ஒரு திட்டத்தைப் பஞ்சாபில் அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இது சிறப்பாகப் பணிபுரியும் காவல்துறை அதிகாரிகளின் நம்பிக்கையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சிறப்பாகப் பணியாற்றும் காவல் துறையினருக்கு ஒவ்வொரு மாதமும் விருதுகள் வழங்கப்பட இருக்கின்றன.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் பல்வேறு மாவட்டங்களின் காவல்துறைத் தலைவர்களிடமிருந்து சிறந்த காவல் துறையினருக்கான பரிந்துரைகள் கோரப்படும்.
- இந்தப் பரிந்துரைகள் மூத்த காவல்துறை அதிகாரிகள் அடங்கிய குழுவால் ஆராயப்பட்டு, விருது பெறும் காவல் துறையினரின் பெயரானது ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதிக்குள் அறிவிக்கப்படும்.

## பஞ்சாப் கின்னோ பழம்

- சமீபத்தில் பஞ்சாபின் அபோஹாரில் நடந்த கின்னோ விழாவில் பஞ்சாப் வேளாண் ஏற்றுமதிக் கழகமானது 'பஞ்சாப் கின்னோ' என்ற தர அடையாளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த வகை கின்னோ பழமானது பஞ்சாபின் 'அரசப் பழம்' என்று கருதப்படுகின்றது.
- இது "பூச்சிக்கொல்லி தேவைப்படாத" ஒரு பழம் என்றும் கூறப்படுகின்றது.
- நாட்டில் பஞ்சாப் மாநிலமானது கின்னோ பழத்தை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றது.
- 'கின்னோ' என்பது அதிக மகசூல் கொண்ட மாண்டரின் கலப்பினமாகும். இது இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் பரவலாகப் பயிரிடப்படுகின்றது.



## திருமதிகார்ட் செயலி

- ❖ திருச்சியில் உள்ள தேசியத் தொழில்நுட்ப நிறுவனமானது "திருமதிகார்ட்" என்ற பெயர் கொண்ட சுய உதவிக் குழுக்களால் (SHG - Self Help Group) தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கான கைபேசிச் செயலியை உருவாக்கியுள்ளது.
- ❖ இந்தச் செயலியானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தச் செயலியானது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதையும் சந்தை வாய்ப்புகளை அவர்கள் (பெண்கள்) தடையின்றி அணுக உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தாய் மகூர் (Thai Magur) மீன் வளர்ப்பு மையங்களுக்குத் தடை விதித்தது மகாராஷ்டிரா

- ❖ தாய் மகூர் மீன் வளர்ப்பு மையங்களை ஒழிக்க மகாராஷ்டிரா அரசு உத்தரவிட்டுள்ளது.
- ❖ மீன்கள் சுகாதாரமற்ற முறையில் வளர்க்கப்படுவதே இதற்கு முக்கியக் காரணமாகும்.
- ❖ இது மகாராஷ்டிராவில் தாய் மகூர் அல்லது ஆப்பிரிக்க மகூர் என்று அழைக்கப்படுகிறது.
- ❖ 2000 ஆம் ஆண்டில் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தாய் மகூர் வளரப்புக்குத் தடை விதித்தது.





## புத்த நுல்லாஹ் (BUDDAH NULLAH) – பஞ்சாப்

- மாசடைந்த புத்த நுல்லாஹ் நீரோடையைச் சீரமைக்க முதல் கட்டத் திட்டமாக 650 கோடியை ஒதுக்க பஞ்சாப் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது பஞ்சாபின் மால்வா பகுதி வழியாகச் செல்லும் ஒரு பருவகால நீரோடையாகும்.
- இது லூதியானா மாவட்டத்தைக் கடந்து, சிந்து நதியின் துணை நதியான சட்லெஜ் ஆற்றில் கலக்கின்றது.




## மஹாதாயி தீர்ப்பாயத்தின் தீர்ப்பு

- மஹாதாயி நதிநீர் பிரச்சினை தொடர்பான தீர்ப்பாயத்தின் தீர்ப்பை அறிவிப்பதற்கான ஒரு இடைக்கால தடை உத்தரவை உச்ச நீதிமன்றம் அறிவித்து உள்ளது.
- இந்த நதியின் நீரைப் பகிர்தலானது கர்நாடகா மற்றும் கோவா ஆகிய மாநில அரசுகளுக்கிடையில் ஏற்படும் சர்ச்சைகளுக்குக் காரணமாகும்.



- மலப்பிரபா நதிக்கு நீரைத் திருப்புவதற்காக மஹாதாயி நதியின் துணை நதிகளான கலசா மற்றும் பண்டூரி நதிகளின் குறுக்கே தடுப்புகளை அமைப்பதும் இதில் அடங்கும்.
- மலப்பிரபா நதியானது கிருஷ்ணா நதியின் துணை நதியாகும். இது கர்நாடகா மாநிலத்தின் ஊடாகப் பாய்கின்றது.
- இந்த நதியானது பாகல்கோட் மாவட்டத்தில் கிருஷ்ணா நதியுடன் இணைகின்றது.

## மலை மகாதேஸ்வர் வனவிலங்கு சரணாலயம்

- சாமராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள மலை மகாதேஷ்வர் வனவிலங்குச் சரணாலயத்தைப் புலிகள் காப்பகமாக அறிவிக்க கர்நாடக மாநில அரசு முன்மொழிந்துள்ளது.
- இது தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

***கர்நாடகாவில்***

- இது அறிவிக்கப் பட்டால், சாம்ராஜ்நகர் மாவட்டமானது நாட்டில் மூன்று புலிகள் காப்பகத்தைக் கொண்டுள்ள ஒரு தனித்துவமான புகழைப் பெற இருக்கின்றது.
- இது ஏற்கனவே பந்திப்பூர் புலிகள் காப்பகம் மற்றும் பிலிகிரி ரங்கநாதர் கோயில் (Biligiri Ranganatha Temple - BRT) புலிகள் காப்பகம் ஆகியவற்றை தனது வரம்பு எல்லைக்குள் கொண்டுள்ளது.
- மேலும், இதன் மூலம், கர்நாடகா மாநிலமானது இவை இரண்டைத் தவிர நாகர்ஹோல், பத்ரா, மற்றும் அன்ஷி – தண்டேலி என்று ஆறு புலிகள் காப்பகத்தைக் கொண்டிருக்கும்.

## ஃபிட் இந்தியா (ஆரோக்கியமான இந்தியா) முன்னெடுப்பு - தில்லி

- இந்திய ரயில்வேத் துறையானது புது தில்லியில் உள்ள ஆனந்த் விஹார் ரயில் நிலையத்தில் ஒரு குந்து இயந்திரத்தை நிறுவியுள்ளது.
- நாட்டில் முதன்முறையாக தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில், மூன்று நிமிடங்களில் 30 குந்துகைகள் செய்யும் ஒருவர் நடைமேடைக்கான அனுமதிச் சீட்டுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியதில்லை.



## கர்நாடகாவில் லிங்காயத் மடம்

- வடக்கு கர்நாடகாவின் கடக் மாவட்டத்தில் ஒரு முஸ்லீம் இளைஞர் லிங்காயத் மடத்திற்குத் தலைமை தாங்க உள்ளார்.
- சித்ரதுர்காவின் ஸ்ரீ ஜகத்குரு முருகராஜேந்திர மாதாவின் 361 மடங்களில் ஒன்று இதுவாகும்.
- திவான் ஷரீஃப் ரஹிமன்சாப் முல்லா என்பவர் கடக் மாவட்டத்தின் அசுதி கிராமத்தில் உள்ள முருகராஜேந்திர கோரனேஸ்வர சாந்திதாமா மாதாவின் தலைவராக அல்லது மாததீஷாவாக ஏற்றுக் கொள்ளப் படுவார்.
- இது கலபுர்கியில் உள்ள கஜூரி கிராமத்தில் இருக்கும் 350 ஆண்டுகள் பழமையான கோரனேஸ்வர சன்ஸ்தான் மடத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.
- அனைத்து அமைப்புகளின்/மடங்களின் ஒரு வலுவான, உண்மை நிறைந்த குரு பசவேஸ்வரர் என்ற ஒரே ஒரு தீர்க்கதரிசி மட்டுமே ஆவார். இந்த அமைப்புகள்/ மடங்களைச் சேர்ந்த அனைவருமே லிங்காயத் மதத்தைப் பரப்புவதற்கும் வசனா இலக்கியத்தை நம்புவதற்கும் முயற்சி செய்கின்றார்கள்.
- பசவண்ணா என்பவர் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவனை மையமாகக் கொண்ட பக்தி இயக்கத்தின் லிங்காயத் துறவி ஆவார். மேலும் இவர் கல்யாணிச் சாளுக்கிய/ காலச்சுரி வம்சத்தின் ஆட்சியில் சமூக சீர்திருத்தவாதியாகவும் இருந்தார்.
- பசவண்ணா இலக்கியப் படைப்புகளில் கன்னட மொழியில் இயற்றப்பட்ட வசனா சாகித்யாவும் அடங்கும்.
- இவர் பக்திபந்தாரி, பசவண்ணா அல்லது பசவேஸ்வரா என்றும் அழைக்கப் படுகின்றார்.

## விஸ்வகர்மா விருதுகள் - புது தில்லி

- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான பொக்ரியால் 23 அணிகளுக்கு சத்ரா விஸ்வகர்மா விருதுகளையும் ஆறு நிறுவனங்களுக்கு உத்கிருஷ் சந்தன் விஸ்வகர்மா விருதுகளையும் வழங்கினார்.



- தலைசிறந்த புத்தாக்கக் குழுக்களுக்கு (மாணவர்கள் மற்றும் வழிகாட்டிகளுக்காக) சத்ரா விஸ்வகர்மா விருதுகளும் முன்மாதிரியான நிறுவன இடையீட்டிற்காக உத்கிருஷ்த் சன்ஸ்தான் விஸ்வகர்மா விருதும் வழங்கப்படுகின்றன.
- 'கிராமங்களின் வருமானத்தை எவ்வாறு மேம்படுத்துவது?' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டிற்கான போட்டி நடத்தப்பட்டது.
- AICTE (தொழில்நுட்ப கல்விக்கான அகில இந்திய ஆணையம் - All India Council for Technical Education) 2017 ஆம் ஆண்டு முதல் விஸ்வகர்மா விருதுகளை வழங்கி வருகின்றது.

## இமாச்சல் கிரிஹினி சுவிதா யோஜனா

- "100% எல்பிஜி (திரவ பெட்ரோலிய வாயு) எரிவாயு இணைப்பைக்" கொண்ட நாட்டின் முதலாவது மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா நடைமுறைபடுத்தப் பட்டதைத் தொடர்ந்து, இந்த எரிவாயு இணைப்பு வழங்கப்படாத மீதமுள்ள வீடுகளை உள்ளடக்கும் வகையில் இமாச்சலப் பிரதேச மாநில அரசு தனது சொந்த இமாச்சல கிரிஹினி சுவிதா திட்டத்தை 2018 ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகப்படுத்தியது.
- ஓய்வூதியம் பெறுபவர், வருமான வரி செலுத்துவோர் அல்லது அரசு, வாரியம், மாநகராட்சி போன்றவற்றில் பணியாற்றும் எந்தவொரு உறுப்பினரையும் தவிர, எல்பிஜி இணைப்பு இல்லாத மாநிலத்தின் அனைத்து குடும்பத்தினரும் இந்தத் திட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாவர்.

## எல்லைத் திருத்தம்

- 1873 ஆம் ஆண்டின் கிழக்கு வங்காள எல்லை ஒழுங்குமுறை (BEFR - Bengal Eastern Frontier Regulation) மற்றும் 1993 ஆம் ஆண்டின் லுஷாய் மலை அனுமதிப் படிவ அறிவிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மிசோரம் அரசாங்கம் அசாமுடனான எல்லையைத் திருத்த முயலுகின்றது.
- BEFR ஆனது அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மிசோரம் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் இந்தியர்கள் அல்லாதவர்களை அனுமதிப் படிவம் அல்லாமல் தற்காலிகமாகத் தங்குவதற்கு அனுமதி மறுக்கின்றது.

## NRCக்கு எதிரான தீர்மானம் - பீகார்

- தேசியக் குடிமக்கள் பதிவேட்டிற்கு (National Register of Citizens – NRC) எதிராகத் தீர்மானத்தை நிறைவேற்றிய முதலாவது என்டிஏ மாநிலமாக (ஆளும் கட்சி) பீகார் உருவெடுத்துள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்பட்ட புதிய வடிவமைப்பிலிருந்து திருநங்கைகள் நெடுவரிசை மட்டுமே கொண்ட பழைய தேசிய மக்கள் தொகை பதிவேட்டை (National Population Register - NPR) நடைமுறைப் படுத்துகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சூரஜ்கண்ட் சர்வதேசக் கைவினைக் கண்காட்சி 2020

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதியன்று இந்தியக் குடியரசுத் தலைவரான ராம் நாத் கோவிந்த் 34வது சூரஜ்கண்ட் சர்வதேசக் கைவினைக் கண்காட்சியை ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரில் திறந்து வைக்க இருக்கின்றார்.
- இந்த மேளாவானது மத்திய சுற்றுலா, ஜவுளி, கலாச்சாரம் மற்றும் வெளி விவகாரங்கள் துறை அமைச்சகங்களுடன் இணைந்து சூரஜ்கண்ட் மேளா ஆணையம் & ஹரியானா சுற்றுலா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தக் கண்காட்சியானது சுற்றுலாவை மேம்படுத்த உதவ இருக்கின்றது.
- சூரஜ்கண்ட் என்பது 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான நீர்த்தேக்கம் ஆகும். இது ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரில் ஆரவல்லி மலைத்தொடரின் தெற்கு தில்லி முனையில் அமைந்துள்ளது.
- 34வது சூரஜ்கண்ட் சர்வதேச கைவினை மேளா - 2020க்கான பங்களிப்பாளர் நாடு உஸ்பெகிஸ்தான் ஆகும்.
- இந்த மேளாவிற்கு இமாச்சலப் பிரதேச மாநிலமானது முதன்மை மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




## நாகோபா ஜாத்ரா விழா

- நகோபா ஜாத்ரா திருவிழாவானது தெலுங்கானா மாநிலத்தில் மெஸ்ராம் ராஜ் கோண்டுகள் மற்றும் பர்தான்கள் ஆகிய பழங்குடி அமைப்பினரால் கொண்டாடப்பட்டது.
- நகோபா ஜாத்ரா என்பது இந்தியாவின் தெலுங்கானாவில் உள்ள அதிலாபாத் மாவட்டத்தில் கொண்டாடப்படும் ஒரு பழங்குடியினத் திருவிழாவாகும்.
- இது இரண்டாவது மிகப்பெரிய ஒரு பழங்குடியினத் திருவிழாவாகும்.

### கோண்டுகள்

- கோண்டுகள் உலகின் மிகப்பெரிய பழங்குடி குழுக்களில் ஒன்றாகும்.
- கோண்டுகள் பின்வரும் நான்கு பழங்குடியினக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவையாவன:
    - ராஜ் கோண்டுகள்,
    - மடியா கோண்டுகள்,
    - துர்வே கோண்டுகள்,
    - கதுல்வார் கோண்டுகள்.
- இது ஒரு பட்டியலிடப்பட்ட பழங்குடியினக் குழுவாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## உலக விளையாட்டின் சிறந்த வீராங்கனை விருது - 2019

- இந்திய மகளிர் ஹாக்கி அணி வீராங்கனையான ராணி ராம்பால் “2019 ஆம் ஆண்டுக்கான உலக விளையாட்டின் சிறந்த வீராங்கனை” என்னும் பட்டத்தை வென்றுள்ளார்.



- இந்த விருதினைப் பெறுகின்ற உலகின் முதலாவது ஹாக்கி வீரர் இவராவார்.
- 2020 ஆம் ஆண்டில் ராணி ராம்பாலுக்கு இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கொல்கத்தா புத்தகக் கண்காட்சி 2020

- கொல்கத்தா புத்தகக் கண்காட்சி – 2020ன் 44வது பதிப்பானது கொல்கத்தாவில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வில் ரஷ்யா ஒரு "முதன்மை நாடாக" கலந்து கொண்டிருக்கின்றது.
- கூகை ஆந்தைகள், புல் ஆந்தைகள் மற்றும் முகமூடி ஆந்தைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு வகை பறவை இனங்கள் முதல் முறையாக இந்தப் புத்தகக் கண்காட்சியின் அதிகாரப் பூர்வ சின்னமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டன.
- 2020 ஆம் ஆண்டு இந்தப் புத்தகக் கண்காட்சியின் கருப்பொருள் “ரஷ்யா” என்பதால் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆனது “ரஷ்யா தினமாகக்” கொண்டாடப் படுகின்றது.
- இந்தப் புத்தகக் கண்காட்சியில் மேற்கு வங்க முதலமைச்சரான மம்தா பானர்ஜி ‘CAA, NRC, NPR ஆகியவற்றை நாங்கள் ஏன் வேண்டாம் என்று சொல்லுகின்றோம்?’ என்ற தனது புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

## 71வது குடியரசு தின அணிவகுப்பு - 2020க்கான விருதுகள்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று கொண்டாடப்பட்ட 71வது குடியரசு தின நிகழ்வின் போது நடத்தப்பட்ட சிறந்த காட்சிப்பட அணிவகுப்பிற்கான விருதுகளை வழங்கினார்.
- இந்த அணிவகுப்பில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த 16 காட்சிப் படங்களும் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளைச் சேர்ந்த 6 காட்சிப் படங்களும் என மொத்தம் 22 காட்சிப் படங்கள் இடம் பெற்றன.
- அசாம் மாநிலமானது ‘தனித்துவமான கைவினைத் திறன் மற்றும் கலாச்சாரத்தின் நிலம்’ என்ற கருப்பொருளைக் கொண்ட காட்சிப் படத்தைக் காண்பித்தது. சாத்ரியா பாரம்பரியத்தை போர்டல் நிருத்யா வடிவத்தில் காண்பித்த அசாம் மாநில காட்சிப் படமானது சிறந்தக் காட்சிப்பட அணிவகுப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்த அணிவகுப்பில் லிங்கராஜாவின் ருகுனா ரத யாத்திரையைச் சித்தரித்த ஒடிசா மாநிலமும் சர்வ தர்ம சம்பாவின் கலாச்சாரத்தை வெளிப்படுத்திய உத்தரப் பிரதேச மாநிலமும் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன.
- அரசாங்கத்தின் புதிய முயற்சியான “ஜல் சக்தி திட்டமானது” சிறந்த அணிவகுப்பு காட்சிப் பட விருதினை வென்றது.
- மத்திய பொதுப் பணித் துறையானது (Central Public Works Department - CPWD) “காஷ்மீர் சே கன்னியாகுமரி” என்ற கருப்பொருளுக்காக சிறப்புப் பரிசினை வென்றுள்ளது.




## சர்வதேசக் குழந்தைகள் திரைப்பட விழாவின் 13வது பதிப்பு

- சர்வதேசக் குழந்தைகள் திரைப்பட விழாவின் 13வது பதிப்பானது வங்கதேசத்தின் டாக்காவில் தொடங்கி வைக்கப்பட்டது.
- சர்வதேச குழந்தைகள் திரைப்படத் திருவிழா - 2020ன் கருத்துருவானது, 'உலகத்தின் கீழ்' மற்றும் அதன் முழக்கம் "ஒளிச்சட்டகங்களில் எதிர்காலம்" என்பதாகும்.
- இது வங்கதேசத்தின் குழந்தைகள் திரைப்படச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இது தென்கிழக்கு ஆசிய நாட்டின் மிகப்பெரிய ஒரு திரைப்பட விழாவாகும். 2008 ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்காக மட்டுமே கொண்டாடப்படும் ஒரே சர்வதேசத் திருவிழா இதுவாகும்.

## டைலர் பரிசு 2020

- இந்தியச் சுற்றுச்சூழல் ஆர்வலரும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் நல்லெண்ணத் தூதருமான பவன் சுக்தேவ் என்பவர் சுற்றுச்சூழல் சாதனைக்காக 2020 ஆம் ஆண்டின் டைலர் பரிசினை வென்றுள்ளார்.
- இந்த விருதானது அமெரிக்காவின் பாதுகாப்பு உயிரியலாளரான கிரெட்சன் சி. டெய்லியுடன் இணைந்து மேற்கொள்ளப் பட்ட அவரது "பசுமைப் பொருளாதாரம்" என்ற பணிக்காக வழங்கப் பட்டுள்ளது.



## மூக் நாயக்கின் 100வது ஆண்டுவிழா

- 2020 ஆனது "மூக்நாயக்" இதழின் நூற்றாண்டு ஆகும்.
- இது பிஆர். அம்பேத்கரால் வெளியிடப்பட்ட ஒரு மராத்தி மொழி இதழாகும்.
- இந்த இதழின் முதலாவது வெளியீடானது 1920 ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று அச்சிடப் பட்டது.
- மூக் நாயக் இதழைத் தொடங்குவதற்காக இவரது வழிகாட்டியான கோல்ஹாப்பூரைச் சேர்ந்த சத்ரபதி ஷாஹு மகாராஜ் என்பவர் ரூ. 2,500 ரூபாயை நன்கொடையாக அதற்கு அளித்தார்.
- இது இந்து சாதிக் கட்டமைப்பை கடுமையாக சாடுதல் மற்றும் சமத்துவமின்மை குறித்து கடுமையான முறையில் வாதிடுதல் ஆகியவை குறித்துப் பிரசுரித்தது.

## பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா விருதுகள்

- மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாவட்டங்கள் ஆகியவற்றிற்குப் பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.
- இந்த விருதுகள் மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் வழங்கப் படுகின்றன.
- இந்த விருதுகள் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டதிலிருந்து மகப்பேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக வழங்கப் படுகின்றன.
- இந்த விருது விழா வழங்கும் விழாவானது நாட்டில் உள்ள மாநிலங்களிடையே போட்டி மிக்க கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

| தரவரிசை | 1 கோடிக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்கள்/ ஒன்றியப் பிரதேசங்கள் | 1 கோடிக்குக் கீழ் மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்கள்/ ஒன்றியப் பிரதேசங்கள் | 1 கோடிக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டங்கள் | 1 கோடிக்குக் கீழ் மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டங்கள் |
|---|---|---|---|---|
| **1** | மத்தியப் பிரதேசம் | தாத்ரா & நாகர் ஹவேலி | இந்தூர் (மத்தியப் பிரதேசம்) | செர்சிப் (மிசோரம்) |
| **2** | ஆந்திரப் பிரதேசம் | ஹிமாச்சலப் பிரதேசம் | கர்னூல் (ஆந்திரப் பிரதேசம்) | உனா (ஹிமாச்சலப் பிரதேசம்) |
| **3** | ஹரியானா | சண்டிகர் | தெற்கு சல்மாரா மான்கச்சர் (அசாம்) | புதுச்சேரி |

## PEN கௌரி லங்கேஷ் விருது 2019

- ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த மூத்தப் பத்திரிகையாளரான யூசுப் ஜமீல் என்பவர் பத்திரிக்கைத் துறையில் சிறந்து விளங்கியதற்காக ஜனநாயக இலட்சியவாதத்திற்கான 2019 - 20 PEN கௌரி லங்கேஷ் விருதினை வென்றுள்ளார்.
- இந்த விருதினை PEN தென்னிந்திய மற்றும் PEN தில்லி ஆகியவை 2017 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிக்கை ஆசிரியரான மறைந்த கௌரி லங்கேஷ் என்பவரது பெயரில் நிறுவியுள்ளன.
- இந்த விருதானது ரூ. 1 லட்சம் நிதித் தொகையையும் சான்றிதழையும் கொண்டுள்ளது.

## பாதுகாப்புத் துறைக் கண்காட்சி 2020 (DefExpo)

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 5 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை லக்னோவில் (உத்தரப் பிரதேசம்) முதல் முறையாக பாதுகாப்புத் துறைக் கண்காட்சியானது நடைபெறுகின்றது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் ஒரு முதன்மை நிகழ்வாகும்.
- ஒரு மிகப்பெரிய பாதுகாப்புக் கண்காட்சியான இந்தப் பாதுகாப்புத் துறைக் கண்காட்சியின் 11வது பதிப்பு இதுவாகும்.
- இந்த நிகழ்வின் 10வது பதிப்பானது சென்னையில் (தமிழ்நாடு) 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் இந்த நிகழ்வின் கருப்பொருள் 'இந்தியா: வளர்ந்து வரும் பாதுகாப்பு உற்பத்தி மையம்' என்பதாகும்.
- இது 'பாதுகாப்புத் துறையில் டிஜிட்டல் மாற்றம்' என்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- பாதுகாப்புத் துறைக் கண்காட்சி - 2020 ஆனது இந்தியாவின் விண்வெளி, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நலன்களின் விரிவான வகைகளைக் காண்பிக்க இருக்கின்றது.
- இந்தக் கண்காட்சியின் ஒரு பகுதியாக 5வது இந்திய ரஷ்ய ராணுவத் தொழில் துறை மாநாடானது நடைபெற இருக்கின்றது.



## ஸ்கோச் விருது

- "போரோன் நைட்ரேட் அடிப்படையிலான தனிப்பட்ட கலப்பின போர்க் கவசமானது" மதிப்புமிக்க ஸ்கோச் விருதை வென்றுள்ளது.
- இந்தக் கவசமானது பாதுகாப்புத் துறையின் ஸ்டார்ட் அப் நிறுவனமான பிக் பேங் பூம் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இது ஐடெக்ஸ் (பாதுகாப்பு சிறப்புத்துவத்திற்கானப் புதுமைகள்) பிரிவில் சீ-த்ரூ-ஆர்மர் மற்றும் சட்டவிரோதப் பாதுகாப்பு ஆளில்லா குட்டி விமானங்கள் தொடர்பான மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் போட்டியிலும் வென்றுள்ளது.
- செயற்கை நுண்ணறிவை (AI - Artificial Intelligence) பாதுகாப்புத் துறையுடன் ஒருங்கிணைத்த முதலாவது நிறுவனம் இதுவாகும்.

## மிஸ்டிக் கலிங்கா இலக்கிய விருது

- பிரபல ஒடியா மற்றும் ஆங்கில மொழி எழுத்தாளர் மனோஜ் தாஸ் என்பவர் இந்திய மற்றும் உலகளாவிய மொழி எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் மிஸ்டிக் கலிங்கா இலக்கிய விருதினைப் பெற இருக்கின்றார்.
- எழுச்சியூட்டும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் கலைஞர்களை அங்கீகரித்து, அவர்களைப் போற்றுவதற்காக மிஸ்டிக் இலக்கிய விருதானது நிறுவப்பட்டுள்ளது.
- இலக்கியம் மற்றும் கல்வித் துறையில் இவர் ஆற்றிய பங்களிப்புக்காக 2020 ஆம் ஆண்டில் பத்ம பூஷண், 2001 ஆம் ஆண்டில் பத்ம ஸ்ரீ, சரஸ்வதி சம்மன் மற்றும் சாகித்ய அகாடமி விருது ஆகிய விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

## இந்திய சர்வதேசக் கடல் உணவுக் கண்காட்சி - 2020

- 2020 ஆம் ஆண்டின் இந்திய சர்வதேசக் கடல் உணவுக் கண்காட்சியின் (India International Seafood Show - IISS) 22வது பதிப்பானது கேரளாவின் கொச்சியில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்ச்சியானது "நீலப் புரட்சி - உற்பத்திக்கு அப்பால் மதிப்பு கூட்டல்" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்று வருகின்றது.



- இந்த நிகழ்ச்சியானது கடல்சார் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மற்றும் கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியவற்றினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது. இந்த நிகழ்ச்சியானது 12 ஆண்டுகளுக்குப் பிறகு கொச்சியில் தற்பொழுது நடைபெற்றது. இதன் 21வது பதிப்பானது கோவாவில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்றது.

## காகா ஹத்ராசி

- குடியரசுத் தலைவரின் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளித்த பிரதமர் மோடி கவிஞர் காகா ஹத்ராசியின் கருத்தை மேற்கோள் காட்டினார்.
- காகா ஹத்ராசி என்பவர் இந்தி மொழியில் இந்தியாவின் சிறந்த நையாண்டி மற்றும் நகைச்சுவைக் கவிஞர் ஆவார்.
- இவருக்கு 1985 ஆம் ஆண்டில் இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கியது.
- நகைச்சுவையைத் தவிர, பாரம்பரிய நடனம் மற்றும் இசை குறித்தும் 'வசந்த்' என்ற புனைப் பெயரில் அவர் எழுதியுள்ளார்.
- டெல்லியை தளமாகக் கொண்ட இந்தி அகாடமி இலக்கியத் துறையில் சிறப்பான பங்களிப்பு ஆற்றுவோருக்கு ஆண்டுதோறும் காகா ஹத்ராசி விருதை வழங்குகின்றது.
- இவர் 1935 ஆம் ஆண்டில் சங்கீத் என்ற மாத இதழை வெளியிடத் தொடங்கினார்.
- சங்கீத் ஆனது இந்தியப் பாரம்பரிய இசை மற்றும் நடனம் குறித்த ஒரே பத்திரிக்கை ஆகும்.



## தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருதுகள்

- குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருதுகளை டாக்டர் என்.எஸ். தர்மசக்துவுக்கு தனிப்பட்டப் பிரிவிலும், தொழுநோய் திட்ட அமைப்புக்கு நிறுவனப் பிரிவிலும் வழங்கியுள்ளார்.
- தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருதானது காந்தி நினைவு தொழுநோய் அறக்கட்டளையால் 1950 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காந்திஜி ஆற்றிய சேவைகளின் நினைவாக இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றது.

- இந்தியாவின் முயற்சிகள்
    - SPARSH தொழுநோய் விழிப்புணர்வுப் பிரச்சாரம் - 2017
    - தேசியத் தொழுநோய் ஒழிப்புத் திட்டம் - 1983
- பொது சுகாதாரப் பிரச்சினையாக இருந்த தொழுநோயை ஒழிப்பதற்கான இலக்கை 2005 ஆம் ஆண்டில் இந்தியா அடைந்தது.




## காம்யா கார்த்திகேயன் – அகோன்காகுவா சிகரத்தை அடைந்த இளவயது வீரர்

- தென் அமெரிக்காவின் ஆண்டிஸ் மலைத்தொடரின் மிக உயர்ந்த சிகரமான அகோன்காகுவாவை அடைந்த இளைய பெண் என்ற பெருமையை காம்யா கார்த்திகேயன் பெற்றுள்ளார்.
- காம்யா கார்த்திகேயன் கடற்படை நடத்தும் குழந்தைகள் பள்ளியில் படிக்கும் எட்டாம் வகுப்பு மாணவி ஆவார்.
- எவரெஸ்ட் சிகரத்திற்கு மலையேற்றம் செய்த இளைய வயது வீரரும் இவராவார்.
- 2021 ஆம் ஆண்டுவாக்கில், “எக்ஸ்ப்ளோரர்ஸ் கிராண்ட்ஸ்லாம்” ஐ முடிக்க இவர் இலக்கு வைத்துள்ளார்.

***எக்ஸ்ப்ளோரர்ஸ் கிராண்ட்ஸ்லாம் பற்றி***

- இது உலகின் மிக உயரமான 7 சிகரங்களுக்கு மலையேற்றம் செய்வதும், வட துருவத்தையும் தென் துருவத்தையும் அடைவதுமான ஒரு சாகச இலக்காகும்.
- இந்த ஏழு சிகரங்களில் எவரெஸ்ட், தெனாலி, அகோன்காகுவா, கிளிமஞ்சாரோ, வின்சன் மற்றும் அமர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு மிக உயர்ந்த மலை சிகரங்கள் ஆகியன அடங்கும்.



## மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தற்காலிகத் தலைவர்

- ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியான D. ஜெயச்சந்திரன் என்பவர் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் (SHRC - State Human Rights Commission) தற்காலிகத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் இரண்டு உறுப்பினர்களில் இவரும் ஒருவராவார்.

***தமிழ்நாடு SHRC பற்றி***

- தமிழ்நாட்டில் 17.4.1997 அன்று தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமானது ஏற்படுத்தப் பட்டது.
- இது மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993ன் பிரிவு 21ன் கீழ் ஏற்படுத்தப் பட்டது.
- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 2019ன் படி, SHRCன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் பதவியேற்ற நாளிலிருந்து 3 ஆண்டுகள் அல்லது 70 வயது பூர்த்தியாகும் வரை, இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை பதவியில் நீடிப்பார்கள்.
- உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி/நீதிபதியாக இருந்த ஒருவர் SHRCன் தலைவராக நியமிக்கப்படுவார்.



## எச்.கே. பிரோடியா நினைவு விருதுகள்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் இந்திய விஞ்ஞானிகளுக்கு எச்.கே. பிரோடியா நினைவு விருதுகள் வழங்கப்படுகின்றன.
- வேளாண்மை, பொறியியல், மருத்துவ அறிவியல் முதல் விண்வெளி மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் வரையிலான அறிவியல் முயற்சிகளின் எந்தவொரு துறையிலும் சிறந்து விளங்குபவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது.
- எச்.கே. பிரோடியா நினைவு விருது பெற்றவர்கள் பின்வருமாறு:
    - கே. சிவன் - இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (Indian Space Research Organisation - ISRO) தலைவர் மற்றும்
    - சேகர் மண்டே - அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி ஆணையத்தின் (Council of Scientific and Industrial Research - CSIR) பொது இயக்குநர்.

- சிவனுக்கு விஜ்னன் ரத்னா விருதும் மாண்டே விஜ்னன் பூஷண் விருதும் வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு மூத்த மூலக்கூறு உயிரியலாளராக, மாண்டே என்பவர் காசநோய்க்காக விரிவாக பணியாற்றியுள்ளார்.




## ஜெருசலேம் - மும்பைத் திருவிழா

- 'ஜெருசலேம் - மும்பைத் திருவிழாவானது' இந்தியாவினால் மகாராஷ்டிராவின் மும்பையில் நடத்தப்பட இருக்கின்றது.
- இந்தத் திருவிழாவானது இந்தியாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவை வளர்ப்பதற்காகக் கொண்டாடப்படுகின்றது.
- இந்தத் திருவிழாவானது இரு நாடுகளின் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதற்காகப் பல்வேறு கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது.



## குடியரசுத் தலைவரின் வண்ண விருதுகள் - ஐ.என்.எஸ் சிவாஜி

- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஐ.என்.எஸ் சிவாஜி கப்பல் நிலையத்துக்கு குடியரசுத் தலைவரின் வண்ண விருதுகளை வழங்கினார்.
- இந்தியக் கடற்படை நிலையமான ஐ.என்.எஸ் சிவாஜி 75 ஆண்டு சேவையை நிறைவு செய்துள்ளது.
- இந்த விருது லோனாவாலாவில் உள்ள இந்த இந்தியக் கடற்படை நிலையத்திற்கு வழங்கப்பட்டது.
- இது 1945 ஆம் ஆண்டில் HMIS (Her Majesty's Indian Ship) ஆக நியமிக்கப்பட்டது.
- இது நிறுவப்பட்டதன் குறிக்கோள் - கர்மசு கௌசாலம் (வேலை செய்யும் திறன்) ஆகும்.
- கடந்த ஆண்டு இந்த விருது இந்தியக் கடற்படை அகாடமிக்கு வழங்கப்பட்டது.

## 2020 ஆம் ஆண்டின் இந்தியச் சாதனையாளர் விருது

- இராஜேந்திர இந்திராமன் சிங் என்பவரது "இந்தியக் கல்விக்கான சிறந்த பங்களிப்பை" அங்கீகரித்து இந்தியச் சாதனையாளர் விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கொல்கத்தாவில் பிறந்த புகழ்பெற்ற ஜோதிடரான டாக்டர் சோஹினி சாஸ்திரி இந்த ஆண்டின் சிறந்த ஜோதிடராக இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்தியச் சாதனையாளர் விருதுகள் குறிப்பிடத்தக்கச் சாதனைகளைப் படைத்த நபர்களை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## FIH சிறந்த வீரர் விருது - 2019

- இந்தியாவின் ஆண்கள் தேசிய ஹாக்கி அணியின் கேப்டனாக இருக்கும் மன்பிரீத் சிங் பவார் 2019 ஆம் ஆண்டிற்கான FIH சிறந்த ஆண்கள் வீரராக தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இவர் இந்த கௌரவத்தைப் பெற்ற முதல் இந்தியராக உருவெடுத்துள்ளார்.
- நெதர்லாந்து மகளிர் ஹாக்கி அணி கேப்டன் ஈவா டி கோய்டே என்பவர் 2019 ஆம் ஆண்டின் FIH சிறந்த மகளிர் வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



## 2020 ஆம் ஆண்டின் பயோ ஆசியாவின் மரபணுப் பள்ளத்தாக்கு சிறப்புமிகு விருது

- பின்வரும் நபர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் பயோ ஆசியாவின் மரபணுப் பள்ளத்தாக்கு சிறப்புமிகு விருதானது வழங்கப்பட இருக்கின்றது. அவர்கள் முறையே:
    - அமெரிக்க நோய் எதிர்ப்பியல் நிபுணர் மற்றும் புற்றுநோயியல் நிபுணரான டாக்டர் கார்ல் எச் ஜூன் மற்றும்
    - நோவார்டிஸ் என்ற மருந்து நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான டாக்டர் வசந்த் நரசிம்மன்.
- மரபணுப் பள்ளத்தாக்கு சிறப்புமிகு விருதானது 2004 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- வாழ்க்கை அறிவியல் ஆராய்ச்சி மற்றும் பொது சுகாதாரத்திற்கு சிறப்பான பங்களிப்பை ஆற்றிய புகழ்பெற்ற நபர்கள் மற்றும் அமைப்புகளை அங்கீகரித்து, அவர்களை கௌரவிப்பதற்காக இந்த விருதானது வழங்கப்படுகின்றது.

## UNFCCCன் COP 26

- UNFCCC (காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தம் - United Nations Framework Convention on Climate Change) என்பதின் பங்காளர்கள் மாநாட்டின் 26வது அமர்வானது (Conference of the Parties - COP 26) ஐக்கிய ராஜ்ஜியத்தின் ஸ்காட்லாந்தில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் ஆக்ராவைச் சேர்ந்த இந்திய வம்சாவளியான அலோக் சர்மா என்பவர் ஐக்கிய ராஜ்ஜியத்தில் நடைபெற இருக்கும் COP 26 காலநிலை மாற்ற உச்சி மாநாட்டின் பொறுப்பு அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.

## பிலிம்பேர் விருதுகளின் 65வது பதிப்பு - 2020

- அமேசான் பிலிம்பேர் விருதுகளின் 65வது பதிப்பு - 2020 ஆனது அசாமின் குவஹாத்தியில் நடத்தப்பட்டது.
- சோயா அக்தர் இயக்கிய ‘கல்லி பாய்’ திரைப்படமானது மதிப்புமிக்க சிறந்த திரைப்பட விருது உட்பட பல விருதுகளைப் பெற்றதால் அது ஒரு மிகப் பெரிய வெற்றியாளராக உருவெடுத்துள்ளது.
- கல்லி பாய் படத்தில் நடித்ததற்காக ரன்வீர் சிங் சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுள்ளார். இதே படத்தில் ஒரு முன்னணி பாத்திரத்தில் நடித்ததற்காக ஆலியா பட் (பெண்) என்பவர் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுள்ளார்.

## ERONETஐ அங்கீகரித்தல்

- 2019 - 20ஆம் ஆண்டின் டிஜிட்டல் மாற்றத்திற்கான அரசு செயல்முறை மறு பொறியியலில் சிறந்து விளங்கியதற்காக இந்திய தேர்தல் ஆணையத்திற்கு ‘வெள்ளி’ விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது ERONETஐ அங்கீகரித்து வழங்கப்பட்டுள்ளது.
- ERONET என்பது 91 கோடி வாக்காளர்களின் தரவைக் கொண்ட அனைத்து

மாநிலங்களுக்கும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் பொதுவான ஒரு தரவுத் தளமாகும்.

- ERONET ஆனது தேர்தல் மேலாண்மைச் செயல்முறையை தானியங்கி மயமாக்குகின்றது.

## கலா கும்பம் கண்காட்சி

- மத்திய ஜவுளி அமைச்சகமானது புது தில்லியில் "கலா கும்பம்" என்ற கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.
- இது இந்தியாவின் புவிசார் குறியீடு பெற்ற கைவினைப் பொருட்கள் மற்றும் பாரம்பரியப் பொருட்களை மேம்படுத்துவதற்கான ஒரு கண்காட்சியாகும்.
- இந்தக் கண்காட்சியை மத்திய ஜவுளி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.
- பெங்களூரு, மும்பை, கொல்கத்தா, சென்னை போன்ற பல்வேறு முக்கிய நகரங்களில் இந்தக் கண்காட்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.
- இந்தக் கண்காட்சிகளை நடத்துவதற்கு கைவினைப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது நிதியுதவி செய்கின்றது.

## தலைமை ஊழல் கண்காணிப்பு ஆணையர்

- இந்தியக் குடியரசுத் தலைவரின் செயலாளரான சஞ்சய் கோத்தாரி அடுத்த தலைமை ஊழல் கண்காணிப்பு ஆணையராகப் பதவியேற்க உள்ளார்.
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் என்பது 1964 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்ட உச்ச ஊழல் கண்காணிப்பு நிறுவனமாகும்.
- இதற்கு 2003 ஆம் ஆண்டில் சட்டரீதியான அந்தஸ்து வழங்கப்பட்டது.
- ஊழல் தடுப்பு நடவடிக்கைகளுக்கான கே.சந்தானம் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.

## 2020 ஆம் ஆண்டிற்கான ஆஸ்கார் விருதுகள்

- அகாடமி விருதுகள் என்று அழைக்கப்படுகின்ற ஆஸ்கார் விருதுகளின் 92வது விருது வழங்கும் விழாவானது கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள டால்பி திரையரங்கத்தில் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 அன்று நடந்தது.
- ஆஸ்கார் விருதுகளை கலை மற்றும் அறிவியலுக்கான அமெரிக்க அகாடமி ஆஃப் மோஷன் பிக்சர் என்னும் நிறுவனம் வழங்கியது.

***2020 ஆம் ஆண்டு ஆஸ்கார் விருது பெற்றவர்களின் பட்டியல்:***

- சிறந்த நடிகர்: ஜோவாகின் பீனிக்ஸ் - ஜோக்கர்
- சிறந்த நடிகை: ரெனீ ஜெல்வெகர் - ஜூடி
- சிறந்த இயக்குனர்: போங் ஜூன் ஹோ - பாராசைட்
- சிறந்த படம்: பாராசைட்
- சிறந்த துணை நடிகர்: பிராட் பிட் - ஒன்ஸ் அபான் எ டைம் இன் ஹாலிவுட்

- சிறந்த அசைவூட்ட படம் (அனிமேஷன்) - ஹேர் லவ்
- சிறந்த திரைக்கதை - பாராசைட்
- சிறந்த ஆவணப்படம் - அமெரிக்கன் ஃபேக்டரி
- சிறந்த ஒளிப்பதிவு - 1917
- சிறந்த சர்வதேசத் திரைப்படம் – பாராசைட்

## கம்பாலா போட்டி

- சமீபத்தில் சீனிவாஸ் கவுடா என்பவர் 9.55 வினாடிகளில் 100 மீட்டர் தூரத்தைக் கடந்து சாதனை படைத்திருந்தார்.
- மற்றொரு கம்பாலா வீரரான நிஷாந்த் ஷெட்டி என்பவர் இப்போது அதே தூரத்தை 9.51 வினாடிகளில் கடந்து சீனிவாஸ் கவுடாவை முந்தியுள்ளார்.
- ஜமைக்காவின் தடகள வீரரான உசேன் போல்ட்டின் உலக சாதனை 9.58 வினாடிகள் ஆகும்.
- கம்பாலா என்பது கர்நாடகாவில் ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு பந்தயமாகும். இங்கு மக்கள் எருமைகளுடன் நெல் வயல்கள் வழியாக 142 மீ தூரத்திற்கு ஓடுவர்.



## சம்மக்கா சரலம்மா ஜடாரா திருவிழா

- சம்மக்கா சரலம்மா ஜடாரா திருவிழாவானது தெலுங்கானா மாநிலத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது.
- இது மேடாரம் ஜடாரா என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது தெலுங்கானா மாநிலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் ஒரு பழங்குடியினர் திருவிழாவாகும்.
- இது தெலுங்கானாவின் மாநிலத் விழாவாகும்.

- நியாயமற்ற சட்டத்திற்கு எதிராக ஆளும் ஆட்சியாளர்களுடன் நிகழ்த்திய தாய் மற்றும்

மகளான சம்மக்கா மற்றும் சரலம்மாவின் சண்டையை இந்தத் திருவிழா நினைவு கூர்கின்றது.

- ❖ நாட்டில் கும்ப மேளாவிற்குப் பிறகு, மேடாரம் ஜடாரா ஆனது அதிக எண்ணிக்கையிலான பக்தர்களை ஈர்க்கின்றது என்று நம்பப் படுகின்றது.

## தாரா ஷிக்கோவின் கல்லறை

- ❖ முகலாய இளவரசரான தாரா ஷிக்கோவின் கல்லறையைக் கண்டுபிடிப்பதற்காக சமீபத்தில் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகமானது இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தைச் சேர்ந்த (Archaeological Survey of India - ASI) ஏழு பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ❖ தாரா ஷிக்கோ (1615-59) என்பவர் முகலாயப் பேரரசரான ஷாஜகானின் மூத்த மகனும் வாரிசும் ஆவார்.
- ❖ இவர், இவரது தம்பியான இளவரசர் முஹியுதீன் (பின்னர் பேரரசர் ஔரங்கசீப்) என்பவரால் தோற்கடிக்கப் பட்டார்.
- ❖ தாரா ஷிக்கோ ஒரு "தாராளவாத முஸ்லீம்" என்று விவரிக்கப்படுகின்றார். இவர் இந்து மற்றும் இஸ்லாமிய மரபுகளுக்கு இடையில் இருக்கும் பொதுவான தன்மைகளைக் கண்டறிய முயன்றார்.
- ❖ இவர் பகவத் கீதை மற்றும் 52 உபநிடதங்களை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.

## உணவுக் கிரகப் பரிசு (FOOD PLANET PRIZE)

- ❖ பில்லியன் கணக்கான மக்களுக்கு உணவளிப்பதற்கான தீர்வுகளைக் காண, “உணவுக் கிரகப் பரிசு” என்ற இரண்டு $ 1 மில்லியன் பரிசுகளை ஸ்வீடன் வழங்கியிருக்கின்றது.
- ❖ இப்பரிசு ஸ்வீடனில் உள்ள கர்ட பெர்க்ஃபோர்ஸ் அறக்கட்டளையால் (Curt Bergfars Foundation) ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது.
- ❖ உணவு விநியோகத்தில், பருவகால மாற்றங்களால் ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உலகெங்கும் எழும் முயற்சிகளை அங்கீகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- ❖ இப்பரிசு இரண்டு பிரிவுகளாக வழங்கப்படுகின்றது:
    - நீடித்த உணவுகளுக்கான நடைமுறையிலுள்ள அளவிடக்கூடிய தீர்வுகள் மற்றும்
    - உலகளாவிய உணவுத் துறையை மாற்றக்கூடிய புதுமையான முயற்சிகள்

## பாரத் – பங்களா சுற்றுலா விழா (Bharat Bangla Tourism Festival)

- ❖ திரிபுராவின் அகர்தலாவில் முதலலாவது பாரத் – பங்களா பரியதன் உட்சவ் – சுற்றுலா விழா (Bharat Bangla Paryatan Utsav - Tourism Festival) நடைபெறுகின்றது.
- ❖ திரிபுரா அரசின் சுற்றுலாத் துறையால் இவ்விழா ஏற்பாடு செய்யப்படுகின்றது.
- ❖ 1971 ஆம் ஆண்டில் நிகழ்ந்த வங்கதேச விடுதலைப் போரில் திரிபுராவின் பங்களிப்பின் நினைவாக இவ்விழா கொண்டாடப்படுகின்றது.
- ❖ திரிபுராவில் சுற்றுலாவை மேம்படுத்துவதும் அண்டை நாடான வங்கதேசத்தில் வாழும்

மக்களை திரிபுராவில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு ஈர்ப்பதும் இந்த விழாவின் நோக்கமாக விளங்குகின்றது.

## SERB மகளிர் சிறப்புமிகு விருது - 2020

- ❖ லக்னோவில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் – மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலக்கூறு ஒட்டுண்ணி மற்றும் நோயெதிர்ப்புப் பிரிவின் மூத்த விஞ்ஞானியான டாக்டர் நிதி குமார் என்பவர் SERB மகளிர் சிறப்புமிகு விருதைப் பெற்றுள்ளார்.
- ❖ இந்த விருதானது தேசிய கல்விக் கூடங்களிடமிருந்து அங்கீகாரம் பெற்ற 40 வயதுக்குக் குறைவான பெண் விஞ்ஞானிகளுக்கு வழங்கப் படுகின்றது.

## சாகித்ய அகாடமி விருது

- ❖ மொழிபெயர்ப்பிற்கான சாகித்ய அகாடமி விருதானது ‘நிலம் பூத்து மலரன்ன நாள்’ என்ற மலையாள நாவலை தமிழில் ‘நிலம் பூத்து மலர்ந்த நாள்’ என்று மொழிபெயர்த்த கே.வி. ஜெய ஸ்ரீ என்பவருக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- ❖ மேலும் சாகித்ய அகாடமியானது 24 எழுத்தாளர்களுக்கு சாகித்ய அகாடமி விருதுகளை வழங்கியது.
- ❖ அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்
  - ○ சோ. தர்மன் தனது ‘சூல்’ (தமிழ்) என்ற நாவலுக்காகவும்
  - ○ சஷி தரூர் தனது ‘இருண்ட சகாப்தம்’ (ஆங்கிலம்) என்ற புத்தகத்திற்காகவும் இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

## விக்கிப்பீடியா போட்டி 2019

- ❖ ‘ப்ராஜெக்ட் டைகர்’ என்பதின் இரண்டாம் பதிப்பில் தமிழ் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதில் 62 பங்கேற்பாளர்களால் மொத்தம் 2,959 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- ❖ இது விக்கிமீடியா அமைப்பு (Wikimedia Foundation - WMF) மற்றும் கூகுள் நிறுவனம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ❖ கூகுள் மற்றும் WMF ஆகியவை இணைந்து முதன்முறையாக 2018 ஆம் ஆண்டில் இந்தப் போட்டியைத் தொடங்கின.
- ❖ விக்கிப்பீடியாவிற்கு கட்டுரைகளைச் சமர்ப்பிக்க பங்கேற்பாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் வட்டார மொழிகளின் ஆன்லைன் (நிகழ்நேர) உள்ளடக்கத்தை அதிகரிப்பதே இந்தப் போட்டியின் நோக்கமாகும்.

| Languages | Articles | Participants |
|---|---|---|
| Tamil | 2959 | 62 |
| Punjabi(Gurmukhi) | 1768 | 34 |
| Bengali | 1460 | 49 |
| Urdu | 1377 | 25 |
| Santali | 566 | 18 |
| Hindi | 417 | 26 |
| Telugu | 416 | 42 |
| Kannada | 249 | 17 |
| Malayalam | 229 | 8 |
| Marathi | 220 | 18 |
| Assamese | 205 | 18 |
| Gujarati | 202 | 7 |
| Odia | 155 | 5 |
| Tulu | 32 | 5 |
| Sanskrit | 19 | 4 |

## சுதந்திரப் போராட்ட வீரரான சுதாகர் கிருஷ்ண ராவ் காலமானார்

- ஜாலியன்வாலா பாக் படுகொலையை நேரில் கண்ட சுதந்திர போராட்ட வீரரான சுதாகர் கிருஷ்ண ராவ் என்பவர் தனது 122வது வயதில் காலமானார்.
- காந்தி அவரை "கர்நாடகி" என்று அன்பாக அழைத்ததாக பல தகவல்கள் கூறுகின்றன.
- அவர் பண்டிட் சுதாகர் “சதுர்வேதி” என்றும் அழைக்கப்படுகின்றார்.



# விளையாட்டுச் செய்திகள்

## 71வது சர்வதேசக் குத்துச்சண்டை போட்டி

❖ சர்வதேசக் குத்துச்சண்டை போட்டியின் 71வது பதிப்பான “ஸ்ட்ராண்ட்ஜா - 2020” என்ற பதிப்பானது பல்கேரியாவின் சோபியாவில் நடைபெற்றது.

❖ 3 பதக்கங்களுடன் (1 வெள்ளி, 2 வெண்கலம்) இந்தியாவானது பதக்க எண்ணிக்கையில் 9வது இடத்தில் உள்ளது.

❖ இந்தப் பட்டியலில் உக்ரைன் 10 பதக்கங்களுடன் (4 தங்கம், 1 வெள்ளி, 5 வெண்கலம்) முதலிடத்தைப் பிடித்துள்ளது.

## ஆஸ்திரேலிய ஓபன் – நோவாக் ஜோகோவிச்

❖ செர்பியாவைச் சேர்ந்த நோவாக் ஜோகோவிச் பிப்ரவரி 2 ஆம் தேதி மெல்பெர்னில் நடத்தப்பட்ட ஆஸ்திரேலிய ஓபனில் தனது 17வது பட்டத்தைப் பெற்றார்.

❖ இந்த வெற்றியானது ஓபன் டென்னிஸ் போட்டி சகாப்தத்தில் மூன்று வெவ்வேறு பத்தாண்டுகளில் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்ற முதலாவது வீரர் என்ற பெருமையை இவருக்குப் பெற்றுத் தந்தது.



❖ இந்த வெற்றியின் மூலம் ஜோகோவிச் ரோஜர் பெடரரின் 20 கிராண்ட் ஸ்லாம் என்ற சாதனையை நெருங்கி வருகின்றார்.

## கிரிக்கெட் ஆலோசனைக் குழு - நியமனங்கள்

❖ இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான ருத்ர பிரதாப் சிங், மதன் லால் மற்றும் சுலக்சனா நாயக் ஆகியோர் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதியன்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தினால் கிரிக்கெட் ஆலோசனைக் குழுவின் (Cricket Advisory Committee - CAC) உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

❖ இவர்கள் ஒரு வருடக் காலத்திற்கு இந்தக் குழுவின் உறுப்பினர்களாக செயல்பட இருக்கின்றனர்.

❖ 34 வயதான இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஆர் பி சிங் என்பவர் CACன் இளைய உறுப்பினர் ஆவார்.



## கால்பந்துப் போட்டியில் 500 வெற்றிகள்

- பார்சிலோனாவின் லியோனல் மெஸ்ஸி ஸ்பானிஷ் கால்பந்து வரலாற்றில் 500 வெற்றிகளைப் பதிவு செய்த முதலாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- இது ஸ்பானிஷ் கால்பந்துப் போட்டியில் ஒரு வீரரால் பதிவு செய்யப்பட்ட மிக அதிக எண்ணிக்கையிலான வெற்றிகள் இதுவாகும்.




## ஆஸ்திரேலிய ஓபன் 2020 வெற்றியாளர்கள்

- ஆஸ்திரேலிய ஓபன் 2020 போட்டியின் 108வது பதிப்பானது சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் 2020 பிப்ரவரி 2 ஆம் தேதி நிறைவடைந்தது.
- ஆண்டுதோறும் விளையாடப்படும் 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் இதுவும் ஒன்றாகும்.

| S.No. | Category | Winner | Runner Up |
|---|---|---|---|
| 1 | Men's Singles | **Novak Djokovic** (Serbia) | Dominic Thiem (Austria) |
| 2 | Women's Singles | **Sofia Kenin** (USA) | Garbiñe Muguruza (Spain) |
| 3 | Men's Doubles | Rajeev Ram (American) & Joe Salisbury (British) | Max Purcell (Australia) & Luke Saville (Australia) |
| 4 | Women's Doubles | Tímea Babos & Kristina Mladenovic | Hsieh Su-wei & Barbora Strýcová |
| 5 | Mixed Doubles | Nikola Mektic & Barbora Krejcikova | Jamie Murray & Bethanie Mattek-Sands |

- நோவோக் ஜோகோவிச் எட்டாவது ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்று ஏடிபி தர வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- கடந்த 12 ஆண்டுகளில் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்ற இளம் வயதுப் பெண்மணி என்ற பெருமையை சோபியா கெனின் பெற்றுள்ளார்.
- கிரீன்செட் உலகளாவிய அமைப்பால் உருவாக்கப்பட்ட கடினமான மேற்பரப்பான கிரீன்செட் உடன் நடத்தப்பட்ட ஆஸ்திரேலிய ஓபனின் முதல் பதிப்பு இதுவாகும்.

## ஹாக்கி உயர் செயல்திறன் மையங்கள்

- இந்திய விளையாட்டு ஆணையம் (Sports Authority of India - SAI) மற்றும் ஹாக்கி இந்தியா ஆகியவை நாடு முழுவதும் 7 இடங்களில் உயர் செயல்திறன் மையங்கள் நிறுவப்படும் என்று அறிவித்துள்ளன.
- இந்த உயர் செயல்திறன் கொண்ட 7 ஹாக்கி மையங்களானது கேலோ இந்தியா என்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட இருக்கின்றது.
- இந்த மையங்கள் இளம் ஹாக்கி வீரர்களுக்கானவை (14 முதல் 24 வயது வரை) ஆகும். இங்கு 2024 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்காக இந்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட இருக்கின்றது.

## 35வது மூத்தோர் மகளிர் தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்

- மூத்தோர் மகளிர் தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பின் 35வது பதிப்பின் 64 கிலோ பிரிவில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ராக்கி ஹால்டர் தங்கம் வென்றுள்ளார்.
- இந்த சாம்பியன்ஷிப் போட்டியானது கொல்கத்தாவில் நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டியில் மொத்தம் 214 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

## 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டி – வங்க தேசம் வெற்றி

- இந்த ஆண்டின் ஐசிசி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் வங்க தேசத்தின் கிரிக்கெட் அணியானது தனது முதலாவது 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பைப் போட்டித் தொடரை வென்றுள்ளது.
- இந்தப் போட்டியானது தென்னாப்பிரிக்காவில் உள்ள போட்செஃப்ஸ்ட்ரூமில் நடைபெற்றது.
- வங்கதேச அணியானது பிரியாம் கார்க் தலைமையிலான இந்திய அணியை வீழ்த்தியது.




## தேசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டி

- மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஆதித்யா மேத்தா புனேவில் நடைபெற்ற தேசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.
- அவர் இப்போட்டியில் பல முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற பங்கஜ் அத்வானியைத் தோற்கடித்துள்ளார்.
- மகளிர் ஸ்னூக்கர் இறுதிப் போட்டியில், மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த வித்யா பிள்ளை சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- ஸ்னூக்கர் என்பது பில்லியர்ட் போர்டில் விளையாடப்படும் ஒரு விளையாட்டு ஆகும்.

## தேசிய குளிர்கால விளையாட்டு - குல்மார்க்

- தேசிய குளிர்கால விளையாட்டுகள் 2020 ஆம் ஆண்டு மார்ச் 7 முதல் ஜம்மு காஷ்மீரின் குல்மார்க்கில் நடைபெற உள்ளது.
- உலகப் புகழ்பெற்ற பனிச்சறுக்கு இடமான குல்மார்க்கில் இந்த விளையாட்டுக்கள் ஐந்து நாட்கள் நடைபெற உள்ளன.
- இது கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெற இருக்கின்றது.

- கேலோ இந்தியா நிகழ்வின் முக்கிய நோக்கமானது இந்தியா முழுவதும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதாகும்.
- 2020 ஆம் ஆண்டில் இது அசாமின் குவஹாத்தியில் நடைபெற்றது.

## 20 ஓவர் மகளிர் முத்தரப்பு கிரிக்கெட் போட்டித் தொடர் – 2020

- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியானது 2020 ஆம் ஆண்டின் 20 ஓவர் மகளிர் முத்தரப்பு கிரிக்கெட் போட்டித் தொடரை ஆஸ்திரேலியாவில் விளையாடியது.
- இந்தப் போட்டியில், ஆஸ்திரேலியா 11 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, பட்டத்தைக் கைப்பற்றியது.
- இந்திய அணியானது ஹர்மன்பிரீத் கவுர் என்பவரால் தலைமை தாங்கப்பட்டது.
- ஆஸ்திரேலிய அணியானது மேகன் மொய்ரா லானிங் என்பவரால் தலைமை தாங்கப் பட்டது.

## 2020 ஆம் ஆண்டின் டோக்கியோ ஒலிம்பிக்கின் 'குறிக்கோள்

- ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டுகளின் டோக்கியோ ஒருங்கிணைப்புக் குழுவானது "உணர்ச்சிகளின் மூலம் ஒருங்கிணைதல்" என்ற ஒரு அதிகாரப்பூர்வ குறிக்கோளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஜப்பானின் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கிற்காக "உலகளாவிய மதிப்புகள்" மற்றும் "விளையாட்டின் சக்தியை ஒருங்கிணைத்தல்" ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றது.
- இந்தக் குறிக்கோள் ஆனது பல்வேறு விளையாட்டுப் பின்னணிகளைச் சேர்ந்தவர்களை ஒன்றிணைத்து அவர்களின் வேறுபாடுகளைக் கடந்து கொண்டாடும் விதமாக விளையாட்டின் சக்தியை எடுத்துக் காட்டுகின்றது.
- அலுவல்பூர்வ ஒலிம்பிக் குறிக்கோள் ஆனது "சிட்டியஸ், ஆல்டியஸ், ஃபோர்டியஸ்" அல்லது "வேகமான, உயர்ந்த, வலிமையான" என்பதாகும். ஆனால் இந்த விளையாட்டை நடத்தும் ஒவ்வொரு நகரமும் இந்த விளையாட்டுகளின் பதிப்போடு சேர்ந்து அதன் சொந்த குறிக்கோளைத் தேர்வு செய்கின்றது.

## லாரியஸ் விளையாட்டு விருதுகள் 2020

- லாரியஸ் விளையாட்டின் சிறந்த தருணத்திற்கான விருதை (2000-2020) சச்சின் டெண்டுல்கர் வென்றுள்ளார்.
- 'சக வீரர்களின் தோள்களினால் சுமந்துச் செல்லப்படுதல்' என்ற தலைப்பு கொண்ட சச்சின் டெண்டுல்கரின் புகைப்படத்திற்கு 2020 ஆம் ஆண்டின் லாரியஸ் விளையாட்டு விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- சச்சின் டெண்டுல்கரை இந்திய அணியினர் தோள்களில் சுமந்து செல்லும் புகைப்படத்தை "சிறந்த விளையாட்டு தருணத்திற்கான விருதுக்காக" தேர்வுக் குழுவினர் தேர்வு செய்தனர்.




- ❖ லாரியஸ் உலக விளையாட்டு விருதுகள் என்பது விளையாட்டு உலகில் சிறந்து விளங்கும் தனிநபர்களையும் அணிகளையும் கௌரவிக்கும் வருடாந்திர விருது வழங்கும் ஒரு விழாவாகும்.
- ❖ இது 1999 ஆம் ஆண்டில் "லாரியஸ் ஸ்போர்ட் ஃபார் குட் ஃபவுண்டேஷனால்" நிறுவப் பட்டது.
- ❖ இந்த நிகழ்வானது ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்றது.

| ஆண்டு | விளையாட்டு வீரர் | விளையாட்டு வீராங்கனை | அணி | திருப்புமுனை | மீண்டும் எழுச்சி பெறுதல் | மாற்றுத் திறன் | செயல்பாடு | சிறந்த தருணம்் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2020 | லூயிஸ் ஹாமில்டன் & லியோனல் மெஸ்ஸி | சிமோன் பைல்ஸ் | தென்னாப்பிரிக்கா தேசிய ரக்பி யூனியன் அணி | ஏகன் பெர்னல் | சோபியா ஃப்ளோர்ஷ் | ஒக்ஸானா மாஸ்டர்ஸ் | சோலி கிம் | சச்சின் டெண்டுல்கர் |



## ஆசியக் கால்பந்து கூட்டமைப்பு 2022

- ஆசியக் கால்பந்து கூட்டமைப்பின் (Asian Football Confederation - AFC) மகளிர் ஆசிய கோப்பை – 2022 என்ற போட்டியை நடத்தும் முதலாவது தெற்காசிய நாடாக இந்தியா பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் AFC 16 வயதுக்குட்பட்டோர் சாம்பியன்ஷிப் போட்டியையும் 2017 ஆம் ஆண்டில் ஃபிஃபா 17 வயதுக்குட்பட்டோர் உலகக் கோப்பை போட்டியையும் இந்தியா நடத்தியது.
- இதற்கு முன்பு 1980 ஆம் ஆண்டில் AFC மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்தியது.
- இந்தப் போட்டியானது 2018 ஆம் ஆண்டில் ஜோர்டானில் விளையாடப்பட்டது. மேற்கு ஆசிய நாடு என்ற வகையில் முதல் முறையாக இந்தப் போட்டியை ஜோர்டான் நடத்தியது.

## ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி - 2020

- இந்தப் போட்டியில் இந்தியா 5 தங்கம், 6 வெள்ளி மற்றும் 9 வெண்கலம் ஆகியவற்றை வென்றுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள புது தில்லியில் நடத்தப்பட்டது.
- இந்திய மகளிர் மல்யுத்த வீராங்கனைகளான சரிதா மோர், பிங்கி, திவ்யா கக்ரன் ஆகியோர் இந்தியாவிற்காக தங்கப் பதக்கங்களைப் பெற்றனர்.
- இதற்கு முன்பு, 2018 ஆம் ஆண்டில் கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நவ்ஜோத் கவுர் என்பவரின் மூலம் மூத்தோர் ஆசிய சாம்பியன்ஷிப் மகளிர் போட்டியில் இந்தியா ஒரே ஒரு தங்கப் பதக்கத்தை மட்டுமே வென்று இருந்தது.
- 2019–20 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக சீனா இந்தப் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது.
- கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக ஜனநாயகக் கொரிய மக்கள் குடியரசு மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவை இந்தப் போட்டியில் பங்கேற்க முடியவில்லை.

## காமன்வெல்த் விளையாட்டு – 2022

- 2022 ஆம் ஆண்டின் பர்மிங்காம் துப்பாக்கி சுடுதல் மற்றும் வில்வித்தைப் போட்டி ஆகியவை இந்தியாவில் ஆறு மாதங்களுக்கு முன்பே நடைபெற உள்ளது.
- காமன்வெல்த் விளையாட்டுக் கூட்டமைப்பானது இந்த விளையாட்டுப் போட்டிகள் 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் சண்டிகரில் நடைபெறும் என்று அறிவித்துள்ளது. பிற முக்கிய விளையாட்டுகள் ஜூலை மாதம் பர்மிங்காமில் தொடங்க இருக்கின்றன.
- இந்தப் போட்டியில் துப்பாக்கி சுடுதல் போட்டி சேர்க்கப்படா விட்டால் இந்த விளையாட்டுகளைப் புறக்கணிப்பதாக முன்னதாக இந்தியா கூறி இருந்தது.
- 2022 ஆம் ஆண்டிற்கான அதன் விளையாட்டுத் திட்டத்தில் துப்பாக்கி சுடுதல் போட்டி அல்லது வில்வித்தைப் போட்டியைச் சேர்க்க வேண்டாம் என்று பர்மிங்காம் முடிவு செய்தது.

- இருப்பினும், இந்தியா துப்பாக்கி சுடுதல் போட்டியில் சிறந்த சாதனை படைத்து, 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற கோல்ட் கோஸ்ட் விளையாட்டுப் போட்டிகளில் 16 பதக்கங்களை வென்றது.




# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடலோரக் காவல்படை - 44வது நிறுவன தினம்

- இந்தியக் கடலோரக் காவல்படையானது (Indian Coast Guard - ICG) தனது 44வது நிறுவன தினத்தை பிப்ரவரி 1 அன்று கொண்டாடியது.
- 1977 பிப்ரவரி 1 அன்று தொடங்கப்பட்ட ICG ஆனது கடலோரக் காவல் படைச் சட்டம் 1978 என்பதனை அமல்படுத்திய பின்பு மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் அது ஒரு முழு அளவிலான சுயாதீன ஆயுதப் படையாக மாறியது.
- நாட்டின் பரந்த கடல்சார் மண்டலங்களைப் பாதுகாப்பதே இதன் முதன்மையான பணியாகும்.

## உலக ஈரநிலங்கள் தினம் - பிப்ரவரி 02

- 1971 ஆம் ஆண்டில் ஈரானில் உள்ள ஒரு நகரமான ராம்சாரில் ஈரநிலங்கள் தொடர்பான ஒப்பந்தம் ஒன்று ஏற்றுக் கொள்ளப் பட்டதைக் குறிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 2 ஆம் தேதியன்று உலக ஈரநிலங்கள் தினமானது கொண்டாடப்படுகின்றது.
- இந்தியா 1982 ஆம் ஆண்டு முதல் இந்த ஒப்பந்தத்தில் ஒரு அங்கமாக இருந்து வருகின்றது. மேலும் ஈரநிலங்களைத் திறனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான ராம்சார் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா உறுதியாக உள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, 'ஈரநிலங்கள் மற்றும் பல்லுயிர் பெருக்கம்' என்பதாகும்.
- ஈரநிலங்கள் என்பது பருவகாலத்தின் போது அல்லது நிரந்தரமாக நீரால் சூழப்பட்டுள்ள

ஒரு சுற்றுச்சூழல் அமைப்பாகும்.

- சதுப்பு நிலக் காடுகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், ஏரிகள், கழிமுகங்கள், ஆற்றுச் சமவெளிகள் & வெள்ளம் சூழ்ந்த காடுகள், நெல் வயல்கள் மற்றும் பவளப் பாறைகள் ஆகியவை இதில் அடங்கும்.
- ஈரநிலங்கள் தொடர்பான ராம்சார் ஒப்பந்தமானது உலகளாவிய ஈரநிலக் கண்ணோட்டத்தை வெளியிடுகின்றது.
- இந்தியாவில் தற்பொழுது 37 ராம்சார் தளங்கள் உள்ளன. இந்தத் தளங்கள் 1.07 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் பரவிக் காணப்படுகின்றன.




## உலகப் புற்றுநோய் தினம் – 2020, பிப்ரவரி 04

- புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் உலகப் புற்றுநோய் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு,"I am and I will" என்பதாகும்.
- இந்தக் கருத்துருவானது அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- உடலின் திசு அல்லது உறுப்புகளில் உள்ள உயிரணுக்களின் கட்டுப்பாடற்ற, அசாதாரண வளர்ச்சியினால் புற்றுநோய் ஏற்படுகின்றது.
- இது உலகளவில் நிகழும் மரணங்களுக்கு இரண்டாவது முக்கியக் காரணமாக விளங்குகின்றது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, ஆறு நபர்களில் ஒருவர் புற்றுநோயினால் இறக்கின்றார்.
- புற்றுநோயினால் ஏற்படும் ஏறக்குறைய 70% இறப்புகள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நிகழ்கின்றது.
- உலகப் புற்றுநோய் தினத்தைக் (பிப்ரவரி 4) குறிப்பதற்காக உலக சுகாதார நிறுவனம் மற்றும் புற்றுநோய் தொடர்பான சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம் (IARC - International Agency for Research on Cancer) ஆகியவை பின்வரும் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. அவையாவன:
    - "புற்றுநோய் குறித்த அறிக்கை: முன்னுரிமைகளை வரிசைப்படுத்துதல், பயனுள்ள வகையில் முதலீடு செய்தல் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பு அளித்தல்".
    - "உலக புற்றுநோய் அறிக்கை: புற்றுநோய் தடுப்புக்கான புற்றுநோய் ஆராய்ச்சி"

என்பதாகும்.




## பெண் பிறப்புறுப்பு சிதைவுக்கு எதிராக சகிப்புத்தன்மையல்லாததற்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 06

- பெண் பிறப்புறுப்பு சிதைவை (Female Genital Mutilation - FGM) ஒழிப்பதற்கான ஐ.நா.வின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த விழிப்புணர்வு தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இந்நாளானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பெண் குழந்தைகள் மற்றும் பெண்களின் மனித உரிமைகளை மீறும் நடவடிக்கையான FGM குறித்த விழிப்புணர்வை இந்நாள் பரப்புகின்றது.
- இந்த ஆண்டுக்கான கருப்பொருள் - "இளைஞர் சக்தியைப் பரப்புதல்: சுழிய பெண் பிறப்புறுப்பு சிதைவுக்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஒரு பத்தாண்டு காலம்" என்பதாகும்.
- இந்தக் கருப்பொருளானது 2030 ஆம் ஆண்டுக்குள் FGMஐ ஒழிப்பதின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- இந்த நடைமுறையானது பொதுவாக ஆப்பிரிக்காவின் வடகிழக்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் வழக்கத்தில் உள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியமும் யுனிசெஃப்பும் இணைந்து FGMஐ ஒழிப்பதற்கான மிகப்பெரிய உலகளாவியத் திட்டத்திற்குத் தலைமை தாங்கின.




## ரவிதாஸ் ஜெயந்தி - பிப்ரவரி 9

- 14 ஆம் நூற்றாண்டின் துறவியான ரவிதாஸின் பிறந்த நாள் பிப்ரவரி 9 ஆம் தேதி இந்தியா முழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- ரவிதாஸ் ஒரு இந்தியக் கவிஞராவார்.
- அவர் ஒரு சமூக சீர்திருத்தவாதி. அவரது போதனைகள் நிர்குனா-சகுனா ஆகிய கருப்பொருள்களைக் கையாளுகின்றன.
- நிர்குனா என்பது அறிவை மையமாகக் கொண்டது மற்றும் சகுனா என்பது அன்பை மையமாகக் கொண்டது.
- இவை இரண்டும் பக்தி இயக்கத்தின் போது கடவுளைக் கற்பனை செய்வதற்கான மாற்று வழிகள் ஆகும்.

## உலக பருப்பு வகைகள் தினம் – பிப்ரவரி 10

- மத்திய விவசாய மற்றும் வேளாண் நலத் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் உலக பருப்பு வகைகள் தினத்தின் கொண்டாட்டங்களை புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- மண் வளத்தை மேம்படுத்துவதில் பருப்பு வகைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- இவை ஊடுபயிர் முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேளாண் பன்முகத் தன்மையை ஊக்குவிக்க உதவுகின்றன.
- ஐக்கிய நாடுகள் பருப்பு வகைகள் தினத் தீர்மானமானது 2013 ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப் பட்டது. இத்தீர்மானமானது 2016 ஆம் ஆண்டை சர்வதேசப் பருப்பு வகைகள் ஆண்டாக அனுசரிக்க வழிவகை செய்கின்றது.
- இத்தினமானது 2019 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.
- 2016 - 17 ஆம் ஆண்டு முதல் இந்தியா பருப்பு வகைகளில் தன்னிறைவை எட்டியுள்ளது.
- 2016 ஆம் ஆண்டானது சர்வதேசப் பருப்பு வகைகள் ஆண்டாக அனுசரிக்கப்பட்டது.




## தேசிய குடற்புழு நீக்க தினம் - பிப்ரவரி 10

- ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 10 மற்றும் ஆகஸ்ட் 10 ஆகிய தேதிகளில் இரண்டு முறை தேசிய குடற்புழு நீக்க தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இந்நிகழ்ச்சியானது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய சுகாதாரத் திட்டமானது இந்த தினத்தைக் கடைபிடிக்கும் நிறுவனமாகும்.
- அனைத்து குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே ஒட்டுண்ணி குடல் புழுக்கள் என்று பொதுவாக அழைக்கப்படும் மண்ணின் மூலம் பரவும் குடற்புழுநோய்களின் (Soil Transmitted Helminths - STH) பாதிப்பைக் குறைப்பதே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- இந்தப் புழுக்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கும் மக்களின் மலத்திலிருந்து முக்கியமாகப் பரவுகின்றன.

- இந்தத் தினத்தின் போது, அல்பெண்டசோல் என்ற குடற்புழு நீக்க மாத்திரையானது குழந்தைகளுக்கு வழங்கப் படுகின்றது.
- இந்த நிகழ்வானது 2015 ஆம் ஆண்டு முதல் ஒரு நாளைக்கு இரண்டு முறை என்ற அளவில் (இரண்டு முறை மாத்திரை வழங்குதல்) அனுசரிக்கப்படுகின்றது.




## இணையப் பாதுகாப்பு தினம் - பிப்ரவரி 11

- இணையப் பாதுகாப்பு தினமானது (Safer Internet Day - SID) நிகழ்நேரத் தொழில்நுட்பம் மற்றும் கைபேசிகள் ஆகியவற்றின் பாதுகாப்பான மற்றும் பொறுப்பான பயன்பாட்டை ஊக்குவிக்கின்றது.
- இந்த ஆண்டின் கருத்துரு, 'சிறந்த இணையத்திற்காக ஒன்றிணைதல்' என்பதாகும்.
- இந்தத் தினமானது 2004 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இன்சேஃப் அமைப்பால் உருவாக்கப்பட்டது.
- இந்த முன்முயற்சியை விரிவாக்குவதற்கு, இணையப் பாதுகாப்பு தினக் குழுக்கள் 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.
- இந்தியாவில், புது தில்லியைத் தளமாகக் கொண்ட ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமான டிஐஎஸ்சி (இணையப் பாதுகாப்பு கொண்ட சமூகத்தை உருவாக்குதல்) அமைப்பானது SID குழுவில் ஒன்றாக விளங்குகின்றது.




## அறிவியல் துறையில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 11

- ❖ இந்தத் தினமானது 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 11 அன்று ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- ❖ பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அறிவியல் துறையில் சமமான அணுகலை வழங்குதல் மற்றும் அறிவியல் துறையில் அவர்களின் பங்கேற்பை ஊக்குவித்தல் ஆகியவை இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- ❖ இந்த ஆண்டுக் கொண்டாட்டமானது "அனைவரையும் உள்ளடக்கிய பசுமை வளர்ச்சிக்காக அறிவியல் துறையில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பங்கேற்பு" என்ற கருப்பொருளில் அனுசரிக்கப்பட்டது.
- ❖ உலகெங்கிலும் 30% பெண்கள் மட்டுமே ஆராய்ச்சியாளர்களாக இருப்பதால் இந்தத் தினத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

## உலக யுனானி தினம் - பிப்ரவரி 11

- ❖ ஒவ்வொரு ஆண்டும், ஹக்கீம் அஜ்மல் கானின் பிறந்த நாளான பிப்ரவரி 11 அன்று, உலக யுனானி தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ அவர் ஒரு இந்திய யுனானி மருத்துவர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார்.
- ❖ இந்த நாளின் முக்கிய நோக்கமானது யுனானி மருத்துவ முறை, அதன் நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் நோய் தீர்க்கும் தத்துவங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதாகும்.
- ❖ அந்த நாளை நினைவுகூரும் வகையில் மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஒரு விழாவை ஏற்பாடு செய்தது. அதில் மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார்.
- ❖ யுனானி மருத்துவ முறையானது கிரேக்கத்தில் தோன்றியது.
- ❖ இது இந்தியாவில் ஏறக்குறைய பதினொன்றாம் நூற்றாண்டில் அரேபியர்கள் மற்றும் பாரசீகர்களால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- ❖ ஹக்கீம் அஜ்மல் கானின் தாத்தா ஹக்கீம் ஷெரீப் கான் முகலாய பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்திற்கு மருத்துவராக இருந்தார்.




## சர்வதேச டார்வின் தினம் - பிப்ரவரி 12

- பரிணாம உயிரியலின் தந்தையான சார்லஸ் டார்வினின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் பட்டது.
- 1809 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதி இங்கிலாந்தின் ஷ்ரோப்ஷையரில் உள்ள ஷ்ரூஸ்பரி என்ற இடத்தில் இவர் பிறந்தார்.
- இந்த நாளானது பரிணாம மற்றும் தாவர அறிவியலில் டார்வின் ஆற்றியப் பங்களிப்பை எடுத்துக் காட்டுகின்றது.

## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13

- வானொலியின் முக்கியத்துவம் குறித்துப் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 13 அன்று உலக வானொலி தினம் கொண்டாடப் படுகின்றது.
- இந்த ஆண்டு உலக வானொலி தினத்தின் கருப்பொருள் - 'வானொலி மற்றும் பன்முகத் தன்மை' என்பதாகும்.
- 2011 ஆம் ஆண்டில் 36வது யுனெஸ்கோவின் பொது மாநாட்டில், பிப்ரவரி 13 ஆம் நாள் உலக வானொலி தினமாக அறிவிக்கப் பட்டது.
- 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அகில இந்திய வானொலியானது உலகின் மிகப்பெரிய வானொலி வலையமைப்புகளில் ஒன்றாகும்.



## தேசிய மகளிர் தினம் - பிப்ரவரி 13

- இந்தியாவின் நைட்டிங்கேல் என்று அழைக்கப்படுகின்ற சரோஜினி நாயுடுவின் பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில், இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 13 ஆம் தேதியை தேசிய மகளிர் தினமாக அனுசரிக்கின்றது.
- 1925 ஆம் ஆண்டில் சரோஜினி நாயுடு இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராக இருந்தார்.
- அவர் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் 1949 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் தேதி வரை ஐக்கிய மாகாணங்களின் முதலாவது ஆளுநராகப் பணியாற்றினார்.
- சர்வதேச மகளிர் தினமானது ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.




## உலக எறும்புத் திண்ணி தினம் - பிப்ரவரி 15

- எறும்புத் திண்ணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்தத் தனித்துவமான உயிரினங்களை அழிவிலிருந்துப் பாதுகாக்கவும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 3வது சனிக்கிழமையன்று உலக எறும்புத் திண்ணி தினமானது அனுசரிக்கப்பட இருக்கின்றது.
- 9வது உலக எறும்புத் திண்ணி தினமானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று அனுசரிக்கப் பட்டது.
- மத்தியப் பிரதேச வனத்துறையும் வனவிலங்குப் பாதுகாப்பு அறக்கட்டளையும் இணைந்து முதன்முறையாக இந்த இனத்தின் சுற்றுச்சூழலை அறிந்து கொள்வதற்காகவும் பயனுள்ள பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குவதற்காகவும் ஒரு இந்திய எறும்புத் திண்ணியை (மனிஸ் கிராசிகுடாட்டா) வானலை அடையாளத்துடன் இணைத்துள்ளது.
- எறும்புத் திண்ணிகள் "செதில் எறும்புத் திண்ணிகள்" என்றும் அழைக்கப்படுகின்றன. இது பல் இல்லாத ஒரு விலங்கு இனமாகும். உலகில் மிக அதிக அளவில் கடத்தப்படும் வனவிலங்கு இனங்களில் ஒன்றாக இது விளங்குகின்றது.

- இந்தியா 2 வகையான எறும்புத் திண்ணிகளுக்கு வாழிடமாகத் திகழ்கின்றது. சீன எறும்புத் திண்ணிகள் (மனிஸ் பென்டாடாக்டைலா) வடகிழக்கு இந்தியாவிலும் இந்திய எறும்புத் திண்ணிகள் நாட்டின் பிற பகுதிகளிலும் (இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான்) பரவிக் காணப்படுகின்றன.
- இந்த 2 இனங்கள் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972ன் அட்டவணை Iன் பகுதி 1ன் கீழ் மற்றும் CITESன் பட்டியல் Iன் கீழ் (வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் ஆபத்தான இனங்களில் சர்வதேச வர்த்தகம் மீதான ஒப்பந்தம் - Convention on International Trade in Endangered Species) பட்டியலிடப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்றன.




## மண் வள அட்டை தினம் - பிப்ரவரி 19

- பிரதமர் நரேந்திர மோடி மண் வள அட்டை திட்டத்தை 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று ராஜஸ்தானில் உள்ள சூரத்கரில் தொடங்கினார்.
- இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஐந்தாம் ஆண்டு நிறைவானது இந்த ஆண்டின் மண் வள அட்டை தினத்தில் அனுசரிக்கப்பட்டது.
- அனைத்து விவசாயிகளுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மண் வள அட்டைகளை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அட்டையானது மண்ணில் உள்ள ஊட்டச்சத்துக் குறைபாடுகள் பற்றிய விவரங்களை வழங்கும்.
- இதன் மூலம் விவசாயிகள் பொருத்தமான உரங்களை மண்ணில் சேர்த்து விளைச்சலை அதிகரிக்க முடியும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2015 ஆம் ஆண்டினை "சர்வதேச மண் ஆண்டு" என்று அறிவித்தது.




## உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20

- பாலின சமத்துவம், பழங்குடியின மக்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக உலக சமூக நீதி தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள் "சமூக நீதியை அடைவதற்காக ஏற்றத்தாழ்வுகளின் இடைவெளியைத் தடுப்பது" என்பதாகும்.
- 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் அன்று, பொதுச் சபையானது பிப்ரவரி 20 ஆம் தேதியை ஆண்டுதோறும் உலக சமூக நீதி தினமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- முதலாவது உலக சமூக நீதி தினமானது 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று அனுசரிக்கப் பட்டது.

## மிசோரம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் மாநில தினம் - பிப்ரவரி 20

- 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று, மிசோரம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியவை முறையே இந்திய ஒன்றியத்தின் 23 மற்றும் 24வது மாநிலங்களாக (புதிய 2 மாநிலங்கள்) உருவாகியுள்ளன.

***மிசோரம்***

- வடகிழக்கு மறுசீரமைப்புச் சட்டம், 1972 ஆனது அமல்படுத்தப்பட்டதன் மூலம் மிசோரமானது ஒரு ஒன்றியப் பிரதேசமாக மாறியுள்ளது.
- மிசோரம் மாநிலச் சட்டம், 1986 ஆல் மிசோரத்திற்கு மாநில உரிமை வழங்கப் பட்டுள்ளது.
- தலைநகரம்: அய்ஸ்வால்
- பாலின விகிதம்: 1000 ஆண்களுக்கு 975 பெண்கள் (தேசிய அளவு: 943/1000)
- கல்வியறிவு: 91.58% (தேசிய அளவில்: 74.04%)

- மிசோரம் மாநிலமானது தனது சர்வதேச எல்லையை மியான்மர் மற்றும் வங்க தேசத்துடன் பகிர்ந்து கொள்கின்றது.
- இந்தியாவின் வனங்களின் நிலை குறித்த அறிக்கை - 2019ன் படி, மிசோரம் மாநிலமானது தனது மொத்தப் புவியியல் பரப்பளவில் 85.4 சதவீதம் என்ற அளவில் அதிகபட்ச வனப்பகுதியைக் கொண்டுள்ளது.

***அருணாச்சலப் பிரதேசம்***

- இந்தப் பகுதியானது 1972 ஆம் ஆண்டில் அருணாச்சலப் பிரதேசத்தின் ஒன்றியப் பிரதேசமாக மேம்படுத்தப்பட்டது.
- அருணாச்சலப் பிரதேசத்திற்கு 1986 ஆம் ஆண்டின் அருணாச்சலப் பிரதேச மாநிலச் சட்டத்தினால் 1987 ஆம் ஆண்டில் மாநில உரிமை வழங்கப்பட்டது.
- தலைநகரம்: இட்டாநகர்
- பாலின விகிதம்: 1000 ஆண்களுக்கு 938 பெண்கள் (தேசிய அளவு: 943/1000)
- கல்வியறிவு: 65.38% (தேசிய அளவில்: 74.04%)
- அருணாச்சலப் பிரதேசமானது பூடான், சீனா மற்றும் மியான்மருடன் சர்வதேச எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றது.
- இது வடகிழக்கு பிராந்தியத்தில் மிகப் பெரிய மாநிலப் பகுதியாக விளங்குகின்றது. இது அசாம் மாநிலத்தை விடவும் பெரியதாக உள்ளது.




Statehood Day of Mizoram and Arunachal Pradesh
February 20

## சர்வதேசத் தாய் மொழி தினம் – பிப்ரவரி 21

- 2000 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21 அன்று சர்வதேசத் தாய் மொழி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- பன்மொழி மற்றும் கலாச்சாரப் பன்முகத் தன்மையை மேம்படுத்தும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- சர்வதேசத் தாய் மொழி தினத்தைக் கொண்டாடும் சிந்தனையை முன்வைத்தது வங்கதேசம் ஆகும்.

- இந்த ஆண்டிற்கான கருப்பொருள் : எல்லைகளற்ற மொழிகள் (Languages without Borders) என்பதாகும்.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 2008 ஆம் ஆண்டை சர்வதேச மொழிகளின் ஆண்டாக அறிவித்தது.
- உலகளவில் 40% மக்களுக்குத் தாம் பேசும் அல்லது புரிந்து கொள்ளும் மொழியில் கல்விக்கான அணுகல் கிடைப்பதில்லை.

***மத்ரி பாஷா திவாஸ் (Matri Bhasha Diwas)***

- மத்திய மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சகமானது கல்வி நிறுவனங்கள் மற்றும் மொழி நிறுவனங்களுடன் சேர்ந்து மத்ரி பாஷா தினத்தை கொண்டாடுகிறது.
- 'நம் பன்மொழி பாரம்பரியத்தைக் கொண்டாடுதல்' என்ற கருப்பொருளின் கீழ் இந்தத் தினம் கொண்டாடப்படுகின்றது.
- இது 'ஏக் பாரத் ஸ்ரேஷ்ட பாரத்' (EK Bharat shreshtha Bharat) உந்துதலின் பிரதிபலிப்பாக அமைகின்றது.

## உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22

- உலக சாரணர் தினமானது 1907 ஆம் ஆண்டில் பிரவுன்சியா தீவில் நடத்தப்பட்ட முதலாவது சாரணர் முகாமை நினைவு கூர்கின்றது.
- சாரணர் மற்றும் அதன் வழிகாட்டல் நிறுவனரான லார்ட் ராபர்ட் பேடன் - பவல் மற்றும் அவரது மனைவி & உலகத் தலைமை வழிகாட்டியான லேடி ஒலேவ் பேடன் - பவல் ஆகியோரின் பிறந்த நாள் என்பதால் இந்தத் தினமானது தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- பேடன் பவல் என்பவர் ஒரு ஆங்கிலேய இராணுவ அதிகாரி, எழுத்தாளர், நிறுவனர் மற்றும் உலக அளவிலான சிறுவர் சாரணர் இயக்கத்தின் முதலாவது தலைமை சாரணர் ஆவார்.
- 1910 ஆம் ஆண்டில் பேடன் - பவல் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று சிறுவர் சாரணர் மன்றத்தை உருவாக்கினார்.



## உலக சிந்தனை தினம் - பிப்ரவரி 22

- உலக சிந்தனை தினமானது ஆண்டுதோறும் பிப்ரவரி 22 அன்று அனைத்துப் பெண் வழிகாட்டிகள் மற்றும் பெண் சாரணர்கள் ஆகியோரால் கொண்டாடப் படுகின்றது. இது முன்னர் சிந்தனை தினம் என்று அழைக்கப்பட்டது.
- இது சாரணர் & வழிகாட்டி அமைப்புகள் மற்றும் உலகெங்கிலும் உள்ள சில சிறுவர்கள் சார்ந்த சங்கங்களால் கொண்டாடப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருப்பொருள், "வாழும் முன்னணி நபர்கள்" என்பதாகும்.




## உலக அமைதி மற்றும் புரிதல் தினம் - பிப்ரவரி 23

- இது 115 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு நிறுவப் பட்டதை நினைவு கூர்கின்றது.
- 1905 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 அன்று பால் ஹாரிஸ், குஸ்டாவஸ் லோஹர், சில்வெஸ்டர் ஷைல் மற்றும் ஹிராம் ஷோரே ஆகியோர் சிகாகோவில் கூடியிருந்த முதல் ரோட்டரி சந்திப்பு இதுவாகும்.
- இந்த ஆண்டுவிழா "உலக அமைதி மற்றும் புரிதல் தினம்" என்று அழைக்கப் படுகின்றது.
- ரோட்டரி இன்டர்நேஷனல் என்ற பெயரானது 1922 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- போலியோவை முடிவுக்கு கொண்டு வந்தது என்பது ரோட்டரி இன்டர்நேஷனலின் மிகவும் புகழ்பெற்ற ஒரு மனிதாபிமான முயற்சியாகும்.



## மத்தியக் கலால் தினம் - பிப்ரவரி 24

- மத்தியக் கலால் மற்றும் உப்புச் சட்டம், 1944 இயற்றப் பட்டதைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் இந்தத் தினமானது கொண்டாடப் படுகின்றது.
- மத்தியக் கலால் மற்றும் சுங்க வாரியமானது (Central Board of Excise and Customs - CBEC) நாடு முழுவதும் மத்தியக் கலால் தினத்தைக் கொண்டாடியது.
- மத்தியக் கலால் மற்றும் சுங்க வாரியம் என்பது மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள வருவாய்த் துறையின் ஒரு பகுதியாகும்.
- இந்த வாரியமானது சுங்கச் சட்டம், 1962, சுங்க கட்டணச் சட்டம், 1975, மத்திய கலால் சட்டம், 1944 மற்றும் சேவை வரிச் சட்டம் ஆகியவற்றைக் கையாள்கின்றது.
- இருப்பினும், 2017 ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Services Tax - GST) உருவாக்கப்பட்ட பிறகு, இந்த வாரியத்தின் நடவடிக்கைகள் GST தொடர்பான சட்டங்களால் வழி நடத்தப் படுகின்றன.

*இது பற்றி*

- முன்னதாக மத்திய கலால் மற்றும் சுங்க வாரியமானது மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியம் என்று அழைக்கப்பட்டது.
- சுங்கம் தொடர்பான சட்டங்களை நிர்வகிப்பதற்காக சுங்க மற்றும் மத்திய கலால் / மத்திய GST துறையானது 1855 ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியாவின் தலைமை ஆளுநரால் நிறுவப்பட்டது.




## உலக அரசுசாரா அமைப்பு தினம் - பிப்ரவரி 27

- இது அரசுசாரா அமைப்புகளின் (Non-governmental organizations - NGO) சாதனைகளைக் கொண்டாடுவதற்கும் சிறிய, அடிமட்ட அமைப்புகளுக்கு அவர்களுக்குத் தகுதியான அங்கீகாரத்தைப் பெற அனுமதிப்பதற்காகவும் கொண்டாடப்படும் NGOகளுக்கான ஒரு முக்கியமான வருடாந்திர தினமாகும்.
- இது 2010 ஆம் ஆண்டில் லித்துவேனியாவில் நடைபெற்ற பால்டிக் கடல் நாடுகள் அமைப்பின் IX பால்டிக் கடல் அரசுசாரா நிறுவன மன்றத்தினால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.




## தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28

- 'ராமன் விளைவு' கண்டுபிடித்ததை கௌரவிக்கும் விதமாக தேசிய அறிவியல் தினம் கொண்டாடப் படுகின்றது.
- இந்த நாளில் அவர் 'ராமன் விளைவைக்' கண்டுபிடித்தார். அதற்காக இவர் நோபல் பரிசையும் வென்றார்.
- 2020 ஆம் ஆண்டின் தேசிய அறிவியல் தினத்தின் கருப்பொருள், அறிவியல் துறையில் பெண்களின் பங்களிப்பைப் பாராட்டுவதை நோக்கமாகக் கொண்ட "விஞ்ஞானத்தில் பெண்கள்" என்பதாகும்.




## அரிய வகை நோய் தினம் - பிப்ரவரி 29

- இந்தத் தினமானது பிப்ரவரி மாதத்தின் கடைசி தினத்தில் அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது அரிய வகை நோய்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அரிய வகை நோய்கள் உள்ள நபர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சிகிச்சை மற்றும் மருத்துவ சேவை அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான அரிய வகை நோய் தினத்தின் முழக்கம் "அரியது பல, அரிதானது வலுவானது, அரியது பெருமை" என்பதாகும்.
- ஐரோப்பிய அமைப்பானது 2008 ஆம் ஆண்டில் அரிய வகை நோய்களுக்கான தினத்தை நிறுவியது.

# இதரச் செய்திகள்

## போக்குவரத்து நெரிசல் குறியீடு 2019

- வழிசெலுத்தல், போக்குவரத்து மற்றும் வரைபட பொருள்களை வழங்கும் நெதர்லாந்தைச் சேர்ந்த ஒரு சர்வதேச அமைப்பான டாம் டாம் ஆனது 2019 ஆம் ஆண்டின் போக்குவரத்து நெரிசல் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது போக்குவரத்து தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காக இருப்பிடத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது. இந்த அமைப்பானது ஒன்பது ஆண்டுகளாக நகரத் தரவரிசைகளை வெளியிட்டு வருகின்றது.




- அதிக ஓட்டுநர்களுடன் உலகின் அதிக போக்குவரத்து நெரிசல் மிக்க நகரமாக பெங்களூரு நகரம் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் மும்பை (4), புனே (5), புது தில்லி (8) ஆகியவை இந்திய நகரங்களில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன.
- இந்தக் குறியீட்டில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மணிலா, கொலம்பியாவிலிருந்து போகோடா, ரஷ்யாவிலிருந்து மாஸ்கோ, பெருவைச் சேர்ந்த லிமா, துருக்கியிலிருந்து இஸ்தான்புல் மற்றும் இந்தோனேசியாவிலிருந்து ஜகார்த்தா ஆகியவை முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ளன.

## டாங்கி செயலி

- இந்தியர்களிடையே செய்தி தொடர்பான கல்வியறிவை ஊக்குவிக்க கூகுள் நிறுவனமானது I மில்லியன் அமெரிக்க டாலர்களை மானியமாக அறிவித்துள்ளது.
- இதற்காக இந்நிறுவனம் “டாங்கி” (Tangi) என்ற புதிய செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கூகிளின் டாங்கி செயலியானது “டூ இட் யுவர்செல்ஃப்” என்ற காணொளிகளில் கவனம் செலுத்துகின்றது.
- இந்த செயலியின் பெயர் TeAch aNd GIve என்ற பெயரிலிருந்து ஈர்க்கப் பட்டுள்ளது.

## 2019 ஆம் ஆண்டின் உலகளாவிய கோ டு திங்க் டேங்க் குறியீட்டு அறிக்கை

- 2019 ஆம் ஆண்டின் உலகளாவிய கோ டு திங்க் டேங்க் குறியீட்டு அறிக்கை (Global Go to Think Tank Index Report - GGTTI) என்பது உலகில் உள்ள கொள்கை உருவாக்கக் குழுக்களின் ஒரு முழுமையான தரவரிசை அறிக்கையாகும்.
- இது 2008 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது.
- இந்தக் குறியீடானது உலகெங்கிலும் உள்ள சிறந்த கொள்கை உருவாக்கக் குழுக்களை தரவரிசைப் படுத்துகின்றது.
- இந்த அறிக்கையின் படி, 176 உலகளாவிய கொள்கை உருவாக்கும் குழுக்களில் இந்தியாவைச் சேர்ந்த அப்சர்வர் ஆராய்ச்சி அமைப்பானது 27வது இடத்தில் உள்ளது.
- இந்த அறிக்கையில் அமெரிக்காவைச் சேர்ந்த சர்வதேச அமைதிக்கான கார்னகி அமைப்பானது முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- 509 கொள்கை உருவாக்கும் குழுக்களுடன் இந்தியா இரண்டாவது நாடாக அதிக எண்ணிக்கையிலான கொள்கை உருவாக்கும் குழுக்களைக் கொண்டுள்ளது.
- அமெரிக்காவில் அதிக எண்ணிக்கையிலான கொள்கை உருவாக்கும் குழுக்கள், அதாவது 1,871 கொள்கை உருவாக்கும் குழுக்கள் உள்ளன.

| தரவரிசை | கொள்கை உருவாக்கும் குழு | நாடு |
|---|---|---|
| **27** | அப்சர்வர் ஆராய்ச்சி அமைப்பு (ORF) | இந்தியா |
| **1** | சர்வதேச அமைதிக்கான கார்னகி அமைப்பு (CEIP) | அமெரிக்கா |
| **2** | புருஜெல் | பெல்ஜியம் |
| **3** | சர்வதேச உறவுகளுக்கான பிரஞ்சு நிறுவனம் (IFRI) | பிரான்சு |
| **6** | சாத்தம் ஹவுஸ் அமைப்பு | ஐக்கிய ராஜ்ஜியம் |

## WHO ஆல் வெளியிடப்பட்ட புற்றுநோய் குறித்த அறிக்கை

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 4 அன்று உலகப் புற்றுநோய் தினத்தை குறிக்கும் வகையில், WHO மற்றும் அதன் சிறப்பு அமைப்பான சர்வதேசப் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் (IARC - International Agency for Research on Cancer) ஆகியவை பின்வரும் 2 அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.
    - WHO ஆல் வெளியிடப்பட்ட "புற்றுநோய் குறித்த அறிக்கை: முன்னுரிமைகளை அமைத்தல், பயனுள்ள வகையில் முதலீடு செய்தல் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பு அளித்தல்".
    - IARC ஆல் வெளியிடப்பட்ட புற்றுநோயைத் தடுப்பதற்கான புற்றுநோய் ஆராய்ச்சி அறிக்கையான "உலக புற்றுநோய் அறிக்கை ".
- இது நோய் குறித்த உலகளாவிய செயல் திட்டத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நோய் குறித்த ஆராய்ச்சி மற்றும் நோய்த் தடுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது.

- உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின் படி, 10 இந்தியர்களில் ஒருவர் தங்களது வாழ்நாளில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 15 நபர்களில் ஒருவர் இந்த நோயால் இறந்துள்ளனர்.
- இந்தியாவில் கூடுதலாக 11.6 மில்லியன் புற்றுநோய் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. மேலும் 2018 ஆம் ஆண்டில் 7,84,800 நபர்கள் புற்றுநோயால் இறந்தனர்.
- உலகளவில் புகைப்பிடிப்பவர்களில் 50 சதவிகிதத்தினர் சீனா, இந்தியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர்.
- வருமானம் குறைந்த நாடுகளில் (ஏழை நாடுகளில்) 2040 ஆம் ஆண்டில் புற்றுநோய் பாதிப்புகள் 81% அளவிற்கு அதிகரிக்கும் என்று WHO கணித்துள்ளது.

## 8வது சர்வதேச அறிவுசார் சொத்துக் குறியீடு - 2020

- அமெரிக்க வர்த்தக மன்றத்தின் உலகளாவிய புத்தாக்கக் கொள்கை மையமானது (Global Innovation Policy Center - GIPC) 2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச அறிவுசார் சொத்துக் (Intellectual Property - IP) குறியீட்டின் 8வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டானது குறியீடானது கிரீஸ், டொமினிகன் குடியரசு மற்றும் குவைத் ஆகிய மூன்று புதிய பொருளாதார நாடுகளை உள்ளடக்கிய 53 உலகளாவிய பொருளாதார நாடுகளின் பொருளாதார சூழலை ஆராய்ந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 50 நாடுகளில் இந்தியா 36வது இடத்தில் தரப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு இந்தியாவின் நிலையானது 40வது இடத்திற்கு தரமிறக்கப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்திலும் இங்கிலாந்து, சுவீடன், பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகியவை அதற்கு அடுத்த இடங்களிலும் தரப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்தக் குறியீட்டில் ஆசியாவில், இந்தியா 4வது இடத்தில் உள்ளது. இந்தக் குறியீட்டில் ஆசியாவில் ஆஸ்திரேலியா முதலிடத்திலும் புருனே இரண்டாவது இடத்திலும் மற்றும் சீனா மூன்றாவது இடத்திலும் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்தக் குறியீட்டில் கீழ் - நடுத்தர வருமான கொண்ட பொருளாதார நாடுகளில், எகிப்து முதலிடத்திலும் இந்தியா 2வது இடத்திலும் உள்ளன.

## கொரோனா வைரஸ் பாதிப்பு – நாடுகளின் தரவரிசை

- ஜெர்மனியில் உள்ள ராபர்ட் கோச் நிறுவனம் மற்றும் ஹம்போல்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புதிய கொரோனா வைரஸ் பாதிப்புகளின் உலகளாவிய பரவலைக் கணிப்பதற்காக ஒரு கணித மாதிரியை நிறுவியுள்ளனர்.
- இந்தத் தரவரிசை முறையில் இந்தியா 17வது இடத்தில் இருக்கின்றது.
- கேரளாவில் இதுவரை மூன்று கொரோனா வைரஸ் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.
- இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ள அனைவரும் கேரளாவைச் சேர்ந்தவர்களாவர்.
- விமானப் பயணத்தின் காரணமாக கொரோனா வைரஸ் பரவுவதாக இந்த ஆய்வு கூறுகின்றது.
- விமானப் பயணத்தின் போது தாய்லாந்து நாட்டிற்கு (தரவரிசையில் முதலிடம்) அதிக அளவிலான கொரோனா வைரஸ் பாதிப்பு பரவியுள்ளது. இதன் பாதிப்பு 2.1% ஆக இருந்தது.

## உலகளாவிய எதிர்கால அறிக்கை

- சமீபத்தில், உலகளாவிய எதிர்கால அறிக்கையைப் பின்வரும் உலகளாவிய அமைப்புகள் இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ளன.
    - இயற்கைக்கான உலகளாவிய நிதியம்
    - உலகளாவிய வர்த்தகப் பகுப்பாய்வு திட்டம் மற்றும்
    - இயற்கை மூலதன திட்டம்.
- அந்த அறிக்கையின்படி, இயற்கையானது மனிதகுலத்திற்கு பின்வருகின்ற ஆறு சுற்றுச்சூழல் அமைப்புகளின் மூலம் சேவைகளை வழங்கியுள்ளது. அவை:
    1. பயிர்களின் மகரந்தச் சேர்க்கை
    2. வெள்ளம் மற்றும் அரிப்புகளிலிருந்து கடற்கரைகளைப் பாதுகாத்தல்
    3. நீர் வழங்கல்
    4. மர உற்பத்தி
    5. கடல் மீன் பிடிப்பு மற்றும்
    6. கார்பன் சேமிப்பு.
- மேற்கண்ட ஆறு சுற்றுச்சூழல் அமைப்புகளின் குறைக்கப்பட்ட சேவையானது 2050 ஆம் ஆண்டுக்குள் வருடாந்திர உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.67% வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.




## “பூமியின் எதிர்காலம் – 2020” என்ற ஒரு அறிக்கை

- “பூமியின் எதிர்காலம், 2020” என்ற ஒரு அறிக்கையானது தெற்காசிய எதிர்கால புவிப் பிராந்திய அலுவலகம், காலநிலை மாற்றத்திற்கான திவேச்சா மையம் மற்றும் இந்திய அறிவியல் நிறுவனம் ஆகியவற்றினால் வெளியிடப் பட்டுள்ளது.
- பின்வரும் நோக்கத்துடன் இந்த அறிக்கையானது தயாரிக்கப் பட்டுள்ளது:
    - கார்பன் தடத்தைக் குறைத்தல் மற்றும்
    - 2050க்குள் புவி வெப்பமடைதலை 2 டிகிரி செல்சியஸுக்குக் குறைத்தல்.

- இந்த அறிக்கையானது ஐந்து உலகளாவிய அபாயங்களைப் பட்டியலிடுகின்றது. அவையாவன,

  1. காலநிலை மாற்றம்
  2. கடுமையான வானிலை
  3. பல்லுயிர் இழப்பு
  4. உணவுப் பிரச்சினை
  5. நீர்ப் பிரச்சினை.

- 2019 ஆம் ஆண்டில், வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடு செறிவானது 415 பிபிஎம்ஐ விட அதிகமாக இருந்தது.
- 1880 ஆம் ஆண்டு முதல் 2014 முதல் 2018 வரையிலான ஐந்து ஆண்டுகளில் நிலம் மற்றும் கடல் பகுதியில் மிக அதிக வெப்பநிலையானது பதிவாகி இருந்தது.

## சாலைப் பாதுகாப்பு குறித்த மூன்றாவது உலகளாவிய மாநாடு

- 2030ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய இலக்குகளை அடைவதற்கான சாலைப் பாதுகாப்பு குறித்த மூன்றாவது உலகளாவிய உயர் மட்ட மாநாடானது ஸ்வீடன் நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோமில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- உலக சுகாதார அமைப்பானது உலக வங்கி மற்றும் 80க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அமைச்சர் தலைமையிலான பிரதிநிதிகளுடன் இணைந்து இதை ஏற்பாடு செய்தது.
- உலகளாவிய நிகழ்ச்சி நிரலில் சாலைப் பாதுகாப்பைக் கொண்டு வருவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
- இந்த மாநாட்டின் கருப்பொருள் “2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய இலக்குகளை அடைதல்” என்பதாகும்.
- பிரேசிலியா பிரகடனமானது 2015 ஆம் ஆண்டில் பிரேசிலில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்புக் குறித்த இரண்டாவது உலகளாவிய உயர் மட்ட மாநாட்டில் கையெழுத்தானது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பத்தாண்டு காலமாக 2010-2020 ஆம் பத்தாண்டை அறிவித்துள்ளது.

## உலகின் அதிகம் பேசப்படும் மூன்றாவது மொழி - இந்தி

- உலகெங்கிலும் 615 மில்லியன் மக்களால் பேசப்படும் இந்தி மொழியானது உலகிலேயே அதிகம் பேசப்படும் மூன்றாவது மொழியாகும்.
- 1,132 மில்லியன் மக்களால் பேசப்படும் ஆங்கிலம் முதலிடத்தில் உள்ளது. 1,117 மில்லியன் மக்களால் பேசப்படும் மாண்டரின் மொழி இரண்டாவது இடத்தில் உள்ளது.
- உலகில் பயன்பாட்டில் உள்ள மொழிகள் குறித்த வருடாந்திர தரவு தளத்தை எத்தனோலோக் (இனப் பண்பாட்டியல்) நிறுவனமானது வெளியிட்டுள்ளது.

- இந்தத் தரவு தளமானது 7,111க்கும் மேற்பட்ட மொழிகளை உள்ளடக்கியுள்ளது.
- பயன்பாட்டில் இல்லாத மொழிகளையும் 348 பயன்பாட்டில் உள்ள மொழிகளையும் உள்ளடக்கிய தரவுகளை இது சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

## டைம்ஸின் உயர் கல்வித் தரவரிசை - 2020

- டைம்ஸின் உயர் கல்வித் தரவரிசையானது லண்டனில் வெளியிடப்பட்டது.
- இந்தத் தரவரிசையானது "வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளின் பல்கலைக்கழகத் தரவரிசை - 2020" என்ற தலைப்பினைக் கொண்டுள்ளது.
- வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளின் முதல் 100 பல்கலைக்கழகங்களில் இந்திய அறிவியல் நிறுவனம் 16வது இடத்தைப் பிடித்துள்ளது.
- முதல் 100 இடங்களில் சுமார் 11 இந்திய பல்கலைக்கழகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
- இருப்பினும், இந்தத் தரவரிசையில் இந்தியாவை விட சீனா அதிக எண்ணிக்கையிலான பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ளது.
- இந்தத் தரவரிசையில் சீனாவைச் சேர்ந்த சுமார் 30 பல்கலைக்கழகங்கள் முதல் 100 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன.

**PERFORMANCE OVER YEARS**



While IISc retained its top position among Indian varsities, it fell two places to 16

**INDIAN UNIVERSITIES IN TOP 100 IN 2020**

| University | 2019 | 2020 | Movement |
|---|---|---|---|
| IISc Bengaluru | 14 | 16 | -2 ▼ |
| IIT Kharagpur | 55 | 32 | 23 ▲ |
| IIT Bombay | 27 | 34 | -7 ▼ |
| IIT Delhi | 66 | 38 | 28 ▲ |
| IIT Roorkee | 35 | 58 | -23 ▼ |
| IIT Indore | 61 | 61 | +/-0 ↔ |
| IIT Madras | 75 | 63 | 12 ▲ |
| IIT Ropar | NR | 63 | N/A ↔ |
| Institute of Chemical Technology | NR | 73 | N/A ↔ |
| IIT Kanpur | 46 | 77 | -31 ▼ |
| Amrita Vishwa Vidyapeetham | 141 | 90 | 51 ▲ |

Source: Times Higher Education

## உலகளாவிய எதிர்காலத்திற்கான கல்விக் குறியீடு - 2019

- பொருளாதார நுண்ணறிவுப் பிரிவானது உலகளாவிய எதிர்காலத்திற்கான கல்விக் குறியீடு – 2019 (Worldwide Education for the Future Index - WEFFI) என்ற ஒரு குறியீட்டை வெளியிட்டுள்ளது.

- இந்தக் குறியீடானது மாணவர்களைத் திறன் அடிப்படையிலான கல்வியுடன் சேர்ப்பதற்காக நாடுகள் மேற்கொள்ளும் செயல்திறன்களின் அடிப்படையில் நாடுகளை மதிப்பீடு செய்கின்றது.
- இந்தக் குறியீட்டின் கருப்பொருள், "கொள்கையிலிருந்துப் பயிற்சி வரை" என்பதாகும்.

*முக்கிய அம்சங்கள்:*

- இந்தக் குறியீட்டில் பின்லாந்து முதலிடத்தில் உள்ளது.
- இதைத் தொடர்ந்து இந்தக் குறியீட்டில் ஸ்வீடன் இரண்டாவது இடத்திலும் நியூசிலாந்து மூன்றாம் இடத்திலும் உள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தக் குறியீட்டில் இந்தியா 53 மதிப்பெண்களுடன் 35வது இடத்தைப் பிடித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இந்தக் குறியீட்டில் இந்தியா 40வது இடத்தில் இருந்தது.
- இந்தக் குறியீட்டில் கென்யா (48வது), நைஜீரியா (49வது) மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசு (50 வது) ஆகியவை கடைசி இடங்களில் உள்ளன.

## உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்புக் குறியீடு – 2019

- உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்புக் குறியீடு (Global Health Security - GHS) என்பது 195 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் அது தொடர்புடைய திறன்களின் முதலாவது விரிவான மதிப்பீடாகும்.
- GHS குறியீடு ஆனது ஆறு பிரிவுகள், 34 குறிகாட்டிகள் மற்றும் 85 துணைக் குறிகாட்டிகளைக் கொண்டு நாடுகளின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் திறன்களை மதிப்பிடுகின்றது.
- நோய்த் தடுப்பு, நோயை முன்கூட்டியே கண்டறிதல், விரைவான பதிலெதிர்ப்பு, சுகாதார அமைப்பின் தரம், தரநிலைகள் மற்றும் இடர்பாட்டுச் சூழல் ஆகியவை இந்த ஆறு பிரிவுகளாகும்.
- இந்தக் குறியீட்டில், மொத்தமுள்ள 195 நாடுகளில் மொத்தம் 100 மதிப்பெண்களுக்கு 46.5 மதிப்பெண்களுடன் இந்தியா 57வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் உலகளவில் அமெரிக்கா முதலிடத்திலும் ஐக்கிய இராஜ்ஜியம் இரண்டாவது இடத்திலும் நெதர்லாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- அண்மையில் கொரோனா வைரஸ் பாதிப்பைக் கண்டிருக்கும் சீனா இந்தக் குறியீட்டில் 51வது இடத்தில் உள்ளது.
- வட கொரியா, சோமாலியா மற்றும் கினியா ஆகியவை இந்தக் குறியீட்டின் கடைசி இடங்களில் பட்டியலிடப்பட்டுள்ளன.




## கிளிக்கி மொழிக்கான வலைத்தளம்

- திரைப்படத் தயாரிப்பாளரும் கிளிக்கி மொழியை ஆதரிப்பவருமான மதன் கார்க்கி என்பவர் உலகில் எந்தவொரு நபரும் "உலகின் எளிதான மொழியை" (கிளிக்கி) கற்றுக் கொள்ள உதவும் வகையில் ஒரு வலைத்தளத்தைத் தொடங்கியுள்ளார்.
- இந்த வலைத்தளமானது (www.kiliki.in) பெயர்கள், வீடியோக்கள் (காணொளி) மற்றும் சொல்லகராதி விளையாட்டுகளை மாற்றக்கூடிய 3,000 சொற்களைக் கொண்ட ஆங்கிலம் – கிளிக்கி - ஆங்கில அகராதியைக் கொண்டுள்ளது.
- இந்த மொழியானது பாகுபலி படத்தில் காளக்கேயர்களால் பேசப்பட்டது. இந்த மொழியானது இந்தப் படத்திற்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டதாகும்.

## நிலைத்தன்மை மற்றும் செழுமைக்கான குறியீடு 2020 குறித்த ஐ.நா.வின் அறிக்கை

- "உலகத்தில் உள்ள குழந்தைகளுக்கான எதிர்காலம்" குறித்த உலகச் சுகாதார அமைப்பு, யுனிசெஃப் மற்றும் தி லான்செட் மருத்துவ இதழ் ஆகியவற்றால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின் படி இந்தியா,
    - நிலைத்தன்மையின் குறியீடு அடிப்படையில் 77 ஆவது இடத்தையும்
    - குழந்தை செழுமையின் குறியீடு அடிப்படையில் 131 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது
- நிலைத்தன்மையின் குறியீடு என்பது தனிநபர் கார்பன் உமிழ்வு மற்றும் ஒரு நாட்டில் குழந்தைகள் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழும் திறனுடன் தொடர்புடையது.

| தரவரிசை | நிலைத்தன்மைக் குறியீடு | குழந்தை செழுமையின் குறியீடு |
|---|---|---|
| **1** | புருண்டி (BURUNDI) | நார்வே (NORWAY) |
| **2** | சாட் (CHAD) | கொரியக் குடியரசு |
| **3** | சோமாலியா (SOMALIA) | நெதர்லாந்து (NETHERLANDS) |
| **178** | குவைத் (KUWAIT) | சோமாலியா (SOMALIA) |
| **179** | டிரினிடாட் மற்றும் டொபாகோ | சாட் (CHAD) |
| **180** | கத்தார் (QATAR) | மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு |

## இயற்கைத் தரவரிசைக் குறியீடு – 2020

- இயற்கைக் குறியீடு (NATURAL INDEX) அமைப்பானது 2020 ஆம் ஆண்டின் இயற்கைக் குறியீட்டுத் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- 2018 டிசம்பர் முதல் 2019 நவம்பர் வரை நிறுவனங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் இத்தரவரிசை அமைந்துள்ளது.
- எண்களின் மொத்த மேற்கோளும் மற்றும் ஒரு கட்டுரைக்குக் கிட்டும் பகிர்வு சதவீதத்தைப் பொருத்தே இவ்வாராய்ச்சியின் முடிவு அமைந்துள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழு (CSIR - Council of Scientific and Industrial Research) குறியீட்டில் முதலிடத்தில் உள்ளது.
- பெங்களூருவின் இந்திய அறிவியல் நிறுவனம் (IISC - Indian Institute of Science) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- மூன்றாவது இடத்தை மும்பையில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (TIFR – Mumbai ) பிடித்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★